விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 27 புதன்கிழமை (10.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 142

# முல்லைத்தீவின் வறுமைக்கு முப்படையினரும் காரணம்!

## உறுப்பினர் ரவிகரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் வறுமையால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் இருப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வளமான காணிகளையும் வளங்களையும் முப்படையினர் கையகப்படுத்தி வைத்திருக்க, மக்கள் சொந்த நிலத்தில் அகதி வாழ்க்கை வாழ்வதே காரணம் என சுட்டிக்காட்டியுள்ளார். மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் படைத் தரப்பினர் சுவீகரித்தும் ஆக்கிரமித்தும் வைத்திருக்கின்ற பொது மக்களின் காணிகளையும் வளங்களையும் விடுவித்தால் வறுமை ஒழிப்புக்கான உதவித்திட்டமே அவசியமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க...

## வெசாக் பண்டிகை நிகழ்வு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இன்று பௌத்த-சிங்கள மக்களினால் கொண்டாடப்படும் வெசாக் பண்டிகை தினமாகும். இதனை ஒட்டி நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதில் முதற்கட்டமாக அரச வெசாக் தின நிகழ்வுகள் நேற்று கேகாலையில் ஜனாதிபதி

04 ஆம் பக்கம் பார்க்க...

## பலாலி விமான நிலையம் காணி சுவீகரிப்பின்றி முன்னெடுக்க தீர்மானம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.பலாலி விமான நிலையத்திற்காக மேலதிகமாக மக்களுடைய காணிகளை சுவீகரிக்காமல் அதனை பிராந்திய விமான நிலையமாக புனரமைப்பு செய்யவும், காங்கேசன்துறை துறைமுகத்தை பாரியளவில்

04 ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கில் இராணுவ தரப்பால் சிங்கள-பௌத்த மயமாக்கல்

### த.தே.ம.முன்னணி சாடல்




(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தினால் தமிழின படுகொலை நிகழ்த்தப்பட்டு எட்டு வருடங்களாகியும் நீதி கிடைக்காத நிலையில், அதனை மூடி மறைப்பதற்கும் சிங்கள மயமாக்கலுக்காகவுமே வடக்கில இராணுவத்தினர் பெரும் எடுப்பில் வெசாக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடை

23 ஆம் பக்கம் பார்க்க...

## சபை அமர்வில் பங்கேற்க விடாது வடக்கு மாகாண முதல்வரை தடுத்து நின்ற பட்டதாரிகள்!



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை அமர்வில் பங்கு கொள்ளச் சென்றிருந்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை, போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வடக்கு பட்டதாரிகள் மாகாண சபைக்குள் செல்லவிடாது தடுத்தமையால் முதலமைச்சர் சபை அமர்வில் பங்குபற்றாது திரும்பியுள்ளார். இதனால் நேற்றையதினம் வட

23 ஆம் பக்கம் பார்க்க...

## சொந்த மண்ணில் கால்பதிக்க இறுதிவரை போராடுவோம்

### கேப்பாப்பிலவு மக்கள் உறுதி




(பனிக்கன்குளம்)

கடும் வெயில் மற்றும் மழைக்கு மத்தியில் தெருவோரத்தில் காத்திருக்க வேண்டிய நிலைக்கு தாம்

24 ஆம் பக்கம் பார்க்க...

## பதிவுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு கிரவல்மணல் அனுமதி முறைமை

### வடக்கு சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள மணல் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கிரவல் மணல் எடுப்பதற்கு ஏதுவாக வழங்கப்பட்டு வந்த நடைமுறையைத் தொடர்ந்தும் பேண வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் மத்திய அரசின் கனியவள அமைச்சரையும்

23 ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

வேகமாக பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் அடுத்த வாரம் கலந்துரையாடவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு நோய் தாக்கம் தற்போது அதிகரித்து

23 ஆம் பக்கம் பார்க்க...

## அதிகாரமில்லாத எம்மிடம் வாக்குறுதி பெற முயற்சி!

### பட்டதாரிகள் குறித்து முதல்வர் விசனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் அதிகாரமில்லாத எம்மிடம் வாக்குறுதியை பெறுவதற்கு முயற்சிக்கின்றார்கள். எம்மால் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு வேலை வழங்க முடியாது என்பது அவர்களுக்கு புரியவில்லை. பொது அலுவலரை கடமைக்கு செல்லாமல் இடையூறு விளைவித்தமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் அவர்களது விடா முயற்சிக்கு மதிப்பளித்தே அங்கிருந்து விலகி சென்றதாக வட

04 ஆம் பக்கம் பார்க்க...

## முள்ளிக்குளம் மக்களுக்கு காணி பதிவு நடவடிக்கை

(மன்னார்)

கடற்படையினரினால் கடந்த மாதம் 29 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட முள்ளிக்குளம் மக்களின் காணிகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் முசலி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்த குமார் தலைமையில் முள்ளிக்குளம் மக்களின் காணிகளை அடையாளப்படுத்தப்படும் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முள்ளிக்குளம் ஆலய வளாகத்தில் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதோடு, பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முள்ளிக்குளம் மக்களின் பூர்வீக நிலங்களில் முதற்கட்டமாக 100 ஏக்கர் காணிகளை கடற்படையினர் கடந்த மாதம் 29 ஆம் திகதி விடுவித்தனர்.

24 ஆம் பக்கம் பார்க்க...

## நடத்துநர் மீது தாக்குதல்!

(வவுனியா)

இலங்கை போக்குவரத்து சபை வவுனியாசாலை நடத்துநர் மீது இனந்தெரியாதவர்கள் சிலர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

24 ஆம் பக்கம் பார்க்க...

## துப்பாக்கி சூடு அதிகாரி பலி

(களுபோவில)

கொழும்பு பிலியந்தலை நகரில் உள்ள தனியார் வங்கி முன்பாக பொலிஸ் அதிகாரிகளை இலக்கு வைத்து நேற்று இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க...

## பொய்க்குற்றம் சுமத்தி சிறையில் வைத்துள்ளனர்

### அரசியல் கைதிகள் நீதிமன்றில் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

குற்றத்தை ஒப்புக்கொண்டால் மாத்திரமே வழக்கில் இருந்து விடுதலை பெற முடியும் என தெரிவித்ததனால், அவர்கள் கூறியதையே எமது வாக்குமூலங்களாக எழுதிக்கொடுத்தோம். அரச தரப்பு எம் மேல் பொய் குற்றம் சுமத்தி தான் எம்மை சிறையில்

24 ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதிக்கு நல்ல காலம்

(கொழும்பு)

மேதினத்திற்குப் பிறகு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பலம்பெற்று விட்டார்கள் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று

24 ஆம் பக்கம் பார்க்க...

# தன்னலம் இன்மையை மதிக்கும் சிறந்த பிரஜைகளாவோம்!

## அரச வெசாக் விழாவில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

மமதைக்கு பதிலாக தன்னலமின்மையை மதிக்கும் ஒழுக்கமான, சிறந்த நாட்டு பிரஜைகளாக முன்னேறுவதற்கு இந்த உன்னதமான வெசாக் காலத்தில் அனைவரும் பிரார்த்திக்க வேண்டுமென ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பிற்பகல் கேகாலை வட்டாரம அரகந்த மலியதேவ விகாரையில் நடைபெற்ற அரச வெசாக் விழா 2017 நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய சமூகத்தில் பெற்றோர், பிள்ளைகள் உறவுகூட நாளாந்தம் சீர்குலைந்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, அவ்வாறான நிலை நாட்டில் உருவாவதற்கு காரணமான விடயங்களை பௌத்த தர்மத்தினைப் பின்பற்றும் குடிமக்கள் என்ற வகையில் மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள குறைந்த வசதிகளுடைய விகாரைகளை அபிவிருத்தி செய்து, அங்கிருக்கும் பிக்குமாரின் தேவைகளை நிறைவு செய்வதற்காக கடந்த 02 ஆண்டுகளில் பெருமளவு நிதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி,

தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு மட்டும் கோடிக்கணக்கில் வழங்கும் கொள்கையிலிருந்து விடுபட்டு எதிர்காலத்திலும் இந்த நிதியை நியாயமாக விகாரைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு வழங்க திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அரச வெசாக் விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் ஞாபகார்த்த முத்திரை அமைச்சர் ஏ.எச்.எம்.ஹலிமினால் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது.

"கேகலு வருண" வெசாக் சஞ்சிகை கேகாலை மாவட்ட செயலாளர் எல்.ஜே.எம்.பி. சந்திரசிறியால் ஜனாதிபதியிடம் வழங்கி வைக்கப்பட்டது. அரச வெசாக் விழாவோடு இணைந்ததாக கேகாலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள் அடங்கிய இறுவெட்டு பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் நிமல் கொட்டவலகெதறவால் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது.,

கேகாலை மாவட்ட விகாரைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கான உதவிகளை வழங்குவதன் அடையாளமாக 06 காசோலைகள் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டது.

வணக்கத்துக்குரிய வறகாகொட ஞானரத்ன தேரர், கலாநிதி வண.நியங்கொட விஜதசிறி தேரர், வண.கோணதூவே குணாநந்த தேரர், வண.கம்முல்லே ஸ்ரீ சுமங்கல தேரர் உள்ளிட்ட மதகுருமார்களும் சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர்களான விஜேதாச ராஜபக்ஷ, கபீர் காசிம், ரஞ்சித் சியாம்பலபிட்டிய, தயா கமகே, பிரதி அமைச்சர் துஸ்மந்த மித்ரபால உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் புத்த சாசன அமைச்சின் செயலாளர் சந்ரசோம கமகே உள்ளிட்ட அலுவலர்களும் பெருமளவு பக்தர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(சி-8521)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## விவசாயப் பட்டதாரிகள் யாழில் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

காலத்தின் தேவை கருதி விவசாயத்தின் நீடித்த பொருளாதார வளர்ச்சி பற்றிய நோக்குக்காக "வட மாகாணத்தில் விவசாயத் துறையில் விவசாய பட்டதாரிகளின் வகிபங்கு" எனும் தொனிப்பொருளில் பெரும் ஒன்றுகூடலை எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அழிந்து வரும் விவசாயத் துறையின் மீள் எழுச்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டதாரிகள் அனைவரையும் இவ் ஒன்றுகூடலில் கலந்து சிறப்பிக்குமாறு ஒருங்கமைப்பு குழு கேட்டுக் கொண்டுள்ளது. (செ)

## அமைச்சர் விஜயகலாவின் தாயார் நேற்று காலமானார்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் தாயார் திருமதி மார்க்கண்டு இராசம்மா நேற்றைய தினம் காலமானார்.

காரைநகர் களபூமி, கல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்ண்டு இராசம்மாவின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் வண்ணை. கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறவுள்ளது. (செ–4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பெயர்மாற்றம்


நீர்வேலி மேற்கு நீர்வேலி எனும் முகவரியைக் கொண்ட நான் இதுவரை காலமும் எனது பெயரை முத்து – விபூசனர் என பாவித்து வந்தேன். இன்று தொடக்கம் எனது பெயரை **முத்தன் – விபூசணன்** என சகல ஆவணங்களிலும் பாவிப்பேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**முத்தன் – விபூசணன்**
(8979) **10.05.2017**

# மரண அறிவித்தல்

திருமதி

## இராசம்மா மார்க்கண்டு



காரைநகர், களபூமி கல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் இல.83/9, தஞ்சி ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசம்மா மார்க்கண்டு அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (09.05.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு (வையாபுரி) - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமு - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற கனகரட்ணம், காலஞ்சென்ற விஜயரட்ணம், சரஸ்வதி, காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற பூபாலசிங்கம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்கையர்க்கரசி, சிறீநாதன், மகேஸ்வரி, தனலட்சுமி, சரஸ்வதி, சிறீதரன், விஜயகலா ஆகியோரின் அன்புத் தாயாரும் தில்லைநாதன், காலஞ்சென்ற கங்காதேவி மற்றும் கௌரிதேவி, கிருபானந்தம், யோகநாதன், காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதன், ஷர்மினா, நிவாசினி, பவதாரணி, பிரணவன், பவித்திரா, திவ்வியா, சிவகஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சேஷ்தரெனின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான நடராஜா, திருமதி மங்கையர்க்கரசி, திருமதி சரஸ்வதியம்மா, பரமசாமி, தம்பிப்பிள்ளை, கணேசபிள்ளை மற்றும் திருமதி சிவஞானம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2017) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ப. மார்க்கண்டு (கணவர்)
தொ.பே: 021 - 222 1983

(C-8529)

# கழிவு முகாமைத்துவத்திலுள்ள தடைகளை உடன் அகற்ற வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை



கழிவு முகாமைத்துவத்திற்கான எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட வேண்டிய விசாரணை அறிக்கையை துரிதமாக வழங்குமாறு கூறிய ஜனாதிபதி பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பொலித்தீன் வகைகளை தடை செய்தல் தொடர்பான புதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரிக்குமாறும் உரிய துறையினருக்கு ஆலோசனை வழங்கினார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி ஆணையாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

கழிவு முகாமைத்துவத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் மற்றும் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்பட்ட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக சகல உள்ளூராட்சி ஆணையாளர்களும் ஜனாதிபதியால் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு மாகாணங்களிலும் கழிவு முகாமைத்துவத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அந்தந்த மாகாணங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி ஆணையாளர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை வகுப்பதற்குரிய ஆலோசனைகளை முன்வைக்குமாறு சகல அமைச்சுக்களுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

புத்தளம், அறுவக்கலு பிரதேசத்தில் குப்பைகளை புதைப்பதற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்தவும் ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி அவர்கள், அதற்குரிய விசாரணை அறிக்கையை விரைவில் தனக்கு சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை இலங்கையில் உள்ள குப்பை மேடுகள் பற்றிய பூரண அறிக்கை தற்போது தயார் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப 200 குப்பை கொட்டும் இடங்கள் நாடு பூராகவும் காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது. அவற்றுள் 25 இடங்கள் மேல் மாகாணத்தில் காணப்படுவதுடன் மொத்தமாகவுள்ள 200 குப்பை மேடுகளுள் 20 குப்பை மேடுகளில் பிரச்சினைகள் காணப்படுவதாக தெரிய வருகிறது. (இ-3)

## தென் மாகாண சபையில் நேற்று அசாதாரண நிலை

(கொழும்பு)

தென் மாகாண சபையில் நேற்று கடும் விவாதங்கள் இடம்பெற்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குறைக்கப்பட்டமை தொடர்பிலேயே கூட்டு எதிர்க்கட்சியினர் சில கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இந்த நிலையில் கூட்டு எதிர்க்கட்சியினரின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மாகாண சபையை விட்டு வெளியேறியுள்ளனர். (இ-7)

## தாயகம் திரும்பிய 16 இலங்கையர்கள்

இந்திய முகாம்களிலிருந்து இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர் என சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய முகாம்களிலிருந்து 16 இலங்கையர்களே இவ்வாறு இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குறித்த இலங்கையர்களை சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் வரவேற்றுள்ளனர்.

இதேவேளை,கடந்த இரண்டு வாரங்களாக இந்திய முகாம்களில் புலம்பெயர்ந்த 56 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது புலம்பெயர்ந்தவர்களே இவ்வாறு தற்போது தாயகம் திரும்பி வருகின்றனர்.

நாடு திரும்பும் புலம்பெயர் இலங்கையர்களுக்கான விமானப் பயணச் சீட்டு மற்றும் உணவு ஆகிய செலவுகளை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறு நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு மீள்குடியேற்ற வசதிகளை சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொஸ்கொட லொக்கு துப்பாக்கிச் சூட்டில் பலி

பாதாள உலகக் குழு உறுப்பினர் கொஸ்கொட லொக்கு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். களுத் துறை, வெலிப்பன பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள் ளது. இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றைய நபர், சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் களுத்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## சைட்டம் தொடர்பான மனு பிற்போடப்பட்டது

(கொழும்பு)


மாலபே சைட்டம் தனியார் நிறுவனம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளுக்கு எதிராக இலங்கை மருத்துவ சபை தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் 31ஆம் திகதி வரை பிற்போடுவதற்கு உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த மனுவை ஆராய்வதற்காக திகதி வழங்குமாறு சட்டமா அதிபர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த அரச தரப்பு சட்டத்தரணி கேட்டுக் கொண்டதற்கிணங்க உச்ச நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

இதேவேளை சைட்டம் தொடர்பான பிரச்சினையை தீர்க்க வேண்டுமாயின் நீதிமன்ற பொறிமுறைக்கு செல்ல வேண்டும் என்றும் அதற்காக அப்பாவி பொது மக்களை பலிக்கடாவாக ஆக்கிக் கொள்ளக் கூடாது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி கூறியுள்ளார்.

நேற்று சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

## அனிருத்த பாதனிய ரஞ்சனின் கடனாளி



அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனிருத்த பாதனிய பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் கடனாளி என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை மீள கொண்டுவந்து அதனூடாக பாராளுமன்றத்தில் ஆசனமொன்றை கைப்பற்றிக் கொள்வதற்கானதே அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் சைட்டத்துக்கு எதிரான தொழிற்சங்கப் போராட்டம் என புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சமல் செனவிரட்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மோடியின் விஜயம் யாத்திரை போன்றது

## இந்தியத் தூதுவர் தரண்ஜித் தெரிவிப்பு

(டில்லி)



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தில் எந்த பொருளாதார நோக்கங்களும் இருக்காது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

ஐ.நா வெசாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் நாளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கங்காராமய வெசாக் வலயத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து இந்தியப் பிரதமர் திறந்து வைப்பார் எனவும் இந்திய தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமரின் இந்தப் பயணம் ஒரு யாத்திரை போலவே இருக்கும் எனவும் தரண்ஜித் சிங் சந்து தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை தனிப்பட்ட முறையில் இராப்போசன விருந்து அளிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிரதான வெசாக் நிகழ்வுகளில் பங்கேற்கும் பிரதமர் நரேந்திர மோடி, டிக்கோயாவில் வைத்தியசாலை ஒன்றை திறந்து வைப்பதற்காக செல்லவுள்ளார்.

இதன்போது மலையகத் தமிழர்களைச் சந்தித்து பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து கண்டிக்குச் செல்லும் இந்தியப் பிரதமர், அஸ்கிரி, மல்வத்து பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர், டில்லி திரும்புவார்" என்று இந்திய தூதுவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# ஐ.பி.எல் - 2017 சீசனில் மோசமான ஆட்டத்திற்காக ஆர்.சி.பி. ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்ட ஹோலி



ஐ.பி.எல். தொடர் 2017இல் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதற்காக ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுள்ளார் விராட் ஹோலி.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதனால் பிளேஓஃப் சுற்றுக்கு தகுதி பெற்றது. பிளேஓஃப் சுற்றில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இறுதிப் போட்டியில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியிடம் தோல்வியடைந்தது.

ஆனால் தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். 2017 சீசனில் மிகமிக மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு இரண்டிலும் சொதப்பியது. இதுவரை விளையாடியுள்ள 13 போட்டிகளில் இரண்டில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. கொல்கத்தா அணிக்கெதிராக 49 ஓட்டங்களில் சுருண்டு மிகவும் மோசமான சாதனையை பதிவு செய்தது.




14ஆம் திகதி (வருகிற ஞாயிற்றுக்கிழமை) டெல்லி அணிக்கெதிராக விளையாட இருக்கிறது. இதில் வெற்றி பெற்றாலும் எந்த தாக்கமும் ஏற்படப்போவதில்லை. புள்ளிகள் பட்டியலில் கடைசி இடத்தை பிடித்துள்ளது.

மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதற்காக அணியின் தலைவர் என்ற முறையில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி ரசிகர்களிடம் விராட் ஹோலி மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் "எந்தவொரு நிபந்தனையும் இல்லாத அன்பையும், ஆதரவையும் அளித்த ரசிகர்களுக்கு நன்றி. மன்னிக்கவும், நம்முடைய தரத்திற்கு ஏற்ற வகையில் தரமான கிரிக்கெட்டை நாங்கள் விளையாடவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் ஆர்.சி.பி. அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான டி




வில்லியர்ஸ் தனது டுவிட்டரில் "ஐ.பி.எல். 2017 ஏமாற்றம். சில கடினமான பாடங்களை கற்றுக்கொண்டு, அதை அடுத்த சீசனுக்கு எடுத்துச் செல்வோம். சம்பியன்ஸ் தொடருக்கு முன் எனது அணி வீரர்களுடன் இணைவது மகிழ்ச்சி" என்று தெரிவித்துள்ளார்.

# தென்னாபிரிக்க வீரர்கள் நாடு திரும்பியதால் ஐ.பி.எல். இல் சில அணிகளுக்கு பின்னடைவு



தென்னாபிரிக்க வீரர்கள் சொந்த நாடு திரும்பியுள்ளதால் ஐ.பி.எல். தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப், ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணிகளுக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய பிரிமீயர் லீக் (ஐ.பி.எல். சீசன்-10) இருபது - 20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. தென்னாபிரிக்காவின் 8 வீரர்கள் இந்த ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்று வந்தனர். அம்லா, டேவிட் மில்லர் பஞ்சாப் அணியிலும், கிறிஸ் மோரிஸ், காகிசோ ரபாடா டெல்லி அணியிலும், டு பிளிசிஸ், இம்ரான் தாஹிர் புனே அணியிலும், டி வில்லியர்ஸ், ஷம்சி ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியிலும் இடம்பிடித்திருந்தனர்.


அம்லா, இம்ரான் தாஹிர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். அம்லா இரண்டு சதங்களும், தாஹிர் 12 போட்டியில் 18 விக்கெட்டுக்களும் வீழ்த்தியுள்ளார்.

இங்கிலாந்தில் வருகிற 1ஆம் திகதி தொடங்கும் சம்பியன்ஸ் டிராபி தொடருக்காக தென்னாபிரிக்கா அணி தயாராகிறது. இதனால் இந்த 8 பேரையும் வரவழைத்துள்ளது. மீதமுள்ள போட்டியில் விளையாடுவதற்கு இந்திய கிரிக்கெட் வாரியம் கேட்டுக்கொண்ட போதிலும், தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரியம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

பஞ்சாப் அணி இனி விளையாட இருக்கும் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளது. இந்நிலையில் அம்லா இல்லாதது அந்த அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தும். அதேபோல் புனே அணியின் வெற்றிக்கு தாஹிர் முதுகெலும்பாக இருந்தார். அவர் இல்லாதது புனே அணிக்கு பெரிய பாதிப்பாகும்.

## கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணம்

### சென்றலைட்ஸை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு யாழ். ஜொனியன்ஸ் அணி தகுதி பெற்றது



கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் 24ஆவது வருடமாக நடாத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 25ஆவது போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணி, சென்றலைட்ஸ் அணியை ஒரு இலக்கால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ற லைட்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களை பெற்றனர். அவன்ராஜ் 11, டார்வின் ஆட்டமிழக்காது 76, நிரோஜன் 11, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிருந்தா 4, கஜீபன 3, சண்சஜன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 28.1 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களை பெற்றனர். அன்புஜன் 22, றஜீன்தன 20, லவேந்திரா 22, கெரால்ட 25, பிருந்தாபன் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெரிக் 3, வதுஸன் 2, மயூரன 2, டார்வின் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர் இப்போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.ஜொனியன்ஸ் அணி 14/05/2017 ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கும் கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதிப்போட்டியில் திருநெல்வேலி சி.சி அணியை எதிர்கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 8அவது ஆண்டாக நடாத்தி வரும் தரவரிசை பட்டியலுக்கு யாழ். ஜொனியன்ஸ் அணி 5.42 புள்ளிகளையும், சென்றலைட்ஸ் அணி 2.31 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## காணி சுவீகரிப்பி ...

விஸ்தரிப்பு செய்யவும் இலங்கை அரசாங்கம் மற்றும் இந்திய அரசாங்கங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கேரி வடமாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் 92வது அமர்வு பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நேற்று நடைபெற்றிருந்தது. இதன்போது மாகாண சபை அவை தலைவர் சீ.வி.கே. சிவஞானம் மேற்படி பிரேரணையை பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணையாக சபைக்கு முன்மொழிந்தார். பிரேரணையை முன்மொழிந்து அவை தலைவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடமாகாண சபையின் முன்னைய 6வது அமர்வில் நிறைவேற்றப்பட்ட 71வது தீர்மானத்தின்படி பலாலி விமானத்தளம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை புனரமைக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய பலாலி விமான நிலையத்தை மேலதிக காணி சுவீகரிப்பு எதுவும் இல்லாமல் ஒரு பிராந்திய விமான நிலையமாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அதேபோல் காங்கேசன்துறை துறைமுகத்தையும் பாரியளவில் புனரமைப்பு செய்யவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் நியாயமாக எடுக்கவேண்டும் என அவை தலைவர் கூறினார். இந்நிலையில் குறித்த பிரேரணை சபையில் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு அனுப்பி வைக்கவும் தீர்மானிக் கப்பட்டிருக்கின்றது. (செ-4)

## அதிகாரமில்லாத ...

க்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். மாகாண சபை முன்பாக நேற்றைய தினம் பட்டதாரிகளின் போராட்டம் நடைபெற்றது. இதன்போது நடைபெற்ற குழப்பங்கள் தொடர்பில் முதலமைச்சர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிடுகையில்.

இன்று (நேற்று) காலை 9.30 மணியளவில் வடமாகாண சபைக் கூட்டத்திற்கு நான் சென்ற போது வேலையற்ற பட்டதாரிகள் எனக் கூறப்பட்ட பல இளைஞர், யுவதிகள எமது வடமாகாண சபை மற்றும் முதலமைச்சரின்அமைச்சுக் காரியாலயங்களின் முன் வாயிற் கதவுகளை அடைத்து பெருவாரியாக நின்று கொண்டிருந்தார்கள். வடமாகாண சபையின் பக்கமாக செல்லும் பாதையிலும் வாயிற் கதவடைத்து கூட்டம் நின்றது. நான் வாகனத்தில் இருந்து இறங்கிச் சென்று அவர்கள் குறைகளைக் கேட்டறிந்தேன். ஏற்கெனவே அவர்களுடன் நான் பேசிய விடயங்கள் தான் அவை. வேலையில்லாப் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை வேண்டும் என்று கேட்டார்கள்.

அண்மையில் முதலமைச்சர் மகாநாட்டின் போது ஜனாதிபதி அவர்கள் வடகிழக்கு மாகாண முதலமைச்சர்களுக்குக் கொள்கை ரீதியாக அளித்த வாக்குறுதியை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். ஜனாதிபதி கிழக்கு மாகாணத்தில் நாலாயிரத்திற்கும் மேலான பட்டதாரிகளுக்கு வேலை கொடுத்துவிட்டார் எமக்குக் கிடைக்கவில்லை என்ற ரீதியில் குறைபட்டுக் கொண்டார்கள். அவர்களின் புரியாமையை அவர்களுக்கு எடுத்து விளக்கினேன். ஜனாதிபதி வடகிழக்கு மாகாணங்கள் இரண்டும் சம்பந்தமாகவே அவ்வாறான வாக்குறுதியை வழங்கினார் என்பதை எடுத்துக் காட்டினேன். பத்திரிகைச் செய்திகளோ ஒரு மாகாணத்திற்கு வேலை வாய்ப்பு கொடுத்துள்ளதாகவும் மற்றைய மாகாணத்தை புறக்கணித் துள்ளதாகவும் அமைந்திருந்ததைச் சுட்டிக்காட்டினேன்.

அன்றைய தினம் (06.05.2017) முதலமைச்சர்கள் எல்லோர் முன்னிலையிலும் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் வடகிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் விரைவில் வேலை வாய்ப்பைக் கொடுப்பதாகக் கூறியதைத் தெரிவித்தேன். அதற்கு அவர்கள் வடமாகாணசபை அவைத் தலைவர் தமக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அதே இடத்தில் வைத்து வாக்குறுதி அளித்ததை நினைவுபடுத்தி ஏன் இதுவரை அந்த வாக்குறுதி செயற்படுத்தப்படவில்லை என்று கேட்டார்கள். அதற்கு நான்மாகாணசபையுடன்தொடர்புடைய யார் என்ன சொன்னாலும் தீர்மானம் எடுக்க வேண்டியது மத்திய அரசே என்று கூறி அதனால்த் தான் நாங்கள் இப்பொழுது மத்திய அரசுடன் பேசி வருகின்றோம் என்பதைத் தெளிவுபடுத்தினேன். எமது மாகாணசபையில் மொத்தமாக பட்டதாரிகளுக்கு 1171 வெற்றிடங்கள் இருப்பதையும் இங்குள்ள மத்திய அரசின் மாகாண திணைக்களங்களில் 329 வெற்றிடங்கள் இருப்பதையும் மொத்தம் 1500 பேர்களுக்கு உடனேயே வேலை வாய்ப்பைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளதை அவர்களுக்கு விளக்கினேன்.

மேலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு அவர்களை இணைப்பது பற்றியும் பேசப்பட்டது என்று அறிவித்தேன். அத்துடன் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் வெற்றிடங்கள் பல இருப்பதை ஜனாதிபதிக்கு எடுத்துக் காட்டியபோது அந்த வெற்றிடங்களை உடனே நிரப்ப நடவடிக்கைகள் எடுப்பதாகக் துமிந்த திசாநாயக்க விவசாய அமைச்சர் வாக்குறுதி அளித்தார். இவற்றை எல்லாம் இளைஞர், யுவதிகளுக்கு எடுத்துச் சொல்லியும் தமக்கு வேலைகள் கிடைப்பது சம்பந்தமாக எமது உத்தரவாதங்களைப் பெறவே அவர்கள் முயன்றனர். உத்தரவாதங்களை நாம் தரமுடியாதென்றும் மத்திய அரசாங்கமே அவற்றைத் தரமுடியும் என்ற போது சில இளைஞர்கள் யுவதிகள் அதட்டலாக எம்மை அவ்வாறான உத்தரவாதத்தைத் தருமாறும் இல்லையேல் அவ்விடத்தில் இருந்து அசைய மாட்டோம் என்றும் கூறினார்கள். "என்னால் கூறக் கூடியதை நான் கூறிவிட்டேன்.

. மிகுதியை ஜனாதிபதியுடன் அடுத்த வாரம் பேசிய பின் கூற முடியும்" என்று கூறிவிட்டு உள்ளே செல்ல எத்தனிக்கையில் வாயிற் கதவுகளுக்கு அவர்களே சங்கிலி போட்டு பூட்டும் இட்டுத் திறப்பை அவர்கள் வைத்திருக்கின்றார்கள் என்று தெரியவந்தது. திறக்குமாறு கேட்டபோது எவரும் முன்வரவில்லை. எனது பாதுகாப்புப் பொலிஸார் பூட்டை உடைத்து உள்ளே செல்ல நடவடிக்கை எடுக்கலாமா என்று கேட்டார்கள். அத்துடன் ஒரு பொது அலுவலரை தனது கடமைக்குச் செல்லாமல் தடுப்பது குற்றம் என்றும் அது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்க பொலிஸ் அவர்களுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவா என்றும் கேட்டார்கள். நான் அவர்களைக் கட்டுப்படுத்தி வேலையற்ற பட்டதாரிகள் சுமார் இரண்டுமாத காலமாக வேலை வேண்டும் என்று போராடி வரும் அவர்களின் விடாமுயற்சிக்கும் அவர்களின் உண்மையான பிரச்சினைக்கும் மதிப்பளித்து அங்கிருந்து அகன்று விட்டேன்.

ஆனால் அவர்களின் போராடடம் கொழும்பில் ஜனாதிபதி காரியாலயத்தின் முன்னரோ பிரதமர் அலுவலகத்தின் முன்னரோ தான் நடைபெற வேண்டும். வெறும் சிபார்சு செய்யும் "அதிகாரம் கொண்ட எங்களால் வேலைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது. வேலை பெற்றவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் போகும் மத்திய அரசாங்கமே அதைச் செய்யவேண்டும். அண்மையில் முதலமைச்சர்கள் மாநாட்டின் போது எம் பலதரப்பட்ட மக்கள் செய்து வரும் தொடர் போராட்டங்கள் பற்றி பிறமாகாண முதலமைச்சர்கள் முற்றிலும் அறியாமல் இருந்தமை எந்தளவுக்கு நாங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம் என பதை உணர வைத்தது. விரைவில இளைஞர் யுவதிகளின் பிரச்சினைகள் தீர இறைவன் வழி வகுப்பானாக! என முதலமைச்சரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்ப்பட்டுள்ளது. (செ-4)

## வெசாக் பண்டி ...

மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றுள்ளது. 2561 ஆம் தடவையாக நாட்டில் இடம்பெறும் வெசாக் தின நிகழ்வுகள் நேற்று பிற்பகல் 2 மணிக்கு கேகாலை வட்டாரம அரஹத்த மலியதேவ விகாரையில் நடைபெற்றிருந்த நிலையில், அரச வெசாக் வாரம் நேற்று முன் தினம் மலியதேவ விகாரையில் மத வழிபாட்டு நிகழ்வுகளுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு தொடர்ச்சியாக நிகழ்வுகள் நடைபெறும் எனவும் பௌத்த விவகார ஆணையாளர் நாயகம் நிமால் கொட்டபொலகெதர ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். இதே வேளை, நாளை மறுதினம் பன்னிரண்டாம் திகதி சர்வதேச வெசாக் பௌர்ணமி நிகழ்வுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும்

## இயல் இசை நாடக அரங்கு 2017

10.05.2017
முதலாம் நாள் புதன்கிழமை



இடம் :- இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கம்
காலம் :- 10.05.2017 - 14.05.2017
நேரம் :- பிற்பகல் 4.30 மணி

தலைவர் திரு அ.பௌநந்தி
(விரிவுரையாளர்- கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

பிரதம விருந்தினர்
நாட்டிய வாரிதி ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வராஜா
(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம் வலயம்)

நாச்சிமார் கோவிலடி சிவதாஸ்
பிரபாகரன் குழுவினர் வழங்கும்

**மங்கல இசை**

நாதஸ்வரம்
ஈழ நல்லூர் நாதஸ்வர வித்துவான்
P.S. ஜெயசங்கர்
நாதஸ்வர இளவரசன், கான கலா வித்தகன்
P.S.B. சாரங்கன்

தவில்
லயஞான சிரோன்மணி
சிதாஸ் பிரபாகரன்
கல்வியங்காடு தவில் வித்துவான்
சந்திரன்

மங்கல விளக்கேற்றல்
திருமுறை ஓதுதல் :- செல்விகள் ப.சகிஸ்சனா, ப.மதுஷனா
(சாரங்க இசை மன்ற மாணவிகள்)
ஆசியுரை :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(முதல்வர் நல்லை ஆதீனம்)
வாழ்த்துரை :- திரு.வை.இரகுநாத முதலியார்
(அறங்காவலர் - நீராவியடி பிள்ளையார் கோவில்)
தலைமையுரை :- தலைவர்



சைவ வித்தியா விருத்திச் சங்க சைவ
சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும்

**வரவேற்பு நடனம்**
நட்டுவாங்கம் :- திருமதி.யாழினி ரதீஸ்வரன்
பாட்டு :- திருமதி.வத்சலா கருணாகரன்
வயலின் :- திருமதி.இந்துமதி தயாபரன்
மிருதங்கம் :- திரு T.சிவகுமார்.

**இசைக் கச்சேரி**
பாட்டு :- செல்வி சிவநாதன் மதுஜா
வயலின் :- திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் :- திரு நல்லை. க.கண்ணதாஸ்

கலாநிதி சைலஜா குமாரசாமியின் மாணவிகள் வழங்கும்
**நாட்டிய அளிக்கை**
நட்டுவாங்கம் :- கலாநிதி.சைலஜா குமாரசாமி
பாட்டு :- அ.அமிர்தலோஜனன்
வயலின் :- திரு அ.ஜெயராமன்
மிருதங்கம் :- திரு நல்லை. க.கண்ணதாஸ்
புல்லாங்குழல் :- திரு க.தேசிகன்
கீபோர்ட் :- திரு எஸ்.மதுசங்கர்

• கலைஞர்கள் கௌரவிப்பு • பிரதம விருந்தினர் உரை

**வழக்காடு மன்றம்**
பொருள் : குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளைஞர்கள்

வழக்குத் தொடுப்போர்
திரு.இ.சர்வேஸ்வரா
(உதவிப் பதிவாளர் யாழ். பல்கலைக்கழகம்)
திரு.ஜெ.ரஞ்சித்குமார்
(சட்டத்தரணி)

மறுப்போர்
திரு.வே.சிவராஜா
(சமூக சேவைகள் உத்தியோகத்தர்)
திரு.ந.ஐங்கரன்
(நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)

நீதிபதி :
திரு ச.லலீசன்
(பிரதி அதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

அமரர் கீதாஞ்சலி V.K.நல்லையாவின் மாணவர்கள்
இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினருடன்
இணைந்து வழங்கும்
**பண்பாட்டு நடனங்கள்**
நட்டுவாங்கம் :- திருமதி. மங்கயற்கரசி மனோகர்
பாட்டு :- திரு.வர்ஜிகன் கமலநாதன்
செல்வி மதுஜா சிவநாதன்
கீபோர்ட் :- இசைக் கலைமணி திரு.ந.செல்வச்சந்திரன்
மிருதங்கம் :- திரு.க.நல்லை. கண்ணதாஸ்
ஜெண்டை :- திரு.செல்வரெட்ணம்
நன்றியுரை

கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

63,கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர்.

அனுமதி இலவசம்

Thadsha
84, Brown Road, Jaffna. 021 222 9713 / 077 338 3643
E-mail : thadshakannan@gmail.com
Fb : thadshabeautyparlor
www.thadshabeautyparlour.com


# அரச மரத்தை வெட்டுவதற்கான தடையுத்தரவு நீடிப்பு

(கொழும்பு)

பன்னிப்பிட்டி பிரதேசத்தில் உள்ள அரச மரம் ஒன்றை வெட்டி அகற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தீர்மானத்திற்கு உயர் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தடையுத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அரசமரத்தைவெட்டி அகற்றுவதற்கு எதிராக பௌத்த பிக்குகள் குழுவொன்று தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தது.

குறித்த மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அந்த தடையுத்தரவை ஜூன் மாதம் 13 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு நீதிபதிகள் குழாம் தீர்மானித்தது. (இ-7)


## ஏல விற்பனை

பாவனைக்கு உட்படுத்த முடியாத சில மரத்தினாலான பொருட்களும் வேறு சில பொருட்களும் 23.05.2017 அன்று முற்பகல் 11 மணி அளவில் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளன.

(8973)

அதிபர்
யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.



## வீடு உடனடி வாடகைக்கு

பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் ராஜா பிளாசா ஒழுங்கையில் (திருச்செல்வம் வீதி) புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட விசாலமான வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. (8974)

தொடர்புகளுக்கு
077 670 5196
077 216 3697


# முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்



## திருமதி.தயாவதி நவகுமாரன்

(சரசாலை தெற்கு, சாவகச்சேரி)

திதி : பூரணை (10.05.2017)



தயா எனும் நாமத்துடன்
தரணியிலே தரையிறங்கி
தாயெனும் கடமையை தளராது
நீ செய்தாய் - அன்னையே!
வருடமொன்று கடந்தாலும்
வார்த்தைகள் இல்லை - அம்மா
உனைப்போற்றி வணங்கிட தாயே!

மலர்வு : 01.07.1963
உதிர்வு : 21.04.2016

கடந்த 21.04.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(8929)

ந. நவகுமாரன்
17/45, பண்டாரக்குளம் மேற்கு வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# இராசி பலன்

10.05.2017
(சித்திரை 27, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
பூரணை பின்னிரவு 3.15 மணிவரை
சுவாதி பிற்பகல் 2.50 மணிவரை
சுபநேரம் 4.24 -5.54 மணிவரை
இராகுகாலம் 11.54 - 1.24 மணிவரை
சித்திர குப்த, சித்திரா பௌர்ணமி விரதம்,
வெசாக் பண்டிகை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | செவ் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரட்டாதி-ரேவதி | | |
| | | | ராகு |
| | சனி | சந் | குரு |

**மீனம்** உறவினர்கள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், குடும் பத்தினிடம் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மேடம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்ள வேண்டிய நாள், விருந்தினர் வருகையுண்டு, குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உடல் நலம் சீராகும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** வாகன சுகமுண்டு, பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும், புண்ணிய காரியத்தில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** நம்பிக்கைகள் நடைபெறதும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** வெளியாரால் பெருமைகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்** நண்பர்களினால் வளர்ச்சி கூடும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** பொது வாழ்வில் புகழ் கூடும், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், விரயங்கள் கூடும்.

**துலாம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், திடீர் பயணத்தால் நன்மையுண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு, மக்கள் போற்றும் வாழ்வமைய விக்னேஸ்வரனை வழிபட வேண்டிய நாள்.

## வடக்கு மாகாண சபை முன்பு

# அரச நியமனம் கோரி பட்டதாரிகள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

அரச நியமனத்தை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண பட்டதாரிகள் வடக்கு மாகாண சபை முன்பாக வாயிற் கதவுகளைப் பூட்டி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பட்டதாரிகளால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டம் நேற்றைய தினம் 72 ஆவது நாளாகவும் தொடர்ந்த நிலையிலேயே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. முன்னதாக காலை 9 மணியளவில் கைதடியில் அமைந்துள்ள மாகாண சபை முன்பாக கூடிய பட்டதாரிகள், வேலை கோரி போராட்டத்தில்ஈடுபட்டிருந்தனர்.

யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக இரவு- பகலாக மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ள வேலையற்ற பட்டதாரிகள் "வேலை கொடு வேலை கொடு உடனடியாக வேலை கொடு, உன் தேர்தல் வாக்குறுதி எங்கே? நாம் பட்டதாரிகள் இங்கே" உள்ளிட்ட பல்வேறு சுலோகங்களுடன் தமது போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் பட்டதாரிகளின் கோரிக்கைகளுக்கு இதுவரை உரிய தீர்வு முன்வைக்கப்படாத நிலையில், போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளவர்கள் வீதியிலேயே வாழ்ந்து வருகின்றனர்.



இது தொடர்பில் பட்டதாரிகள் கருத்து தெரிவிக்கையில், எமக்கு உரிய தரப்புக்களிடமிருந்து சாதகமான பதில் எவையும் வழங்கப்படவில்லை. வடக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரிடம் எமது கோரிக்கைகள் அடங்கிய கடிதங்களை கையளித்தோம். இந்தக் கடிதத்தில் வேலை வாய்ப்புத்தொடர்பான கோரிக்கையை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் எமது பிரதிநிதிகள் நேரடியாக தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு கோரிக் கடிதங்களை கையளித்துள்ளோம்.

அத்துடன் வடமாகாண முதலமைச்சர், அவைத் தலைவருக்கும் எமது பிரச்சினைகளைக் கடிதம் வாயிலாகத் தெரியப்படுத்தியுள்ளோம். யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து எமது கோரிக்கைகளை முன்வைப்பதற்கான ஒழுங்குகளை செய்து தருவதாக எங்களுடைய அரசியல் தலைமைகளாலும், அரசியல் வாதிகளாலும், வடக்கு மாகாண ஆளுநராலும் பொய்யான வாக்குறுதிகள் வழங்கப்பட்டு நாம் மிகவும் ஏமாற்றப்பட்டுள்ளோம்.


இதன் காரணமாகவும், வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதில் தொடர்ந்தும் இழுபறி நிலை நீடிப்பதாலும் , எம்மால் நிம்மதியாக உண்ணவும், உறங்கவும் முடியவில்லை எனத் தெரிவிக்கும் பட்டதாரிகள் தமக்கான பொருத்தமான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படாத காரணத்தால் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். எமது போராட்டம் இரண்டு மாதங்களுக்கு மேலாக தொடரும் நிலையில், எம்மை யாரும்கண்டு கொள்ளவில்லை.

இந்த நிலையிலேயே வடக்கு மாகாண சபை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் எனத் தெரிவித்தனர். பட்டதாரிகள் வடக்கு மாகாண சபையின் மூன்று வாயிற் கதவுகளையும்பூட்டியமையால் முதலமைச்சர் உட்பட பலர் மாகாண சபையின் அமர்வுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4-89)





படங்கள்- உ.சாளின்



## ஈழத்து நூல்கள் ஆவணவாக்கல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நூல் தேட்டம் நிறுவனமும் இணுவில் பொது நூலகமும் இணைந்து நடத்தும் ஈழத்து நூல்கள்ஆவணவாக்கல்எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இணுவில் பொதுசன சமூகக் கட்டடத்தில் இணுவில்பொது நூலக தலைவர் ஏ.கோமளன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டன் அயோத்தி நூலக சேவைகள் நிறுவுநர் நூலகவியலாளர் என். செல்வராஜா கலந்து கொள்வார். இந்நிகழ்வில் பேராசிரியர் க.தேவராசாவின் கலந்துரையாடல் இடம்பெறும். இந்த இரண்டாவது கலந்துரையாடலில் ஈழத்து நூல்களை ஆவணப்படுத்தும் பணியைச் செய்து வரும் நூலகவியலாளர் என்.செல்வராஜாவைக் கௌரவிப்பதோடு ஈழத்து எழுத்தாளர்களைச் சர்வதேச வலைப்பின்னலில் இணைத்துக் கொள்வது பற்றியும் கலந்துரையாடப்படும்.

இந்நிகழ்வில் பங்குபற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தங்கள் வருகையை 021 224 1930, 077 314 4906 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வல்வையின் இந்திரவிழா

வரலாற்று சிறப்பு மிக்க வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வல்வை மக்களால் நடத்தப்படும் வல்வையின் இந்திர விழா இன்று புதன்கிழமை இடம்பெறும். (இ-3)

## ஸ்ரீசுந்தர ஹனுமன் தீரம்

(யாழ்ப்பாணம்)

இணுவில்-மரு தனார் மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலய சுந்தர காண்ட மங்கல யக்ஞ நிகழ்வில் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை ''ஸ்ரீ சுந்தர ஹனுமன் தீரம்'' எனும் தலைப்பில் ஆன்மீக உரை இடம்பெற்று ஒரு மணிக்கு அன்னதானம் வழங்கப்படும் (இ-3)





## யோகா விழிப்பூட்டலும் புதிய பயிற்சி நெறியும்

யாழ்.யோகா உலகம் அமைப்பினால் யோகா விழிப்பூட்டலும் புதிய பயிற்சி நெறிகளும் நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ''யோகா நுணுக்கங்கள்'' எனும் தலைப்பில் கருத்துரையினையும் பயிற்சியினையும் யோகா போதனாசிரியர் வை.பிரசாத் வழங்குவார்.

மேலும் ''கம்பராமாயணத்தில் யோகம்'' எனும் தலைப்பில் மு/மாங்குளம் ம.வி.ஆசிரியர் கே.மங்களமூர்த்தி விசேட சொற்பொழிவாற்றுவார்.

யோகாசான மாணவர்களின் யோகாசனக் காட்சிப்படுத்தல் இடம்பெறவுள்ளதுடன் யோகா புதிய பயிற்சிகளுக்கான பதிவுகளும் இடம்பெறும். எனவே ஆர்வமுடையோர் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென யாழ். யோகா உலக அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## தேர்த்திருவிழா இன்று

சண்டிலிப்பாய்-சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை 10.30 மணிக்கு இடம்பெறும். நாளை வியாழக்கிழமை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (இ-3)

## இயல் இசை நாடக முதல் நாள் நிகழ்வு

இலங்கைவேந்தன்கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கு இன்று புதன்கிழமை முதல் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மாலை 4.30 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

முதலாம் நாளான இன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அ.பௌநந்தி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் நாட்டிய வாரிதி ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வராஜா கலந்து கொள்வார்.

நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையினையும்நீராவியடிப்பிள்ளையார் ஆலய அறங்காவலர் வை.இரகுநாத முதலியார் வாழ்த்துரையினையும் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனம், இசைக்கச்சேரி, கலாநிதி சைலஜா குமாரசாமியின் மாணவிகள் வழங்கும் நாட்டிய அளிக்கை என்பன இடம்பெறவுள்ளன.

மேலும் ''குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளைஞர்கள்'' எனும் பொருளிலான வழக்காடு மன்றம் இடம்பெறும். இதில் வழக்குத் தொடுப்போர்-யாழ். பல்கலைக் கழக உதவிப்பதிவாளர் இ.சர்வேஸ்வரா, சட்டத்தரணி-ஜெரஞ்சித்குமார், மறுப்போர்- சமூக சேவைகள் உத்தியோகத்தர் வே.சிவராஜா, நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர் ந.ஐங்கரன், நீதிபதி-கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். அமரர் கீதாஞ்சலி, வி.கே.நல்லையாவின் மாணவர்கள், இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினருடன் இணைந்து வழங்கும் பண்பாட்டு நடனங்கள்என்பனஇடம்பெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (இ-3)

## இளையோருக்கான இலவசக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க தகவல் கூடத்தினால் இளையோருக்கான இலவச கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புகைப்படக் கலை மற்றும் சமூக வலைத்தளங்கள் பற்றிய கற்கைநெறி (2 மாதம்), ஆங்கிலம் நெறிவூட்டல் பயிற்சி நெறி (3 மாதம்) ஆகிய கற்கைநெறிகள் இலவசமாக கற்பிக்கப்படவுள்ளன. புகைப்படக் கலை மற்றும் சமூக வலைத்தளம் பற்றிய கற்கை நெறிகள் சனி, ஞாயிறு காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை அமெரிக்க தகவல் கூடத்திலும் ஆங்கிலம் நெறிவூட்டல் பயிற்சிநெறி வியாழன், வெள்ளி மாலை 4 மணி முதல் 6 மணிவரையும் யாழ்.பொது நூலகத்திலும் இடம்பெறவுள்ளன.

கற்றைநெறிகளின் இறுதியில் அமெரிக்க தூதராலயத்தினால் சான்றிதழ் வழங்கப்படும்.

பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக இல. 23, அத்தியடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் (நாவலர் கலாசார மண்டபத்திற்கு அருகில்) எனும் முகவரியில் அமைந்துள்ள அமெரிக்க தகவல் கூடத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளவும். அல்லது 021 222 0665 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

41

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

20.08.2015 அன்று வலம்புரியில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம் தென்மராட்சி மக்களின் கோரிக்கையை பிரதிபலிப்பதாக இருந்தது. வேட்பாளர் அருந்தவபாலனின் கல்விப்புல நண்பர்கள் ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் வலம்புரியுடன்



தொடர்பு கொண்டு தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர். எனினும் குறித்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் அருந்தவபாலன் அவர்கள் அமைதியாகவே இருந்தார். அவரின் கல்விப்புல நண்பர் ஒருவர் அருந்தவபாலனுடன் தொடர்பு கொண்டு வலம்புரியில் வெளியாகிய குறித்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் உங்கள் கருத்தைப் பதிவு செய்தீர்களா? என்று வினவியதன் காரணமாக நான்கு நாட்களின் பின்னர் அந்த ஆசிரியர் தலையங்கம் குறித்த தனது மனப்பதிவை அருந்தவபாலன் அவர்கள் வலம்புரி ஆசிரியர் பீடத்தினருடன் பகிர்ந்து கொண்டார்.


இத்தகையதொரு மனப்பதிவை அவரிடமிருந்து வலம்புரி எதிர்பார்க்கவில்லையாயினும் தனக்காக எழுதப்பட்ட ஒரு விடயத்தில் அவர் கரிசனை கொள்ளாத போது மற்றவர்களின் விடயத்தில் கரிசனை கொள்வார் என்று நினைப்பதன் சாத்தியம் பற்றி வலம்புரிக்கு குழப்பம் ஏற்பட்டதாயினும் அதற்கு மேலாக, ஒருபெரும் எதிர்ப்பை வலம்புரி நிர்வாகம் எதிர் கொண்டது.

ஆம், 20.08.2015 அன்று மாவை.சேனாதிராசாவுக்கு ஓர் அன்புமடல் என எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் 21.08.2015 அன்று காலை 8 மணியளவில் வலம்புரியின் பிரதம ஆசிரியருக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அந்தத் தொலைபேசி அழைப்பை யாழ்ப்பாணத் தேர்தல் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராக நியமிக்கப்பட்டிருந்த முகமட் அவர்கள் எடுத்திருந்தார்.

வாக்குகளின் எண்ணிக்கையின் போது முறைகேடு நடந்தது போல நீங்கள் தொடர்ந்தும் செய்தி வெளியிடுகின்றீர்கள்.

நேற்றைய தினம் (20.08.2015) எழுதிய ஆசிரியர் தலையங்கத்திலும் அதுபற்றி பிரஸ்தாபித்துள்ளீர்கள் எனக் கூறினார். இதன் போது வலம்புரியின் பிரதம ஆசிரியர் மிகக் இறுக்கமான வார்த்தைகள் மூலம் தனது கருத்தை முகமட்டிடம் கூறிவைத்தார். அவ்வளவுதான். அதனோடு அந்தத் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

## தேர்தல் ஆணையாளரால் வலம்புரிக்கு அனுப்பப்பட்ட கடிதம்


මැතිවරණ දෙපාර්තමේන්තුව
தேர்தல்கள் திணைக்களம்

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426
web : www.slelections.gov.lk e-mail : info@slelections.gov.lk

මැතිවරණ මහලේකම් කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය (10107)
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

| | | |
|---|---|---|
| මගේ අංකය : எனது இல. DE/LI/04/01 | ඔබේ අංකය : உமது இல. | දිනය : திகதி 20.08.2015 |

(මෙම ලිපියේ සිංහල අනුවාදය සඳහා කරුණාකර පසු පිටුව බලන්න

தலைமை ஆசிரியர்,
வலம்புரி செய்திப் பத்திரிகை,
யாழ்ப்பாணம்.

மட்டுப்பாட்டுடன் கூடியது.
உரிமைப் பங்கமற்றது.

எதுவந்தாலும் அதைத் துணிவோடு எதிர்கொள்வது என்று வலம்புரி ஆயத்தமாகியது. எனினும் எதிர்பார்க்கமுடியாத அளவில் 21.08.2015 அன்று பிற்பகல் ஒரு மணி 58 நிமிட நேரத்தில் தேர்தல் திணைக்களத்திடமிருந்து ஒரு கடிதம் தொலைநகல் மூலம் வலம்புரிக்கு வந்து சேர்ந்தது.

அந்தக் கடிதத்தில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அவர்கள் கையொப்பமிட்டிருந்தார். தேர்தலுக்கு முதல் நாள் வலம்புரி பத்திரிகையுடன் தேர்தல் திணைக்களம் நடந்து கொண்டமைக்கு வருத்தம் தெரிவிப்பதாக அந்தக் கடிதம் அமைந்திருந்தது.

**... உங்களது பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வாக்களித்தல் முறை தொடர்பான அறிவுறுத்தலை திருத்துமாறு உங்களுக்கு அறிவிக்கக் காரணம் அதுபற்றி எனக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடொன்றுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமையேயாகும்...**

தேர்தல் ஆணையாளரின் இக் கடிதம் வலம்புரி குடும்பத்திற்கு ஆறுதலைத் தந்ததுடன் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய ஒரு நேர்மையான மனிதர் என்ற மனப்பதிவையும் நம்மிடம் ஏற்படுத்தியது.

நடந்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்வதென்பது பெருந்தன்மைக்குரியது. அந்தப் பெருந்தன்மை தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் இருந்தது.

வலம்புரி மீது காழ்ப்புணர்வு கொண்டவர்கள் கிடைத்த சந்தர்ப்ப சூழ்நிலைகளை தமக்கு சாதகமாக்கி வலம்புரியின் மூச்சை அடக்கிவிட நினைத்தனராயினும் அதற்கு யாழ்ப்பாண மாவட்ட செயலக அதிகாரிகள் இடம் கொடுக்கவில்லை. அதேநேரம் வலம்புரிப் பத்திரிகைக்கு ஏற்பட்ட அசௌகரியம் தொடர்பில் தேர்தல் திணைக்களமும் புரிந்து கொண்டது. அதன் காரணமாகவே தேர்தல் ஆணையாளர் வலம்புரிக்கு கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

அதேவேளை தேர்தல் ஆணையாளர் வலம்புரிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் **மட்டுப்பாட்டுடன் கூடியது உரிமைப் பங்கமற்றது** எனக் குறிப்பிட்டிருந்தபடியால் அதனைப் பத்திரிகையில் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டது.

நிலைமைகள் இவ்வாறாக இருக்க வேட்பாளர் அருந்தவபாலனின் ஆதரவாளர்கள் திருகோணமலைக்குச் சென்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரைச் சந்தித்து தேசியப் பட்டியல் மூலமாக அருந்தவபாலனுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க வேண்டும் எனக் கேட்டிருந்தனர்.

இது தொடர்பில் மௌனம் சாதிப்பது நல்லதல்ல என்று முடிவு செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை அருந்தவபாலனின் வீட்டிற்கு அனுப்பி அங்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

எம். ஏ.சுமந்திரன் அருந்தவபாலனைச் சந்திக்க வந்த போது அருந்தவபாலனின் ஆதரவாளர்கள் அங்கு கூடினராயினும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுடன் அந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது தேசியப்பட்டியல் எம்.பி.பதவியில் அரைப்பதவி வழங்குவது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது.

(வளரும்)

-புருசோத்தமன்-

# போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

முல்லைத்தீவு மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் அழகுக்கலையும், சிகை அலங்காரமும் அலுமினியம் பொருத்துநர், மோட்டார் வாகன திருத்துநர் போன்ற தமிழ் மொழி மூலமான பயிற்சி நெறிகளுக்கு போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பூரணப்படுத்தப்பட்ட சுய விபர படிவத்துடன் தமது சான்றிதழ்களின் பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பதாரிகள் தகைமைகளாக

குறித்த தொழிற்பயிற்சிப் பிரிவில் NVQ 4 மட்டம் அல்லது அதற்கு மேலான தொழிற்றகமை பெற்றிருத்தல்.

தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

வயதெல்லை 18இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சுயவிபரப்படிவத்தை உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், நீதிமன்றம் வீதி, மாங்கு ளம் பிரதான வீதி, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு முல்லைத்தீவு இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-5)

# 79ஆவது நாளாகவும் தொடர்கிறது



கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை 79ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்புப் போராட்டமே இரவு பகலாக தொடர்கிறது. (2-5-312)

# கிளிநொச்சி கல்வி வலய வெற்றிடத்தை நிரப்புமாறு பிரதம செயலாளருக்கு கடிதம்

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி கல்வி வலயப் பணிமனையில் பல வருடங்களாக கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவப் பிரிவுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகிய வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் கிளிநொச்சி கல்வி நிலைமை பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

ஆதலால் மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாணசபை பிரதம செயலாளருக்கு கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

க.பொ.த (சா/த) பெறுபேறுகளின் அடிப்படையில் கிளிநொச்சி கல்வி நிலைமைகள் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இதற்கு பல வருடங்களாக கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடமும் முகாமைத்துவப் பிரிவுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடமும் ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடமும் நிரப்பப்படாமை முக்கிய காரணங்களாக அமைகின்றன. இவ்வெற்றிடங்கள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் தெரியப்படுத்தியிருந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படாமை கவலையளிக்கின்றது.

அத்துடன் நிலைமை இவ்வாறு இருக்கையில் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடமும் ஏற்பட்டுள்ளமை மிகவும் மோசமான நிலைமையாகும்.

பதவியிலிருந்த வலயக் கல்விப் பணிப்பாளர் 2017 மாசிமாதம் 23ஆம் திகதியில் ஓய்வு பெறும் நாள் முன் கூட்டியே அறிந்திருந்தும் கூட நிர்வாக நடைமுறைகளுக்கமைய முன்கூட்டியே இவ் வெற்றிடம் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது மாகாணப் பொதுச்சேவைஆணைக்குழுவி னால் காலம் தாழ்த்தி விண் ணப்பம் கோரப்பட்டுள்ளதனை அறிகின்றோம்.

எனவே மேலும் காலதாமதங்கள் ஏற்படாது விரைவாக வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியை நிரப்புவ தற்கும் மேற்குறித்த ஏனைய பதவி வெற்றிடங்களையும் நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் வழங்கும் போது குறைந்தது ஐந்து வருடங்கள் கிளிநொச்சி வலயத்தில் சேவை புரியும் வகையில் வழங்குவது சிறந்ததாகும். இது கிளிநொச்சி மாவட்ட கல்வி முன்னேற்றத்திற்கு உதவும் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-277)


# அன்புவார ஒன்றுகூடல் விழா

(கிளிநொச்சி)

வடபிராந்திய சத்திய சாயி சர்வதேச நிறுவனம் நடத்தும் அன்பு வார ஒன்று கூடல் விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.


இந்நிகழ்விற்கு கிளிநொச்சி தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் முதற் பரிசு பெறும் மாணவர்கள் ஆக்கங்களைச் சமர்ப் பித்தல், பரிசில்வழங்குதல்மனித மேம்பாட்டில் பாடல்கள் என்பன நடைபெறும். (2-5)




# உலக செஞ்சிலுவை தினத்தையொட்டி வவுனியாவில் தாகசாந்தி நிகழ்வு





உலக செஞ்சிலுவையும் செம்பிறையும் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம் தலைமையில் நேற்று முன்தினம் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக தாகசாந்தி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது இலங்கை செஞ்சிலுவை சங்கத்திற்கு புதிய உறுப்பினர்கள் பதிவு, இரத்ததானப் பதிவு என்பன மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் வவுனியா கிளை உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். வவுனியாவில் கடும் வெப்பநிலை நிலவும் இந் நிலையில் இவர்களின் இச் சேவை சிறப்பானது என பொதுமக்கள் தெரிவித்தனர். (2-5-250)

# பிள்ளைகளை தொலைத்துவிட்டு கையேந்தும் அவல வாழ்க்கை

## முல்லை உறவுகள் வேதனை



தொழில்செய்து குடும்பங்களை பொருளாதார ரீதியாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய பிள்ளைகளை தொலைத்துவிட்டு கையேந்தும் சமுதாயமாக வாழ்ந்து வருவதாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளோரின் உறவுகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளோரின் உறவுகள் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.


இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளோரின் உறவுகள் முன்னெடுத்துள்ள போராட்டம் நேற்றுடன் 63 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் என்ற காரணத்தினாலேயே தான் தமக்கு இதுவரை தீர்வு முன்வைக்கப்படவில்லை.

இதேவேளை தமது பிள்ளைகள் உயிருடன் உள்ளார்களா? இல்லையா? என்பதை அரசாங்கம் தெரியப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் வலி யுறுத்தியுள்ளனர்.

இதேவேளை இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையிலும் மேற்படி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-5-281)

# முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட படுக்கை மெத்தைகள் வழங்கல்



(குருமன்காடு)

இறுதிப்போரின் போது காயமடைந்து முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட நிலையில் படுக்கையில் இருக்கும் நோயாளிகளுக்கு விசேட காற்று நிரப்பும் படுக்கை மெத்தைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் சுகாதார மேம்பாட்டு நிறுவனத்தினால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நடமாடும் மருத்துவ சேவைபெறும் பயனாளிகளுக்கே இந்த விசேட படுக்கை மெத்தைகள் வழங்கி வைக்கப்பட்டன. மோட்டிவேசன் லங்கா நிறுவனத்தினால் 10 நோயாளர்களுக்கு இந்த விசேட படுக்கை மெத்தைகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மோட்டிவேசன் லங்கா நிறுவனத்தின் வைகறை நிலைய பொறுப்பாளர் முகுந்தன், சுகாதார மேம்பாட்டு நிறுவனத்தின் பொருளாளர் ஜனார்த்தனன் மற்றும் நடமாடும் மருத்துவ சேவை திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நோயாளிகளின் வீடுகளுக்கு சென்று சிகிச்சையளிக்கும் இந்த திட்டத்திற்கு கனேடிய தமிழர் தேசிய அவை எனும் புலம்பெயர் அமைப்பு நிதியுதவி வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-5-250)

# ஒன்லைன் மூலம் வாகன வரி அனுமதிப்பத்திரத்தை பெறலாம்

## வவுனியா பிரதேச செயலாளர் தெரிவிப்பு



வவுனியா பிரதேச செயலகத்தில் வட மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிற்கான வாகன வரி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும் என வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்தார்.

இதுவரை காலமும் வடக்கு மாகாணத்தில் வாகன வரி அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கு அந்தந்த பிரதேச செயலகங்களிற்கே செல்ல வேண்டி நிலை காணப்பட்டது.

இன்றிலிருந்து வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்த மாவட்டத்தில் இருந்தும் ஒன்லைன் மூலமாக வவுனியா பிரதேச செயலகத்தில் வாகன வரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வவுனியா பிரதேச செயலகத்தில் முதலாவது வாகன வரி அனுமதிப்பத்திரம் பிரதேச செயலாளரால் வழங்கி வைக்கப்பட்டது. (2-5-250)




# மைதான புனரமைப்பிற்கு ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு



மன்னார் பாலையடிப் புதுக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் மைதான புனரமைப்புக்கு வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, அமைச்சர் பா.டெனிஸ்வரன் 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி பாடசாலையின் புதிய கட்டட திறப்பு விழா விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்த சந்தர்ப்பத்தில் பாடசாலையின் மைதான பிரச்சினை சம்பந்தமாக பாடசாலையின் அதிபர் மற்றும் பழைய மாணவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு அதற்கான உதவியும் கோரப்பட்டிருந்தது.

மைதானத்தை நேரில் பார்வையிட்ட அமைச்சர் அதன் நிலையையும் மாணவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு இவ்வொதுக்கீட்டை மேற்கொண்டுள்ளார்.

மேலும் புதிதாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளராக கடமைகளை பொறுப்பேற்றுள்ள பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரனை குறித்த பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அம் மைதான புனரமைப்பு சம்பந்தமாக பழைய மாணவர்கள், பெற்றோர், கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் போன்றவர்களோடு ஆலோசனை நடத்தினார்.

அங்கு கருத்துரைத்த அமைச்சர்,ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து சிறந்த பலனை பெறவேண்டுமானால் அனைவரினதும் ஒத்துழைப்பு தேவை, ஒவ்வொருவரும் தங்களாலான பங்களிப்பினை செய்யும்போது,

குறிப்பாக சிரமதானம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு தங்கள் மனித நேரங்களை மைதான புனரமைப்பில் செலவழிப்பார்களானால் முடியும். அதனை ஒழுங்கமைக்கும் பணியை பழைய மாணவர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும் பணிப்புரை விடுத்ததோடு, அக்கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராய்ந்தார். (2-5)

# சொந்த ஊருக்கு செல்வதற்கான போராட்டம் தீர்வின்றி தொடர்கிறது





கிளிநொச்சி பூநகரி இரணைதீவு மக்கள் தங்களின் சொந்த இடத்திற்குச் செல்வதற்கான கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 9 ஆவது நாளாகவும் தொடர்கிறது. வளமாகவும் ஆரோக்கியமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்த ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டு 24 வருடங்கள் ஆகின்றன. எங்களை மீண்டும் ஊருக்குச் செல்ல விடுங்கள் என கண்ணீருடன் இரணைதீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சொந்த ஊருக்குச் செல்வதற்கான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்பதாவது நாளாகவும் தொடர்கிறது.

ஊருக்கு போகாமல் தங்களின் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என மக்கள் உறுதியாக தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (2-5-312)

# 49 ஆவது நாளாகவும் தொடரும் பன்னங்கண்டி மக்களின் போராட்டம்



(குருமன்காடு)

கிளிநொச்சி பன்னங்கண்டி சரஸ்வதி கமம் மற்றும் ஜொனிக் குடியிருப்பு பிரதேச மக்கள் தமது குடியிருப்பு காணிக்கான ஆவணம் மற்றும் அடிப்படை வசதிகள், நிரந்தர வீட்டுத் திட்டம் என்பன இதுவரை கிடைக்கவில்லை.

எனவே இவ்வளவு காலமும் அடிப்படை உரிமை இல்லாத மக்களாக வாழ்ந்துவிட்டோம். இனியும் வாழ முடியாது. தயவு செய்து எமக்கான காணி உரிமத்தை உரியவுர்கள் வழங்குங்கள் எனக் கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று செவ்வாய்க் கிழமை 49 ஆவது நாளாக தொடர்கிறது.

அத்துடன் தமக்கான காணி உரிமம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-5-250)

# அன்புவார போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

வட பிராந்திய சத்தியசாயி சர்வதேச நிறுவனங்களின் இணைப்புக் குழுவினால் ஒக்டோபர் மாதம் 2016 இல் நடத்தப்பட்ட அன்பு வாரக் கட்டுரை, கதை , கவிதை, சித்திரப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. எதிர் வரும் 14 ஆம் திக்தி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு A -9 பிரதான வீதியில் வில்சன் வீதியில் அமைந்துள்ள கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள விழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கமைய போட்டியில் பரிசில்கள் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

கட்டுரைப் போட்டி முதலாம் பிரிவு

1ஆம் இடம் செல்வி மே.மேரிறோசேன் குருஸ்– புனித ஆனாள் ம.ம.வி, வங்காலை, 2ஆம் இடம் செல்வி ர. நிசா– புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, 2ஆம் இடம் செல்வி சு. டிலக்சி– மத்திய மகா வித்தியாலயம் கிளிநொச்சி, 3ஆம் இடம் செல்வி ம.தர்சினி - சிவபாத கலையரங்கம் அ.த.க.பா பொன்னகர், 3ஆம் இடம் செல்வி K.சுகிர்தா -பாரதி வித்தியாலயம், கிளிநொச்சி, 3 ஆம் இடம் செல்வன் மோ. அபிராம்– வட்டக்கச்சி மத்திய கல்லூரி.

கட்டுரைப் போட்டி 2 ஆம் இடம்

1ஆம் இடம் செல்வி க.தாயகன்– பரந்தன் அ.த.க பாடசாலை, 1ஆம் இடம் செல்வி ர.சௌந்தர்யா– கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் செல்வன் ர.பவித்திரன்– புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, 2ஆம் இடம் செல்வன் N.M. ஸ்டெப்பனி– தலைமன்னார் அ.த.க பாடசாலை, 2ஆம் இடம் செல்வி ஆன்சுவேதா– மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை, 2ஆம் இடம் செல்வி ஜெ. யாழினி - வட்டக்கச்சி மத்திய கல்லூரி

கட்டுரைப் போட்டி 3ம் பிரிவு

1ஆம் இடம் செல்வி வி.நிதர்சினி - மன்னார் புனித சவேரியர் பெண்கள் தேசியப் பாடசாலை, 1ஆம் இடம் செல்வி சி. காஜானா– புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, 2ஆம் இடம் செல்வி செ.பேபிசாளினி– கிளிநொச்சி மகா வித்தியாலயம், 3ஆம் இடம் செல்வி சு.புகழ்நிலா–வட்டக்கச்சி மத்திய கல்லூரி, 3ஆம் இடம் செல்வி A.வேந்தினி - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

கதைப்போட்டி

முதலாம் இடம் செல்வி சு.புகழ்நிலா - வட்டக்கச்சி மத்திய கல்லூரி, 2ஆம் இடம் செல்வி ப. விதுர்சிகா - வட்டக்கச்சி மத்திய கல்லூரி, 3ஆம் இடம் Y . யதுஷா - கிளி. பாரதி வித்தியாலயம், 3ஆம் இடம் செல்வி செ. அருமதி - வட்டக்கச்சி மத்திய கல்லூரி, 3ஆம் இடம் செல்வி. சு. வான்மதி - ஓட்டுப்புலம் G.T.M.S

சித்திரப் போட்டி

1ஆம் இடம் செல்வி.தி.ஹிரண்யாஜினி - கிளி.மகா வித்தியாலயம், 1ஆம் இடம் செல்வன் A . கிருஷாந் - மன். புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி, 2ஆம் இடம் செல்வி பா.அபினா - புதுக்குடியிருப்பு மகளிர் உயர்நிலை பாடசாலை, 3ஆம் இடம் செல்வி கி. டலிமா - மன். புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி, 3ஆம் இடம் செல்வி. செ. சுகன்யா - புதுக்குடியிருப்பு மகளிர் உயர்நிலை பாடசாலை, 3ஆம் இடம் செல்வன் க. கஜீபன் - கிளி. ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை

கவிதைப் போட்டி

1ஆம் இடம் செல்வி கு.ரேணுகா - மாங்குளம் மத்திய மகா வித்தியாலயம், 2ஆம் இடம் செல்வி கு. கோபிகா - கிளி. பாரதி வித்தியாலயம், 3ஆம் இடம் செல்வன் த. தாரகாந்தன் - கிளி.முருகானந்தா கல்லூரி, 3ஆம் இடம் செல்வி S. நிதுஸ்ரெல்லா - மன். புனித சவேரியார் பெண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) (2-5)

# மனைவியைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கணவன் கைது

கம்பளை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரது கணவன் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டதாகவும் குடும்ப தகராறு காரணமாகவே இந்த கொலை இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தின் போது உயிரிழந்தவர் 44 வயதையுடைய அலவதுகொட பகுதியை சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கொலை செய்யப்பட்ட குறித்த பெண் அவரது மகன் கலந்துகொண்ட நிகழ்வொன்றை பார்வையிட கணவனுடன் சென்றுள்ளார்.

இதன்போது, வேறு ஒரு நபரிடம் இருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்ததால் சந்தேகம் கொண்ட கணவன், தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான பெண்ணை குறித்த இடத்தில் இருந்த சிலர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். எனினும், அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தாக்குதலை மேற்கொண்ட குறித்த பெண்ணின் கணவன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## சிங்கள மயமாக காட்சியளிக்கும் மட்டக்களப்பு

மட்டக்களப்பு நகர் முழுவதும் சிங்கள மயமாக காட்சியளிக்கும் வண்ணம் தோரணங்கள் தொங்க விடப்பட்டுள்ளன.

தமிழர்கள் செறிந்து வாழும் மட்டக்களப்பில் வெசாக் தினத்தை முன்னிட்டு இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த நகரை அண்மித்துள்ள சுற்றுவட்டங்களில் பௌத்த தேசிய வர்ண சீலை அலங்காரமும், கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன.

மேலும், நகரில் உள்ள பன்சாலையை அண்மித்த பகுதிகளிலும் தோரணங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இந்திய தூதரகத்தில் மகஜர் கையளிப்பு!



இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் (மலையக மக்கள்) எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அவர்களுக்கான தீர்வு என்னவென்பது குறித்தும் இந்தியப் பிரதமரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நேற்றுப் பகல் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் அருட்தந்தை சக்திவேல் தலைமையில் மகஜரொன்று கையளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பொருட்களின் விலையை அதிகரித்து விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

வெசாக் பண்டிகை காலத்தில் பொருட்களின் விலையை அதிகரித்து விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

வெசாக் பண்டிகை காலத்தில் பொருட்களுக்கு எத்தகைய தட்டுப்பாடும் ஏற்படாதவகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப்பண்டங்கள் இறக்குமதி மற்றும் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஹேமக்க பெர்னாண்டோ, சந்தையில் பொருட்கள் தாராளமாக இருப்பதாகவும் எந்தப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவவில்லை எனவும் தெரிவித்தார்.

கடந்த வெசாக் பண்டிகை காலத்தோடு ஒப்பிடும்போது இந்த வருட பண்டிகை காலத்தில் மொத்த விற்பனைச் சந்தையில் பொருட்களின் விலை கணிசமான அளவு குறைந்துள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 140 | 170 | 200 | 100 |
| தக்காளி | 140 | 120 | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 180 | 200 | 150 | 160 | 200 | 120 |
| கரட் | 230 | 250 | 180 | 180 | 280 | 160 |
| பூசணி | 50 | 50 | 50 | 50 | 60 | 60 |
| புடோல் | 80 | 120 | 60 | 60 | 60 | 90 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 200 | 200 | 300 | 180 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 90 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 160 | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 150 | 140 | 200 | 280 | 100 |
| லீக்ஸ் | 80 | 120 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 160 | 140 | 120 | - | 160 | 100 |
| கறிமிளகாய் | 200 | 160 | 160 | 170 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 140 | 120 | 200 | 150 |
| போஞ்சி | 180 | 200 | 180 | 280 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 80 | 120 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 60 | 40 | 60 | 50 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | 220 | 240 | 180 |
| வெங்காயப்பூ | 200 | - | 200 | - | 200 | - |
| முள்ளங்கி | 70 | - | 80 | - | 100 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | - | 60 | - | - | - | - |

# கிழக்குப் பல்கலைக்கு புதிய வேந்தர் நியமனம்

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிபார்சில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதாக அப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி தங்கமுத்து ஜயசிங்கம் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ள இந்த நியமனம் நியமனத் திகதியிலிருந்து 5 வருட காலத்திற்குரியதாகும்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வேந்தராகப் பதவி வகித்த பேராசிரியை யோகா இராசநாயகத்தின் பதவிக்காலம் ஏற்கனவே கடந்த 2016 ஒகஸ்ட் மாதம் நிறைவடைந்ததையடுத்து அப்பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படாமல் இருந்து வந்தது.

இதன் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி இடம் பெறுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்த அப்பல்கலைக்கழகத்தின் 21வது பொதுப் பட்டமளிப்பு விழாவும் புதிய வேந்தர் நியமனம் இடம்பெறும் வரை காலவரையறையின்றி பிற்போடப்பட்டு வந்தது.

பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா நடைபெறும் போது சம்பிரதாயப்படி அதன் வேந்தர் பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்பது மரபாகும்.

எவ்வாறாயினும், புதிய வேந்தர் தற்பொழுது நியமிக்கப்பட்டிருப்பதால் 21வது பொதுப் பட்டமளிப்பு விழா புதிய வேந்தரின் பிரசன்னத்துடன் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென அப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி தங்கமுத்து ஜயசிங்கம் மேலும் தெரிவித்தார். (இ-3)



உயிர்நீத்த இராணுவ வீரர்கள் நினைவு தினத்தை முன்னிட்டு வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் இரத்ததான நிகழ்வு நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் நடைபெற்றது. இந்த இரத்ததான நிகழ்வில் இராணுவத்தினர் பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# மகிந்தவை விமர்சிப்பதை நிறுத்த வேண்டும்

# பொன்சேகாவுக்கு எதிராக சு.கவினர் போர்க்கொடி!





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடுமையாக விமர்சித்துவரும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியினர் போர்க் கொடி உயர்த்தியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தொடர்ந்தும் அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவாரானால் பொன்சேகா விரைவில் மக்களால் ஓரங்கட்டப்படுவார் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை பகுதியில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய அமைச்சர் டிலான் பெரேரா, அரசாங்கத்தின் பிராந்திய அபிவிருத்தி அமைச்சராக பதவி வகிக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் அமைச்சர் ராஜித சேனாரட்னவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தொடர்ச்சியாக விமர்சித்து வருவதுடன் அச்சுறுத்தல் விடுத்தும் வருவதாகத் தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் மகிந்தவை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை கைவிடாவிட்டால் விரைவில் மக்கள் அவர்களை அரசியலில் இருந்து ஓரம்கட்டிவிடுவார்கள் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இராணுவத்தைக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சரத் பொன்சேகா ஈட்டிய போர் வெற்றிக்கான கௌரவத்தையும் இழந்துவிடுவார் என்றும் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பு குறித்து அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்த கூற்று தொடர்பில் கருத்து வெளியிட்ட டிலான் பெரேரா சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாது உத்தேச அரசியல் யாப்பை நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தை பெற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உத்தேச அரசியல்யாப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் பெற வேண்டுமானால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவும் இருக்க வேண்டியது அவசியம் என்பதை சரத் பொன்சேகாவும் ராஜித சேனாரட்னவும் மறந்துவிடக் கூடாது என்றும் சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (இ-7)

# மோடிக்கு கறுப்புக் கொடி ஏந்தும் வீரவன்ச சிராந்திக்கு கறுப்புக் கொடி ஏந்தாதது ஏன்?

## ஐ.தே.க. எம்.பி. காட்டம்

(கொழும்பு)

சர்வதேச வெசாக் பண்டிகையை இலங்கையில் முன்னெடுப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம் மிகவும் சிறந்த ஒன்று என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதைக் கூறியுள்ளார்.

இந்த அதிர்ஷ்டத்தை இலங்கைக்கு கிடைக்கச் செய்த பெருமை ஜனாதிபதியையும் பிரதமரையுமே சாரும்.

சைட்டம் என்பது மகிந்த ராஜபக்ஷவின் காலத்திலிருந்தே வந்த பிரச்சினை. அப்போதைய காலகட்டத்தில் அமைதியாக இருந்துவிட்டு தற்போது வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தை முன்னெடுப்பது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக காணப்படுகின்றது.

வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றியளித்திருப்பதாக இவர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால் அதற்கு பின்னால் பல மக்களின் உயிர் பலி கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கும் வைத்தியர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் ஹெக்டர் அப்புகாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் பிரசன்ன சாமல் சேனாரட்ன,

வெசாக் தினத்தை சர்வதேச ரீதியில் கொண்டாடுவதற்கு வித்திட்டவர் லக்ஸ்மன் கதிர்காமர் என்பதை அனைவரும் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்று நினைவூட்டினார்.

விமலுக்கு 2 ஆம் இடத்தில் மூளையும் முதலாம் இடத்தில் நாக்கும் இருக்கின்றது.

இதனால் தேவையற்ற விடயங்களைப் பேசி மக்களை திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் மோடியின் வருகைக்கு கறுப்புக்கொடி ஏந்தும் விமல், சிராந்தி ராஜபக்ஷவுக்கு எதிராகவும் கறுப்புக் கொடியை ஏந்தி எதிர்ப்பை வெளியிட்டிருக்க வேண்டும்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் யுனெஸ்கோவின் ஏற்பாட்டில் நடைபெற்ற வெசாக் பண்டிகையில் கலந்து கொள்வதற்காக சென்ற சிராந்தி ராஜபக்ஷவின் செலவு 25 மில்லியன் என அண்மையில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார்.

இவ்வாறான சம்பவங்கள் விமலின் கண்களுக்கு தெரியாதா? இவற்றுக்கு மட்டும் ஏன் அவர் மௌனம் காத்தார்? என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் பிரசன்ன சாமல் சேனாரட்ன தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கானாம் வாழை

Botanical Name – Commelinabenghalensis
Family – Commeliaceae
Engl – Blue spider wort

கானாம் வாழை என்பது வாழை இனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று நினைக்கக் கூடும். ஆனால் இதற்கு இப்படிப் பெயரே ஒழிய வாழை இனத்திற்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

சில பிரதேசங்களில் இதனைக் கானாங்கொடி என்றும் கூறுவர். இதன் சிறிய இலைகள் சுமார் இரண்டு அங்குலநீளமும் ஒரு அங்குல அகலமும் உள்ளதாக இலைக்குள் இலைகள் வாழை குருத்து போல சுருண்டு பின் விரிகிறது. மேலும் இதரகொடி இலைகள் போல் நரம்புகள் இல்லாமல் வாழைமடல் போல்நார் ஓடியது போல் காணப்படும்.

எனவே இதற்கு காணும் + வாழை (காணும் = தோற்றம்) வாழையைப் போல தோற்றமுடையதால் காணும் வாழையாகி நாளடைவில் காணான் கொடியாகி விட்டது.


### பரம்பல்

கொடியாக படரும் செடி இனத்தைச் சார்ந்தது. மழை, பனி, குளிர் காலங்களில் ஈரப்பசையுள்ள புல் தரைகள், வாய்க்கால் வரப்புகள் சதுப்புநிலங்கள் ஆகிய இடங்களில் எல்லாம் தானாக முளைத்து வளரக்கூடியது.

யாழ். மாவட்டத்தில் ஏராளமாக வளரக் கூடியது. குறிப்பிட்ட சில காலங்களில் பூக்கும். இதன் பூ இரண்டாக இதழாக நீலநிறமாக இருக்கும். கொடிக்காம்பு மிருதுவாக வாழைத்தண்டு போல ஒடியும் தன்மை உடையது. தண்டிலிருந்து பிரிந்து இலை விடும். கணுக்கள் வேர் விட்டு கொடியோடும். இதனை பிடுங்கி நட்டு பயிரிடலாம்.

### மருத்துவபயன்கள்

இதன் வேர் முதல் முழுச் செடியும் மருத்துவப் பயனுடையது. பொதுவாக உடல் சூட்டையும் சுரத்தையும் (காய்ச்சலையும்) தணிக்கக் கூடியது. தளர்ந்த தசை நரம்பு நாளங்களை உரப்படுத்தும்.



கானாம் வாழையை வேருடன் எடுத்துநீரில் கழுவி அலசி 20 கிராம் அளவு எடுத்து 400மில்லி நீரில் போட்டு கொதிக்கக் காய்ச்சி 100 மில்லியாகக் குறுக்கி 30 மில்லி வீதம் 3 நேரம் குடித்து வர காய்ச்சல் தணியும். நீர் வேட்கை மிகுந்த காய்ச்சலாக இருந்தால். இதனுடன் 4 மிளகு, 5 கிராம் சின்னச் சீரகம் சேர்த்து குடிநீர் காய்ச்சி எடுக்கலாம்.

கானாம் வாழை, அறுகம் புல் இரண்டும் சம அளவாக எடுத்து நீரில் அலசி மைபோல் அரைத்து 5 கிராம் அளவு காலை, மாலை வாயிலிட்டு 100 மில்லி காய்ச்சி பசுவின் பால் குடித்துவர இரத்தமாக போகும் பேதி நிற்கும்.

கானாம்வாழைச்செடியை வேருடன் பிடுங்கி வந்து சுத்தமாக கழுவி, பொடியாகவெட்டி ஒருகைப்பிடி அளவு எடுத்து ஒரு சட்டியில் போட்டு, ஒரு டம்ளர் அளவு தண்ணீர் விட்டு நன்றாகக் கொதிக்கவைத்து இறக்கி ஆறிய பின் வடி கட்டி, அதை மூன்றுபங்குகளாகப் பகிர்ந்துகாலை, பகல், மாலை ஆக மூன்றுவேளைகளுக்கும் கொடுத்துவந்தால் எந்த வகையான காய்ச்சலாக இருந்தாலும் அதுகுணமாகும்.

கானாம் வாழை இலைகளைக் கொண்டுவந்து, அதைக் காரமில்லாத அம்மியில் வைத்து மை போல அரைத்து, ஆறாத புண், குழிப்புண்ணின் மேல் வைத்துக் கட்டிகாலையில் புண்ணைச் சுத்தம் செய்து விட்டு, மறுபடி புதிய இலையை அரைத்து வைத்துக் கட்ட ஏழே நாட்களில் புண் ஆறும்.

கானாம்வாழைக்கீரையை (ஒருகைப்பிடி) தினமும் அரைத்துச் சாப்பிட்டால் உடல் சூடு குறையும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கானாம் வாழைக் கீரை யுடன் வேப்பந்துளிர், மஞ்சள் தூள் இரண்டையும் சேர்த்து அரைத்து, காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடல் வலிமை பெறும்.

கானாம் வாழைக் கீரை, துத்தி இலை - இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்துச் சாப்பிட்டால் இரத்த மூலம் குணமாகும்.

கானாம் வாழைக் கீரையுடன் மிளகு (5) சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் குளிர்க் காய்ச்சல் குணமாகும்.

# நீதிபதி கர்ணனுக்கு சிறைத்தண்டனை!

## உச்ச நீதிமன்று உத்தரவு



(டில்லி)

**நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி கர்ணனுக்கு ஆறுமாத சிறைத்தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.**

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த சி.எஸ்.கர்ணன், சக நீதிபதிகள் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராக ஊழல் புகார்கள் கூறியதையடுத்து, கொல்கத்தா உயர் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டார்.

அவர் மீது உச்ச நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது. அதன் விசாரணைக்கு அவர் ஆஜராகாததால், அவர் நீதிபதி பணியை செய்யக்கூடாது என்று கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி உத்தரவிட்டது. மேலும், கடந்த 4 ஆம் திகதி அவருக்கு மனநல பரிசோதனை நடத்த உத்தரவிட்டது. ஆனால், நீதிபதி கர்ணன் அதற்கு மறுத்து விட்டார்.

இந்நிலையில், நீதிபதி கர்ணன் நேற்று முன்தினம் ஓர் அதிரடி உத்தரவு பிறப்பித்தார். தனக்கு எதிரான அவமதிப்பு வழக்கை விசாரித்து வரும் தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர், நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, செல்லமேஸ்வர், ரஞ்சன் கோகாய், மதன் பி.லோகுர், பி.சி. கோஸ், குரியன் ஜோசப் ஆகியோருக்கும், தன்னை நீதிபதி பணியாற்ற தடை விதித்த நீதிபதி பானுமதிக்கும் தலா 5 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்தும் உத்தரவிட்டார்.


தன் வீட்டில் அமைக்கப்பட்ட தற்காலிக நீதிமன்றில் இந்த உத்தரவை அவர் பிறப்பித்தார். எஸ்.சி.,எஸ்.டி. வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களை அவர்கள் செய்துள்ளதால், இந்த தண்டனைக்கான உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மேலும், தண்டனைக்குள்ளான நீதிபதிகள் ஒரு வாரத்துக்குள் தலா ரூ.ஒரு இலட்சம் அபராதம் செலுத்த வேண்டும் என்றும், அபராதம் செலுத்தாவிட்டால், கூடுதலாக 6 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

நீதிபதி கர்ணனின் இந்த உத்தரவு இந்திய நீதித் துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், நீதிமன்ற அவமதிப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால் நீதிபதி கர்ணனுக்கு 6 மாதம் சிறைத்தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் நேற்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

மேலும், நீதிபதி என்பதால் சிறைத் தண்டனையில் இருந்து கர்ணன் தப்பிக்க முடியாது எனவும் உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது. மாநில உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு உச்ச நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை விதிக்கப்படுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தினகரன் வழக்கு நீதிபதிக்கு மிரட்டல்



(டில்லி)

டி.டி.வி.தினகரன், இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் உள்ளிட்டோர் மீதான வழக்கை விசாரித்து வரும் டில்லி சிறப்பு நீதிமன்ற நீதிபதிக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டு உள்ளது.

இரட்டை இலைச் சின்னத்தை பெறுவதற்காக தேர்தல் ஆணையகத்திற்கு இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் என்பவர் மூலமாக ரூ.50 கோடி இலஞ்சம் கொடுக்க முயற்சித்ததாக குற்றம்சாட்டி அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், அவருடைய நண்பர் மல்லிகார்ஜுனா, இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் ஆகியோர் டில்லி குற்றப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, டில்லி திஹார் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில், இந்த வழக்கை விசாரித்து வரும் டில்லி ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்ற நீதிபதி பூனம் சவுத்ரி, தனக்கு மிரட்டல் வந்ததாக டில்லி பொலிஸில் புகார் அளித்துள்ளார்.

அதில், கடந்த மார்தம் 28ஆம் திகதியன்று, அதாவது இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, விசாரணை தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு யாரோ அடையாளம் தெரியாத நபரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்த தாகவும், தன்னை உச்ச நீதிமன்ற நீதிபதி என்று கூறிய அந்த நபர் சுகேஷ் சந்திரசேகருக்கு உடனடியாக பிணைவழங்க வேண்டும் என்று மிரட்டல் விடுத்த தாகவும் கூறப்பட்டுள்ளது. (இ-3)

பாரதச் செய்தி

## தினகரனை விடுதலை செய்யும்வரை போராட்டம் ஓயாது - நாஞ்சில் சம்பத்



(மேலூர்)

டி.டி.வி.தினகரனை விடுதலை செய்யும்வரை போராட்டம் ஓயாது என்று மேலூரில் நடந்த அ.தி.மு.க. ஆர்ப்பாட்டத்தில் நாஞ்சில் சம்பத் தெரிவித்தார்.

இரட்டைஇலைச்சின்னத்தை பெற இலஞ்சம் கொடுக்க முயன்றதாக அ.தி.மு.க. (அம்மா) அணி துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் டில்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இதனால் அ.தி.மு.க. (அம்மா) அணியில் அதிருப்தி அடைந்த தினகரன் ஆதரவாளர்கள் மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். கடந்த வாரம் முதன் முதலாக மதுரையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. நேற்று முன்தினம் மதுரை மாவட் டம் மேலூர் பேருந்து நிலை யம் அருகில் ஆர்ப்பாட்டம் நடந்தது. முன்னாள் எம்.எல். ஏவும், பொதுக்குழு உறுப்பினரு மான ஆர்.சாமி தலைமை தாங்கினார்.

இதில் தலைமைக்கழக பேச்சாளர் நாஞ்சில் சம்பத், கர்நாடக மாநில செயலாளர் புகழேந்தி ஆகியோர பங்கேற்றனர். இதில் உரையாற்றிய நாஞ்சில் சம்பத்,

அ.தி.மு.க. கட்சியை காப்பாற்றியது சசிகலாதான். அவர் இல்லை என்றால் அ.தி.மு.க.வே இல்லை. 30 ஆண்டுகள் வாழ்க்கையை தொலைத்து விட்டு கட்சியை வளர்த்தவர் சசிகலா. முகம் காட்டாமலே அவர் அ.தி.மு.கவை வழி நடத்தினார். விசுவாசத்தின் அடையாளமாக அவர் இருந்தார்.

சசிகலாவின் தயவால் பலர் அமைச்சர்களாக ஆனார்கள். அந்த வரிசையில் ஓ.பன்னீர்செல்வத்தை உருவாக்கியவர்.

அவரை முதல்வராக்கியவர் சசிகலா தான். ஜெயலலிதா இறந்ததுமே முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம், மு.க.ஸ்டாலினுடன் கைகோர்த்தார். ஒரே குரலில் இருவ ரும் பேசினர். அதனால் ஓ.பி.எஸ். முதல்வர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இங்கு நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பம் தான். நெல்லை, தூத்துக்குடியில் தொடங்கி சென்னை வரை கட்சியினரை திரட்டுவோம். தினகரன் மீது போடப்பட்ட பொய் வழக்கை வாபஸ் பெறும்வரையும், அவரை விடுதலை செய்யும் வரையும் போராட்டம் ஓயாது.

ஓ.பன்னீர்செல்வத்துக்கு "வை" பிரிவு பாதுகாப்பு என்பது ஆயுதங்களுக்கே அவமானம். ஓ.பி.எஸ். மக்களை சந்திக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## நீதிபதி சி.எஸ்.கர்ணன் பிறப்பிக்கும் உத்தரவுகளை வெளியிடக்கூடாது

### ஊடகங்களுக்கு உச்ச நீதிமன்று திடீர் தடை

(டில்லி)

உச்ச நீதிமன்றத்தால் ஆறுமாத சிறைத் தண்டனைக்கு உள்ளாகி இருக்கும் கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி கர்ணன் பிறப்பிக்கும் உத்தரவு தொடர்பான செய்திகளை வெளியிடக்கூடாது என தொலைக்காட்சி, மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களுக்கு உச்ச நீதிமன்றம் நேற்று தடை விதித்துள்ளது.

அவர் மீது உச்ச நீதிமன்றம் அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது. அதன் விசாரணைக்கு அவர் ஆஜராகாததால், அவர் நீதிபதி பணியை செய்யக்கூடாது என்று கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி உத்தரவிட்டது. மேலும், கடந்த 4 ஆம் திகதி அவருக்கு மனநல பரிசோதனை நடத்த உத்தரவிட்டது. ஆனால், நீதிப்தி கர்ணன் அதற்கு மறுத்து விட்டார்.

இந்நிலையில், நீதிபதி கர்ணன் நேற்று முன்தினம் ஓர் அதிரடி உத்தரவு பிறப்பித்தார். தனக்கு எதிரான அவமதிப்பு வழக்கை விசாரித்து வரும் தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர், நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, செல்லமேஸ்வர், ரஞ்சன் கோகாய், மதன் பி.லோகுர், பி.சி. கோஸ், குரியன் ஜோசப் ஆகியோருக்கும், தன்னை நீதிபதி பணியாற்ற தடை விதித்த நீதிபதி பானுமதிக்கும் தலா 5 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

தன் வீட்டில் அமைக்கப்பட்ட தற்காலிக நீதிமன்றில் இந்த உத்தரவை அவர் பிறப்பித்தார். எஸ்.சி., எஸ்.டி வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களை அவர்கள் செய்துள்ளதால், இந்த தண்டனைக்கான உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தண்டனைக்குள்ளான நீதிபதிகள் ஒரு வாரத்துக்குள் தலா ரூ. ஒரு இலட்சம் அபராதம் செலுத்த வேண்டும் என்றும், அபராதம் செலுத்தாவிட்டால், கூடுதலாக 6 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

நீதிபதி கர்ணனின் இந்த உத்தரவு இந்திய நீதித்துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், நீதிமன்ற அவமதிப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால் நீதிபதி கர்ணனுக்கு 6 மாதம் சிறைத்தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் நேற்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

நீதிபதி என்பதால் சிறைத் தண்டனையில் இருந்து கர்ணன் தப்பிக்க முடியாது எனவும் உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது. மாநில உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு உச்ச நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்படுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆறுமாத சிறைத் தண்டனைக்கு உள்ளாகி இருக்கும் கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி கர்ணன் பிறப்பிக்கும் உத்தரவு தொடர்பான செய்திகளை வெளியிடக்கூடாது என தொலைக்காட்சி, மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களுக்கு உச்ச நீதிமன்று தடை விதித்துள்ளது. (இ-3)

# பயங்கர ஆயுதங்களைக் கடத்திவந்த 15 லொறிகள் மீது வான்வழி தாக்குதல்



(கெய்ரோ)

எகிப்தில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுவரும் ஆயுதக் குழுவுக்கு லிபியாவில் இருந்து பயங்கர ஆயுதங்களை கடத்திவந்த 15 லொறிகள் மீது எகிப்து போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

எகிப்தில் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்பட்ட முதல் ஜனாதிபதி முகமது மோர்சி. முப்பதாண்டுக்ளுக்கும் மேலாக பதவியில் இருந்த ஹோஸ்னி முபாரக்கை கடந்த 2012 ஆம் ஆண்டில் பதவியிலிருந்து இறக்கிவிட்டு ஜனாதிபதி பதவியைப் பிடித்த மோர்சியால் ஓராண்டுக்கு மேல் அந்தப் பதவியில் நீடிக்க முடியவில்லை.

எகிப்தின் இராணுவத் தலைவராக இருந்த அப்டெல் சிசி என்பவர் மோர்சியை பதவியிலிருந்து இறக்கி கைது செய்து சிறையிலும் அடைத்தார். அவர்மீது பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

அவருக்குத் துணை புரிந்த முஸ்லிம் இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணையை எதிர்நோக்கி காவலில் உள்ளனர். இவர்களில் பலருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த முஸ்லிம் இயக்கத்தின் ஒரு பிரிவினர் அரசுக்கு எதிரான ஆயுதப்போராட்டத்திலும் பங்கேற்று வருகின்றனர். அரசுப் படைகளுடன் அடிக்கடி மோதும் இவர்கள் பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்துகின்றனர்.

இந்நிலையில், அண்டை நாடான லிபியாவில் இருந்து முஸ்லிம் இயக்கத்தினருக்கு ஏராளமான ஆயுதங்கள் அனுப்பப்படுவதாக எகிப்து நாட்டின் உளவுப்படை அதிகாரிகளுக்கு அரகசிய தகவல் வந்தது.

இதையடுத்து, லிபியா-எகிப்து எல்லைப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. அதையும் மீறி லிபியாவில் இருந்து பயங்கர ஆயுதங்களை கடத்தி வந்த 15 லொறிகளை எகிப்து விமானப்படை குண்டுகளை வீசி தாக்கி அழித்த வீடியோ காட்சிகளை அந்நாட்டு ஊடகங்கள் நேற்று வெளியிட்டுள்ளன. (இ-3)

# மதத்துவேஷத்தைத் தூண்டிய ஆளுநருக்கு சிறைத்தண்டனை



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் இஸ்லாமியர்களுக்கு எதிரான மத துவேஷத்தை தூண்டிவிட்டதான குற்றச்சாட்டின் கீழ் அந்நாட்டின் தலைநகரான ஜகார்த்தா நகர ஆளுநருக்கு இரண்டாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் இஸ்லாமிய சட்ட திட்டத்துக்கு உட்பட்ட ஆட்சிமுறை அமுலில் உள்ளது. அந்நாட்டின் தலைநகரான ஜகார்த்தா நகர ஆளுநராக பசுக்கி ஜஹாஜா புர்னாமா என்பவர் பதவி வகித்து வருகிறார். இந்த பகுதியை கைப்பற்றிய இஸ்லாமியர் அல்லாத நபர் என்ற வகையில் சிறப்புக்குரியவராக அந்நாட்டு கிறிஸ்தவர்களால் மதிக்கப்படும் இவரை 'அஹோக்' என்று இவரது அபிமானிகள் அழைப்பதுண்டு.

சீன வம்சாவளியை சேர்ந்த கிறிஸ்தவரான இவர் மீது இஸ்லாமியர்களுக்கு எதிரான மத துவேஷத்தை தூண்டிவிட்டதான குற்றச்சாட்டின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்து வந்தது.

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள நீதிமன்றத்துக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்நிலையில், பிற மதத்தினரின் உணர்வுகளை காயப்படுத்தும் வகையில் நடந்து கொண்டதற்காக பசுக்கி ஜஹாஜா புர்னாமாவுக்கு இரண்டாண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். இந்த தீர்ப்பு பற்றிய தகவல் வெளியானதும், நீதிமன்றத்தின் அருகே குழுமியிருந்த அவரது ஆதரவாளர்களில் சிலர் கதறி அழுதனர்.

இந்த தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யப் போவதாக பசுக்கி ஜஹாஜா புர்னாமா தெரிவித்துள்ள நிலையில், தற்போது வெளியாகியுள்ள இந்த தீர்ப்பு இந்தோனேசியாவில் வாழும் சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி விடும் என மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன. (இ-3)

# சோமாலியாவில் காரில் வெடிகுண்டு வெடித்ததில் ஆறு பேர் உயிரிழப்பு



(மொகாடிஷு)

சோமாலிய தலைநகரில் காரில் வெடிகுண்டு வெடித்த சம்பவத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சோமாலியா நாட்டின் தலைநகரில் நேற்றுக் காலை காரில் வெடிகுண்டு வெடித்த சம்பவத்தில் ஆறு பேர் உடல் சிதறி உயிரிழந் துள்ளனர்.

மேலும் பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்திருப்பதாக அந் நாட்டு பொலிஸார் தெரிவித் துள்ளனர். சோமாலியா தலைநகரான மொகாடிஷுவில் நடந்த தாக்குதல் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நகரின் மையப்பகுதியில் குடியரசு தலைவர் மாளிகை அமைந்துள்ள இடத்தின் அருகே நடந்த இச்சம்பவம் அந்நாட்டு மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. கார் முழுக்க வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட நிலையில், இத்தாலிய உணவகத்தின் அருகே வெடிக்கச் செய்யப்பட்டது என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கார்பயணித்த போது வெடிக்கச் செய்யப்பட்டதா? அல்லது நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் வெடிக்கச் செய்யப்பட்டதா? என்பது குறித்து எவ்வித தகவலும் இல்லை. இந்த தாக்குதலுக்கு எந்தத் தீவிரவாத இயக்கமும் பொறுப்பு ஏற்கவில்லை. (இ-3)




# குண்டு வெடித்ததில் 9 மாணவர்கள் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் 'மதரசா' வில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 9 மாணவர்கள் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த நேட்டோ படைகள் வாபஸ் ஆனவுடன் அங்கு மீண்டும் தீவிரவாதிகள் ஆதிக்கம் தலை தூக்கி விட்டது.

தினமும் குண்டுவெடிப்பு சம்பவங் கள், தாக்குதல்கள் நடை பெற்ற வண்ணம் உள்ளன.

பர்வான் மாகாணத்தில் அரபிக் பாடசாலையான 'மதரசா' வில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. வழக்கம் போல் மாணவர்கள் பாடசாலைக்கு வந்து தங்களது வகுப்பறைகளில் இருந்தனர்.

அப்போது ஒரு வகுப்பறையில் பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதனால் அப்பகுதி முழுவதும் இடிந்து தரைமட்டமானது. கரும்புகை சூழ்ந்தது. பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. இக்குண்டு வெடிப்பில் 9 பேர் அதே இடத்தில் பலியாகினர்.

இத்தாக்குதலுக்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. (இ-3)

# தீவிரவாதிகளை அடக்காவிட்டால் பாகிஸ்தானில் புகுந்து தாக்குதல்

## ஈரான் அரசு எச்சரிக்கை

"தீவிரவாதிகளை அடக்கா விட்டால் பாகிஸ்தானில் புகுந்து தாக்குதல் நடத்துவோம்" என ஈரான் அரசு எச்சரித்துள்ளது.

பாகிஸ்தான் எல்லையில் இருந்து ஈரானுக்குள் புகுந்து தீவிரவாதிகள் சமீபத்தில் தாக்குதல் நடத்தினார்கள். பாகிஸ்தானுக்குள் இருந்து கொண்டே துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள்.

அதில் ஈரான் ராணுவ வீரர்கள் 10 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலுக்கு பாகிஸ்தானில் இயங்கும் ஜெய்ஸ்-அல்- அடில் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது. அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு ஈரான் அரசு கடும் கண்டனம் தெரிவித்தது.

தீவிரவாதிகள் கொள்ளைக்காரர்கள். கோழைத்தனமான தாக்குதல் நடத்தி உள்ளனர். அவர்களை ஒழிக்க வேண்டும் என்று ஈரான் ராணுவ தலைமை தளபதி மேஜர் ஜெனரல் முகமது பக்ரி தெரிவித்தார்.


இதுகுறித்து தொலைக் காட்சியில் பேட்டி அளித்தார். அப்போது, "பாகிஸ்தான் எல்லைப்பகுதி தீவிரவாதிகளின் சொர்க்காபுரியாக திகழ்கிறது. அங்கு அவர்கள் முகாம்கள் அமைத்து பயிற்சி பெறுகிறார்கள்.

இதை ஈரான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. இந்த நிலை மேலும் தொடரக் கூடாது.

பாகிஸ்தான் அதிகாரிகள், தீவிரவாதிகள் எல்லை தாண்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும். அவர்களை கைது செய்து பயிற்சி முகாம்களை மூட வேண்டும்.

இல்லாவிடில் பாகிஸ்தானுக்குள் புகுந்து தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை நசுக்கு வோம். அழித்து ஒழிப்போம் என எச்சரிக்கை விடுத்தார். (இ-7)

# திருப்பதியில் பழனிச்சாமி தரிசனம்



திருப்பதியில் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, நேற்று அதிகாலை குடும்பத்துடன் சுவாமி தரிசனம் செய்தார்.

# சைட்டம் மூடப்பட வேண்டும்

## தலைவரை எதிர்த்து தயாசிறி கருத்து



**(கொழும்பு)**

**மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் அமைக்கப்பட்ட சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை மூடிவிட வேண்டும் என விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.**

இக்கல்லூரிக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும்.

அங்குள்ள மாணவர்களுக்கு மாற்று நடவடிக்கை தொடர்பில் வழிகாட்ட வேண்டும்.

இந்தப்பிரச்சினை தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்யப்படுவதாயின் எதிர்காலத்தில் நாம் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டி வரும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். சைட்டம் அது மூடப்பட மாட்டாது எனவும், அதனை நடத்திச் செல்வதில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் கொள்கையளவில் தீர்மானம் எடுத்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ள நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவர் சைட்டம் மூடப்பட வேண்டும் என கருத்துத் தெரிவித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (இ-3)

# இந்.பிரதமர் மோடியின் பாதுகாப்புக்காக உலங்கு வானூர்திகள் கொழும்பு வருகை



(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக நான்கு சிறப்பு உலங்கு வானூர்திகள் நேற்று முன்தினம் கொழும்புக்கு வந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஐ.நா வெசாக் கொண்டாட்டங்களில்பங்கேற்பதற்காக நாளை பிற்பகல் கொழும்பு வரவுள்ளார்.

இலங்கையில் தங்கியிருக்கும் போது, இந்தியப் பிரதமருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் ஏற்கனவே கொழும்பு வரத் தொடங்கியுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக, இந்தியப்பிரதமரின் பாதுகாப்பு அணியில் உள்ள நான்கு எம்.ஐ-17 சிறப்பு உலங்கு வானூர்திகள் நேற்று முன்தினம் டில்லியிலிருந்து கொழும்பு வந்துள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலையில் விமானிகள், மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் 49 பேருடன், டில்லியில் இருந்து இந்த நான்கு உலங்குவானூர்திகளும் புறப்பட்டிருந்தன.

இந்தியப் பிரதமர் இலங்கையில் தங்கியிருக்கும் போது அவரது பயன்பாட்டுக்காகவும், பாதுகாப்புக்காகவும் இந்த உலங்குவானூர்திகள் பயன்படுத்தப்படும். (இ-7)

# இரட்டைக் குடியுரிமையுடைய எம்.பிக்களின் விபரங்களைக் கோருகிறார் உதய கம்மன்பில

(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரங்களைத் தருமாறு இலங்கை குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம், கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

தகவல் உரிமைச் சட்டத்தின் கீழேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

கூட்டு எதிரணியைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க இரட்டைக் குடியுரிமை கொண்டவர் என்பதால், நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கத் தகுதியற்றவர் என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்திருந்தது.

அதேவேளை, மேலும் பல இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக அமைச்சர் தயாசிறி ஜெயசேகர கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே, குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம், இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரங்களை, தகவல் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி, உதய கம்மன்பில கேட்டுள்ளார். (இ-7)

## ராஜிதவை பதவி நீக்குவதற்கு சு.கவுக்கு அதிகாரம் கிடையாது

### அமைச்சர் தயாகமகே தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவை இணைப் பேச்சாளராக பதவி வகிக்கும் அமைச்சர் ராஜித சேனாரட்னவை பதவி நீக்குவதற்கு சுதந்திரக் கட்சிக்கு அதிகாரம் கிடையாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தீர்மானம் எடுப்பார். சுதந்திர கட்சியினர் நீக்குவதற்கு ராஜித சேனாரட்ன ஒன்றும் சுதந்திரக் கட்சியின் ஊடக பேச்சாளர் கிடையாது.

சுதந்திரக் கட்சியினருக்கு நினைத்த மாதிரி செயற்பட இடமளிக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான தயா கமகே தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் பத்தரமுல்லை வொட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக அமைச்சர் தயா கமகே கலந்து கொண்டார். இதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## பௌத்த தர்மத்தை இழிவுபடுத்திய விமல்

### அஸாத்சாலி கடும் விசனம்



(கொழும்பு)

வெசாக் தினத்தில் மஞ்சள் கொடியை அகற்றி கறுப்புக்கொடி தூக்குமாறு தெரிவித்துள்ளதன் மூலம் விமல் வீரவன்ச பௌத்த தர்மத்தை இழிவுபடுத்தியுள்ளார்.

புத்தி பேதலித்துப்போனவர்களால் மாத்திரமே இவ்வாறான கருத்துக்களை தெரிவிக்க முடியும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி தெரிவித்தார்.

சர்வதேச வெசாக் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி வருவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்வகையில்பௌத்த மக்கள் மஞ்சள் கொடிகளை கழற்றி கறுப்புக் கொடிகளை தொங்கவிடுமாறு விமல் வீரவன்ச தெரிவித்துள்ள கருத்து தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## மாதக் கடைசியில் ஒரு மனநிலை!

பர்ஸ்சில் கனமும் வங்கியில் பாலன்ஸும் இருந்தால் அந்தத் தெம்மே தனிதான்.

இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் இவை இல்லை என்பதற்காக நாம் காற்றிறங்கிப் போய்விடக் கூடாது.

நம்மில் பெரும்பாலானவர்களுக்கு மாதக் கடைசி உண்டு. அவ்வளவு ஏன் – முதல் மூன்று திகதிகளில் ஆடித் தீர்த்துவிட்டு இருபத்தேழு நாட்களையும் சோக மயமாகவும் ஆத்திரத்தோடும் ஆற்றாமையோடும் ஓட்டுகிறவர்கள் அநேகர்!

நம் சந்தோஷத்தை நிர்ணயிக்கும் விடயம் பணமாக இருக்கலாம். ஆனால் பணம் மட்டும் நம் சந்தோஷத்தை நிர்ணயிக்கும் அம்சம் என்று பலரும் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதால்தான் சுற்றத்தோடும் சுற்றியிருப்பவர்களோடும் ஏகப்பட்ட கருத்து வேறுபாடுகள்; தகராறுகள்.

மனைவியும் பிள்ளைகளும் கூட முதல் திகதியன்று பழகுகிற மாதிரியா மற்ற திகதிகளில் பழகுகின்றனர்? மனைவியின் முகத்தில் காணப்பட்ட அந்தப் புன்னகை எங்கே? அப்பா அப்பா என்று குழைந்த அந்த வாஞ்சை இன்று எங்கே?

குடும்பத் தலைவனுக்கே கூட மாதக் கடைசியில் செலவு வைக்கும் பிள்ளைகள் மீதும், விருந்தினர் மீதும் கோபம் வேகமாய் வருகிறது.

இந்தச் சனியன் மாதக் கடைசியன்று பார்த்துத் தானா படுக்கையில் விழணும்? என்று உடம்புக்கு முடியாத பிள்ளையைத் திட்டுகிறான்.

ஏண்டி! உன் தம்பி முதல் வாரம் வந்து டேரா போடப்படாதா? எப்பயடி ஊருக்குப் புறப்படுகின்றான் அவன்? கேளுடி! என்று வீடு தேடி வந்த மைத்துனனை விரட்டும் மனநிலையும் சேர்ந்து கொண்டு விடுகிறது.

கையில் காசு இல்லாத போது நாம் ஏன் நம் நிதானத்தை இழந்து விடுகின்றோம் என்று ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டும். இந்த நினைப்பு நம் தவறுகளைக் களையும். நன்மையில் முடியும்.

மாதக் கடைசி பழகிப் போன ஒன்று தானே? அது நமக்குப் புதிதா என்ன? அதற்காக நாம் ஏன் சோர்ந்து காற்றிறங்கியும் போக வேண்டும்? சோக வாரம் கொண்டாட வேண்டும் என்று என்ன கட்டாயம்?

துன்பங்களுக்கும் சோகங்களுக்கும் நாம் பழக்கப்பட வேண்டும். கூடவே மாதக் கடைசி என்று ஏதும் இல்லாதபடி புத்திசாலித்தனமாக பிழைக்கவாவது வழி தேட வேண்டும்.

மாறாக, மனிதத்தன்மைகளைத்தொலைத்துவிட்டு, மாதக்கடைசியில் நாயாகவும் பேயாகவும் நடந்து கொள்வதை விட்டொழிக்க வேண்டும்.

நம் குணத்தையும் சுபாவத்தையும் நம்மிடம் உள்ள தொகையோ, நம்மிடமிருந்து போய் விடும் தொகையோ நிர்ணயிப்பதாக அமைந்துவிடக் கூடாது.

பணத்தை நாம்தான் ஆதிக்கம் செலுத்த வேண்டும். மாறாக எப்போது அது நம்மை ஆதிக்கம் செலுத்துகின்றதோ, அப்போதே நாம் ஒருவழி ஆகிவிட்டோம் என்றுதான் பொருள்!


**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் -பகுதி 1


(05.05.2017 அன்று பிரசுரிக்கப்பட்ட பகுதி-1 இன் தொடர்ச்சி)

♦ வினாக்களில் நான்கு அடைப்புக்களில் மூன்றில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. ஓர் அடைப்பில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே அத்தகைய ஒற்றுமை இல்லை. அந்த அடைப்பினைத் தெரிவு செய்க.

10. 1) 2) 3) 4)



11. 1) 2) 3) 4)



12. 2kg சீனியின் விலை = 1 kg கடலையின் விலை
2kg கடலையின் விலை = 1 kg பால்மா பைக்கற்றின் விலை

எனின் பின்வரும் அட்டவணைக்கேற்ப கூடுதலான பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?


| அஜித் | கமல் | குமார் | மயூரன் |
|---|---|---|---|
| 2kg சீனி | 1kg சீனி | 2kg சீனி | 3kg சீனி |
| 1kg கடலை | 2kg கடலை | 2kg கடலை | 3kg கடலை |
| 1kg பால்மா | 3kg பால்மா | 2kg பால்மா | 1kg பால்மா |

1) அஜித் 2) கமல் 3) குமார் 4) மயூரன்

13. மேலுள்ள அட்டவணைக்கேற்பக் குறைந்தளவு பண்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?
1) அஜித் 2) கமல் 3) குமார் 4) மயூரன்

1 போத்தல் நல்லெண்ணெயின் நிறை = 2 போத்தல் தேங்காய் எண்ணெயின் நிறை
1 போத்தல் தேங்காயெண்ணெயின் நிறை = 2 போத்தல் மண்ணெண்ணெயின் நிறை

14. அவ்வாறாயின் எந்தப் பைகளில் சமமான நிறைகள் உள்ளன.





1) 1 உம் 2 உம் 2) 2 உம் 3 உம் 3) 3 உம் 4 உம் 4) 1 உம் 4 உம்

15. மேலுள்ள அட்டவணைக்கேற்ப குறைந்தளவு நிறையுள்ள பை எது?
1) 1 ஆவது 2) 2 ஆவது 3) 3 ஆவது 4) 4 ஆவது

ஒரு நகரத்தில் பாடசாலை, வைத்தியசாலை, வாசிகசாலை, பஸ் நிலையம் அமைந்துள்ள திசைகளும் தூரங்களும் :-
பாடசாலை வைத்தியசாலைக்கு ஈசான (வடகிழக்கு) மூலைத்திசையில் 80 மீற்றர் தூரத்தில், வாசிகசாலை பாடசாலைக்கு வாயு (வடமேற்கு) மூலைத்திசையில் 100 மீற்றர் தூரத்தில், பஸ்நிலையம் வாசிகசாலைக்கு நிருதி (தென்மேற்கு) மூலைத்திசையில் 80 மீற்றர் தூரத்தில், வைத்தியசாலை பஸ் நிலையத்துக்கு அக்னி (தென்கிழக்கு) மூலைத்திசையில் 100 மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளன.

16. வரைபடத்திலுள்ள பெட்டிக்குள் சேவை நிலையங்களின் பெயர்களை எழுதுக.



17. மேலே வரைபடத்தின் பக்கங்களில் உள்ள புள்ளிக் கோடுகளில் தூரங்களைக் குறிக்குக.

♦ ஒரு வகுப்பிலுள்ள ஐந்து பிள்ளைகளின் ஒரு மாதத்திற்கான வகுப்பு வரவு ஒழுங்கு கீழே அடைப்புக்குள் காணப்படுகின்றன.

கமலன் 21 நாட்கள், இந்திரா 22 நாட்கள், அகமட் 18 நாட்கள், சந்திரா 17 நாட்கள், நிரோசா 19 நாட்கள்.

18. வகுப்பு வரவின் ஏறு வரிசையில் பெயர்கள் உள்ள வரிசையைத் தெரிவு செய்க.
1) கமலன், இந்திரா, நிரோசா, அகமட், சந்திரா
2) சந்திரா, இந்திரா, நிரோசா, அகமட், கமலன்
3) சந்திரா, நிரோசா, அகமட், இந்திரா, கமலன்
4) சந்திரா, அகமட், நிரோசா, கமலன், இந்திரா

♦ அவ்வைந்து மாணவர்களின் பிறந்த தினங்கள்

கமலன் 2003 - 07 - 26 நிரோசா 2003 - 03 - 04
அகமட் 2004 - 06 - 18 இந்திரா 2003 - 12 - 16
சந்திரா 2004 - 01 - 10

19. இதற்கேற்ப சரியான கூற்று யாது?
1) அகமட் சந்திராவிலும் மூத்தவன்
2) இந்திராவிலும் கமலன் மூத்தவன்
3) நிரோசா அகமட்டிலும் இளையவன்
4) கமலன் சந்திராவிலும் இளையவன்

20. இதற்கேற்ப பிழையான கூற்று யாது?
1) அனைவரிலும் மூத்தவள் நிரோசா
2) அனைவரிலும் இளையவன் அகமட்
3) அனைவரிலும் இளையவள் இந்திரா
4) மூவரிலும் மூத்தவன் கமலன்

♦ 2013 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும்.

21. 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளின் எண்ணிக்கைகள் முறையே.
1) 4, 5, 5 2) 4, 5, 4 3) 5, 4, 5 4) 4, 4, 5


22. 2013 ஆம் ஆண்டு சாதாரண வருடம் ஆகும். அதன்படி அவ்வாண்டிலுள்ள திங்கள், செவ்வாய்க் கிழமைகளின் எண்ணிக்கைகள் முறையே
1) 53, 52 2) 52, 52 3) 52, 53 4) 53, 53


23. 2013 ஆம் ஆண்டு 21 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தமாகும். இதற்கேற்ப 2009 இல் பிறந்த உமது தங்கை எத்தனையாம் நூற்றாண்டின் எத்தனையாம் தசாப்தத்தில் பிறந்தாள்?
1) 20 ஆம் நூற்றாண்டு முதல் தசாப்தம் 2) 21 ஆம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்
3) 21 ஆம் நூற்றாண்டு முதல் தசாப்தம் 4) 20 ஆம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்


♦ ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.


24. A - கடன் வாங்கி B - கார் வாங்க C - கமலனுக்கு கார் விருப்பம்
D- பணம் இல்லை E - கார் வாங்கினான்
1) B, D, C, A, E 2) D, B, A, E, C 3) C, B, D, A, E 4) C, B, A, E, D


25. A - இன்றைக்கு மட்டும் B- வாங்குங்கள் நாளைக்கு C - வாங்க முடியாது
D - உடனே விரைந்து வந்து E - மலிவு மலிவு
1) D, B, A, E, C 2) E, D, C, B, A 3) E, A, D, B, C 4) A, E, D, C, B

26. 
முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்
1) இரு மடங்கு 2) மூன்று மடங்கு
3) நான்கு மடங்கு 4) ஐந்து மடங்கு


27. 
முழு உருவின் சுற்றளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின்
1) இரு மடங்கு 2) மூன்று மடங்கு
3) நான்கு மடங்கு 4) ஐந்து மடங்கு


28. 
முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்
1) 20 மடங்கு 2) 8 மடங்கு
3) 12 மடங்கு 4) 16 மடங்கு

29 
இவ்வுருவை அரியம் ஆக்குவதற்குத் தேவையானது?
1) 1 சதுரம், 1 முக்கோணி 2) 2 செவ்வகங்கள், 1 முக்கோணி
3) 1 செவ்வகம், 1 முக்கோணி 4) 2 செவ்வகங்கள், 2 முக்கோணிகள்

30. 
இவ்வுருவை கனவுரு ஆக்குவதற்குத் தேவையானது
1) 2 சதுரங்கள், 2 செவ்வகங்கள் 2) 2 சதுரங்கள், 1 செவ்வகம்
3) 1 சதுரம், 1 செவ்வகம் 4) 1 சதுரம், 2 செவ்வகங்கள்

இவ்வுருவை அமைப்பதற்கு கம்பியொன்றில் வளைக்கவேண்டிய சரியான முறை

31. 


32. 


♦ கீழே உள்ளவற்றில் பொருத்தமான உவமானத்தைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.
கண்சிமிட்டும் குழந்தையைப் போல்
பெருக்கெடுத்த ஆறு போல்
நீல வர்ண ஆடை விரித்தாற் போல்
பச்சைக் கம்பளம் விரித்தது போல்
கும்பல் கும்பலாக குவித்துவிட்ட பஞ்சுக் குவியல்கள் போல்
பால் போல் வெண்மையாக.

33. தேயிலைத் தோட்டங்கள் .................... காட்சியளித்தது.
34. பெருமழை வெள்ளம் .................... பாய்ந்தது.
35. பூரண சந்திரன் .................... காட்சியளித்தது
36. ஆகாயம் .................... காட்சியளித்தது
37. வானில் தோன்றிய முகில் .................... தோன்றியது.
38. நட்சத்திரங்கள் .................... மின்னியது.

♦ 39 ஆம் 40 ஆம் வினாக்களில் உள்ள சொற்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல் எழுதுக.

39. அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, நான், தங்கை, தம்பி ..................
40. மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா ..............................

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் -பகுதி 2

பின்வரும் கதைப்பாடலை வாசிக்க

சற்று நேரத்தில் பிட்டுக்காரி வந்தாள். பிட்டையும் வடையையும் பெரிய பையன் தட்டில் வாங்கினான். அவற்றை ஆவலுடன் தின்னத் தொடங்கினான். அப்பொழுது என்ன நேர்ந்தது?

கவிஞர் கூறுகிறார்,

“வடையின் சுவையோ ‘விடேன் விடேன்’ என்றது
கொல்லை நோக்கிச் செல்லவும் துடித்தான்.
மெல்லும் வடையை விழுங்கவும் துடித்தான்.
வில்லம்பு போல மிக விரைவாக
நடுவிற் கிடந்த நாயை மிதித்துப்
படபடவென்று பானையைத் தள்ளிக்
கன்றின் கயிற்றால் கால் தடுக்குற்று
நின்ற பசுவின் நெற்றியில் மோதி
இரண்டு பற்கள் எங்கேயோ போட்டுப்
புரண்டெழுந்தோடிப் போனான் கொல்லைக்கு”
எப்படியிருக்கிறது இக்காட்சி!
பிட்டையும் தின்னவில்லை, பல்லும் போயிற்று.

01. இக்கதைப் பாடலை நன்றாக வாசித்த பின் இக்கதையை உமக்குப் புரிந்த வரையில் நான்கு வாக்கியங்களாக எழுதுக.
1) ...............................................................................
2) ...............................................................................
3) ...............................................................................
4) ...............................................................................

02. பாடலில் உள்ள சொற்களின் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்க.
1) கொல்லைப்பக்கம் 1. கழிவறை 2. சமயலறை 3. படிப்பறை
2) புரண்டெழுந்து 1. நித்திரைவிட்டெழுந்து 2. விழுந்தெழுந்து 3. பாய்ந்து விழுந்து

03. பாடலில் உள்ள உவமானத்தை எழுதுக. ...............................................


04. பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.
1) எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.......................................
2) நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது.............................

♦ அடைப்பினுள்ளே இருக்கும் சொற்களை மாத்திரம் பயன்படுத்திச் சரியான கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ( ஒரு சொல்லை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்துக.)

| |
|---|
| பழமும் / இல்லை / என்பவர் / அதன் / வேடிக்கை/கயிற்றை / கழுத்தில் / லூயிபாஸ்ட்டர் / எனக்கு / ஆவார் /புகழ்பெற்ற / பார்த்தனர் / கிளியை / கட்டிக் / பறக்கவிட்டு / விஞ்ஞானி/ பாலும் / தேவை |

5...............................................................................
6...............................................................................
7...............................................................................

8.

01) THIS IS A ..................................................

02) WHAT IS THIS? ..........................................

09. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
நீர் பிறந்த இடம் எது? ...............................................

10. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
ஓயாகே கம மாத்தறதா? ...............................................

11. “விரைந்து வாருங்கள்” என்னும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக ...............................................

12 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடு இடுக

12. உருவில் உள்ள தாவரத்தின் பெயர்

1) ஆமணக்கு 2) வேம்பு 3) கண்டங்கத்தரி

13. நெல் அறுவடை செய்வதற்கு உகந்த நிலை
1) கதிர் முற்றிப் பச்சை நிறமாக மாறியிருத்தல்.
2) கதிர் முற்றி மஞ்சள் நிறமாக மாறியிருத்தல்.
3) கதிர் விரிந்து சாம்பல் நிறமாக மாறியிருத்தல்.

14. சிக்கனமான மின்சாரப் பாவனைக்கு உகந்த மின்குமிழ் எது?
1) CFL பல்புகள் 2) TUBE பல்புகள் 3) தங்கிதன் பல்புகள்

15. காற்று வீசும் திசையை அறிவதற்கு உகந்த செயல்முறை யாது?
1) புகைக்கும் சாம்பிராணிக் குச்சியின் புகை செல்வதை அவதானித்தல்.
2) கொடியில் காயும் ஈர உடைகள் அசைவதை அவதானித்தல்.
3) உடல் குளிர்வதைக் கொண்டு கண்டறிதல்.

16. மகாவலி கங்கை கடலுடன் சங்கமிக்கும் பிரதேசம் எது?
1) களனி 2) திருகோணமலை 3) மட்டக்களப்பு

17. குழந்தைகள் அருந்துவதற்கு தகுந்த பால்மா வகை எது?
1) முழுஆடைப்பால்மா 2) கொழுப்பகற்றப்பட்டபால்மா 3) ஆடையகற்றப்பட்ட பால்மா

18. இலங்கைத் தீவு அமைந்துள்ள சமுத்திரம் எது?
1) பசுபிக் சமுத்திரம் 2) இந்து சமுத்திரம் 3) ஆட்டிக் சமுத்திரம்


19. பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளை அழிப்பதற்கு உகந்த முறை அல்லாதது எது?
1) பாவட்டை, புகையிலை, வேப்பச் சாற்றைத் தெளித்தல்
2) சவர்க்கார கரைசல், சுண்ணாம்புக் கரைசல், மஞ்சள் நீர் தெளித்தல்.
3) நத்தைகளின் இனவிருத்தியைக் கூட்டுதல்.

20. நீரினுள் அமிழ்ந்து விபத்துக்குள்ளானவருக்கு அளிக்கப்பட வேண்டிய முதலுதவி அல்லாதது எது?
1) வயிற்றுப் பகுதியை அமுக்கி நீரை வெளியேறச் செய்தல்.
2) விபத்துக்குள்ளானவரின் வாயில் எமது வாயை வைத்து காற்றை இழுத்து ஊதி செயற்கைச் சுவாசத்தை ஏற்படுத்துதல்.
3) வயிற்றுப் பகுதியை ஈரத்துணியினால் இறுக்கிக் கட்டுதல்.

21. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வீட்டின் மூலைகளில் சிலந்திகள் அமைத்த வலைகள் தூசிகள் படிந்து ஒட்டடை ஆக மாறும்?
1) வீட்டில் அதிகமானவர்கள் தங்கி இருப்பதனால்
2) வீட்டைப் பயன்படுத்தாது அதிக காலம் பூட்டி வைப்பதனால்.
3) எவராவது சிலந்திக்கு தொந்தரவு செய்ததனால்

22. சந்திகளில் கடமையில் நிற்கும் இப்பொலிஸாரின் சைகையின் கருத்த யாது?


1) முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.
2) பாதைசாரிகள் பாதையைக் கடந்து செல்லுங்கள்.
3) முன்னாலிருந்து வரும் வாகனங்கள் செல்லலாம் பின்னாலிருந்துவரும் வாகனங்களை நிறுத்தவும்.

23. இவ்வுருவின் பயன்பாடு யாது?

1) சுவரின் நிலைக்குத்துத் தன்மையை பேணுதல்.
2) தரையின் கிடைத்தன்மையைப் பேணுதல்.
3) படிக்கற்களின் உயரங்களை சீராக்கல்.


24. இவ் அடையாளத்தின் கருத்து யாது?

1) சக்கர நாற்காலியில் உள்ளவருக்கு உதவி செய்யவும்.
2) வலது குறைந்தவர் முன்னுரிமை வழங்கவும்
3) ஓட்ட வீரர் உற்சாகப்படுத்தவும்.

25. சூரிய நமஸ்காரத்தில் முதல் நிலையாகவும் இறுதி நிலையாகவும் அமைவது எது?

1) 
2) 
3) 
4) 

26. மின்சுற்றுக்களில் ‘S’ எனும் ஆளியை இணைப்பதன் மூலம் ஒளிரக் கூடியது எது?



1) 2) 3) 4)

சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

27. “முப்பதாயிரத்து முந்நூற்று முப்பத்தாறு” என்பதை இலக்கங்களில் எழுதுக.
...............................................................................

28. ஒரு வாகனத்தின் தூரமானியின் இரு வேறு நிலைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 0 | 6 | 3 | 7 | 8 | 4 | 2 | km |

முதல் நிலை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 0 | 6 | 3 | 8 | 8 | 6 | 7 | km |

இரண்டாம் நிலை

ஒரு குறித்த வருடத்தின் தை மாதம் முதலாந்திகதி முதல் மானி நிலையும், மாசிமாத முதலாந்திகதி இரண்டாம் மானி நிலையும் காணப்பட்டது. ஒரு மாத காலத்தினுள் ஓடிய தூரம் எவ்வளவு? ......................................

# இந்தியப் பிரதமர் மோடியின் வருகையில் அரைவேக்காடுகளின் அரசியல் வேகாது

## இ.தொ.கா. கூறுகிறது

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின், மலையகத்துக்கான விஜயத்தை வைத்துக் கொண்டு சிலர் அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அவ்வாறான அரைவேக்காடுகளின் அரசியல் மோடியின் வருகையைத் தடுக்காது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நோர்வூட் பொது மைதானத்தில் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டத்துக்கு வருகைதரும் காங்கிரஸின் ஆதரவாளர்கள், மைதானத்துக்குள் எவ்வழியாக நுழைய வேண்டும், எவ்விடத்தில் அமரவேண்டும், எவ்வழியாக வெளியேறவேண்டும் என்பது தொடர்பில் ஆராய்வதற்காகச் சென்றிருந்தமை ஒன்றும் தப்பில்லை என்றும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நோர்வூட் நகரில், அமைச்சர் திகாம்பரத்துக்கும் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கும் இடையில் ஞாயிற்றுக் கிழமை இரவு ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை கொட்டகலை காங்கிரஸ் தொழிற்பயிற்சி நிலையத்தின் கேட்போர்கூடத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நேற்று முன்தினம் நடத்தியது.

இதில், காங்கிரஸின் உப-தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான கணபதி கனகராஜ், அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வெள்ளையன் தினேஸ், நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சதாசிவம், இளைஞர் அணித் தலைவர் ராஜமணி பிரசாத் ஆகியோர்கலந்து கொண்டனர்.

அங்கு, கணபதி கனகராஜ் கருத்து தெரிவிக்கையில்.

"இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தின் போது முன்னெடுக்கப்படும் நிகழ்வுகள் தொடர்பில், மக்கள் பிரதிநிதிகள் ஆகிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். அதனால் தான் நோர்வூட் மைதானத்துக்கு நாங்கள் ஞாயிற்றுக் கிழமை சென்றிருந்தோம்.

நோர்வூட் மைதானத்தை பார்வையிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது, அமைச்சர் திகாம்பரத்தின் வாகனத் தொடரணி, நோர்வூட் நகரை வந்தடைந்தது.

சுமார் 15 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் வரிசையாக வந்தன. அதிலொரு, அதாவது, அமைச்சர் திகாம்பரம் பயணித்த வாகனத்துக்கு பின்னால் வந்த வாகனம், ஊவா மாகாண அமைச்சர் தொண்டமானின் வாகனத்துக்கு குறுக்காக நின்றது.

அதிலிருந்து 10 அல்லது 15 பேர் இறங்கினர். அவர்கள், வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

நாங்கள், வாய்த்தர்க்கத்துக்குச் செல்லவில்லை. பிரச்சினை எதுவாக இருந்தாலும் சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளவே முயன்றோம்.

நோர்வூட் நகரத்தில் உள்ள பேருந்து தரிப்பிடத்துக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றமையால், அங்கிருந்தவர்கள் பலரும், நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

மோடியின், விஜயத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான உரிமை எங்களுக்கும் உண்டு. இது கட்சியொன்றினால் ஏற்பாடு செய்யும் நிகழ்வல்ல. இரு நாடுகளுக் கிடையிலான நிகழ்வுகள் ஆகும்.

ஆதலால் இங்கு கட்சி பேதமின்றி, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதைவிடுத்து, இவ்வாறான சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுவது சிறந்தது அல்ல" என்றார். (இ-7)

# சிறை; பேருந்து; சூடு மேலும் இருவர் கைது

களுத்துறையில் சிறைச்சாலை பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துருகிய பகுதியில் வைத்தே குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று கைது செய்துள்ளனர் என பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

மேலும், களுத்துறை பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் சிறைச்சாலை பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட ஏழு பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முன்பள்ளியின் விளையாட்டு விழா



யாழ்.சரசாலை வடக்கு பாலர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

முன்பள்ளி முகாமைத்துவ குழுத்தலைவர் திருமதி நளாயினி சத்தியசங்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்துகொண்டார்.

சிறப்புவிருந்தினர்களாக ஓய்வு நிலை நில அளவையாளர் த.சபாநாயகம், ஜே/317 கிராம உத்தியோகத்தர் ந.ஆறுமுகம், கௌரவ விருந்தினர்களாக சமுர்த்தி உத்தியோகத்தர் இ.புவீந்திரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.தர்சினி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-29)

# தேர்தல் முறைமை தொடர்பாக தீர்மானிக்க ஐ.தே.க.விசேட குழு

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் எந்த முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் கட்சியின் தீர்மானத்தைப் பெறுவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சி விசேட குழுவொன்றை அமைத்துள்ளது.

அமைச்சர் கபீர் ஹாஸிம் தலைமையில் அமைக்கப் பட்டுள்ள இக்குழு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கூடி கலந்துரையாடவுள்ளது.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கபீர் ஹாஸிம், எதிர்வரும் இரு தேர்தல்களையும் ஐ.தே.க. எவ்வாறு முகம்கொடுப்பது என்பது தொடர்பில் விரிவாகப் பேசப்பட்டது. இதற்காக கட்சியை கீழ் மட்டத்திலிருந்து தயார் செய்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது என நேற்று முன்தின கூட்டம் தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை...: Like 1068

அருள்




மாதவி




சாந்தன்




சேரன்




தூயவன்





எழிலிசை




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வெசாக் தினத்தில் கறுப்புக்கொடி சொன்னவர் ஒரு மனநோயாளி

## விமலை நோக்கி விஜயதாஸ விசனம்



(கொழும்பு)

வெசாக் தினத்தன்று கறுப்புக் கொடியை பறக்கவிடுமாறு வேண்டுகோள் விடுத்தவர்கள், மனநோயாளி என புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

புத்தர் பெருமான் பிறந்த தினத்தை கொண்டாடுவதற்கு நாடுமுழுவதும் அரசாங்க அனுசரணையில் இந்த புனித நிகழ்வு குறித்து, எந்த தராதரத்திலுள்ள ஒருவரும் இதுபோன்ற ஒரு கருத்தை மக்களுக்கு தெரிவித்திருக்க மாட்டார்.

இவ்வாறான ஒரு கருத்தை யாராவது தெரிவிப்பதாயின், ஒன்றில் அவர் தேசத்துரோகியாக இருப்பார் அல்லது மந்த புத்தியுடையவராகவோ, மனநோயாளியாகவோ இருப்பார் எனவும் அமைச்சர் கூறினார்.

விமல் வீரவன்ச வெசாக் தினத்தன்று கறுப்புக்கொடியை உயர்த்தி எதிர்ப்புத் தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாக, வெளியாகியுள்ள



தகவல் குறித்து கருத்து தெரிவிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## எம்.பி.பதவியை இழந்த கீதா மேன்முறையீடு

பாராளுமன்ற உறுப்பினராக இருக்க தகுதியில்லை என, மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, கீதா குமாரசிங்க நேற்று உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.

கீதா குமாரசிங்கவுக்கு பாராளுமன்ற உறுப்பினராக இருக்க தகுதியில்லை என, மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 3ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இதனைத் தொடர்ந்து அவரது பாராளுமன்ற உறுப்பினர் ஆசனம் வெற்றிடமாகியுள்ளதாக பாராளுமன்ற செயலாளரால் நேற்று தேர்தல்கள் ஆணைக்கழுவிற்கு அறிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே அவர் நேற்று உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.



பிரபல நடிகையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட வேட்பாளருமான இவர், சுவிட்சர்லாந்து நாட்டின் பிரஜாவுரிமையை பெற்ற ஒருவராகும்.

இதற்கமைய, இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட கீதா குமாரசிங்க, அரசியல் அமைப்பின் அடிப்படையில் இலங்கை பாராளுமன்றில் அங்கம் வகிக்க முடியாது என, கடந்த 3ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. (இ-7)

## ராஜிதவின் பதவியை யாப்பாவுக்கு வழங்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

அமைச்சரவை இணைப் பேச்சாளர் பதவியிலிருந்து ராஜித சேனாரட்னவை நீக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய சில அமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அமைச்சரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படவுள்ளதாக கூறப்படும் புதிய பதவி தொடர்பில், அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில், அமைச்சர் ராஜித வெளியிட்ட கருத்தால், கொழும்பு அரசியலில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.





இந்த நிலையில், மேற்படி விவகாரம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கிய அமைச்சர்கள் சிலர் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை இணை பேச்சாளர் பதவியிலிருந்து, ராஜித சேனாரட்னவை நீக்கி, அவருக்கு பதிலாக அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவை அந்தப் பதவியில் நியமிக்குமாறு சு.க. அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கீதாவின் ஆசனம் காலி; அடுத்தகட்ட நடவடிக்கைக்கு தயாராகிறார் மகிந்த

(கொழும்பு)

கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனம், காலியாகி விட்டதாக, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளதையடுத்து, மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவர் என, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால், கீதா குமாரசிங்கவுக்கு எதிரான தீர்ப்பைத் தொடர்ந்தே, உறுப்பினர் ஆசனம், காலியாகி விட்டதாக நாடாளுமன்ற செயலாளர் அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆ[illegible]னக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகக் கூறினார். கீதா குமாரசிங்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின், காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## மிக் விமான கொள்வனவு விவகாரம்

# உதயங்கவின் வங்கிக் கணக்கு தொடர்பில் விசாரிக்க மேலும் கால அவகாசம் தேவை

## சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

மிக் விமானக் கொள்வனவு விவகாரம் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ள, ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் வங்கிக் கணக்குகள் தொடர்பிலான விசாரணைகளுக்கு மேலும் கால அவகாசம் வேண்டும் என உயர் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.



தனது வங்கிக்கணக்குகள் முடக்கப்பட்டமைக்கு எதிராகவும் கோட்டை நீதவானால் தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள பிடிவிறாந்து ஊடாகவும் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தெரிவித்து உதயங்க வீரதுங்க சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட இதனை நீதிமன்றுக்கு அறிவித்தார்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இந்த வங்கிக் கணக்கு தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட சுட்டிக் காட்டினார்.

சம்பந்தப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்து, நீதிமன்றத்தில் தகவலளிக்கும் வரை கால அவகாசம் வழங்குமாறும், அவர் இதன் போது கோரியிருந் தார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த புவனேக அளுவிஹார, உபாலி அபேரத்ன, அனில் குணரத்ன ஆகிய நீதியரசர்களை உள்ளடக்கிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் வழக்கு விசாரணையை ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

மேலும், அன்றையதினம் சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்கு தொடர்பான நிலவரம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ-7)

# ஐந்து மாத காலப்பகுதிக்குள் 42,141 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த ஐந்து மாத காலப்பகுதிக்குள் 42141 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இதுவரையில் இந்நோய்த்தாக்கத்துக்குள்ளாகி 90 பேர் இறந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளதாகவும் அமைச்சு நேற்று வெளி யிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 42141 பேர் டெங்கு நோயாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். குறித்த நோயினால் பாதிக்கப்பட்ட 90 பேர் இதுவரையில் இறந்துள்ளனர். அதனடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 9218 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 5485 பேரும் காலி மாவட்டத்தில் 1856 பேரும் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2410 பேரும் திருகோணமலையில் 4095 பேரும் கண்டறியப்பட்டுள்ளனர். அத்துடன் களுத்துறையில் 2471 பேரும் குருநாகலையில் 1848 பேரும் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.


இதேவேளை கடந்த வருடத்தின் முற்பகுதியில் பதிவாகிய டெங்கு நோயாளர்களை காட்டிலும் இம்முறை அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 16ஆயிரத்து 500 டெங்கு நோயாளர்களே இனங்காணப்பட்டிருந்தனர்.

குறித்த டெங்கு நோயினை கட்டுப்படுத்துவதற்கு நாடளாவிய ரீதியில் அமைச்சினால் விசேட டெங்குஒழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெக்கப்பட்டு வருகின்றன. இதற்கு டெங்கு ஒழிப்பு விசேட பிரிவு அதிகாரிகள் உட்பட பொலிஸாரும் கடைமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மக்கள் தொடர்ந்தும் டெங்கு நோய் குறித்து விழிப்புணர்வுடன் செயற்படு மாறும் காய்ச்சல் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் சுற்றுப்புறச்சூழலில் டெங்கு பரவும் காரணிகளை அகற்றி தூய்மையாக வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# பொன்விழாக்காணும் வல்வையின் இந்திரவிழா





கிழக்குத் திசையிலே கந்தவனக் கந்தனும் மேற்குத் திசையிலே செல்வச்சந்நிதி முருகப்பெருமானும் வடக்குத்திசையிலே பாக்கு நீரிணையாலும் தெற்குத் திசையிலே நெற்கொழு வைரவரும் புவனேஸ்வரி அம்மனும் மற்றும் வேவில் வீரகத்தி விநாயகர் ஆலயங்களால் சூழப்பட்டதும்,

பெருந்தொகையான பாய்மரக் கப்பல்களைக் கட்டி, அன்னபூரணி என்கின்ற பாய்மரக்கப்பலிலே அமெரிக்கா வரை பயணித்து, திரைகடலோடித் திரவியம் தேடும் கடல் வாணிபம் செய்த பெருமை பெற்றதுமான (இலங்கையின் வடபால் அமைந்துள்ள) வல்வெட்டித்துறை நகரிலே இரண்டு கத்தோலிக்க தேவாலயங்களும் பதினெட்டாம் நூற்றாண்டிலே ஆரம்பிக்கப்பட்ட பல இந்து ஆலயங்கள் உட்பட இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களும் உள்ளன.

அவற்றுள் இராஜ கோபுரங்களோடு நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயமும் வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயமும் வல்வை முத்துமாரி அம்மன் ஆலயமும் விளங்குகின்றன.

இவ்வூர் மக்களின் குலதெய்வமாக வல்வை முத்துமாரி அம்பாள் அருள்பாலிக்கின்றாள். வல்வை நகரிலும் அதன் அயல் ஊர்களிலிலுமுள்ள ஆலயங்களின் அலங்கார உற்சவ மஹோற்சவ காலங்களிலே அவ்வாலயங்களின் உற்சவ மூர்த்திகள் வல்வை மக்கள் சார்பாக நெடியகாடு மோர்மட வரவேற்புக் குழுவினரால் வரவேற்கப்பட்டு (பதினெட்டு ஆலயங்களின் உற்சவமூர்த்திகள் சமுத்திர தீர்த்த உற்சவத்தை நடத்துகின்றதும், இந்தயாவிலேயுள்ள இந்துக்களின் புண்ணிய தீர்த்தமாக விளங்குகின்ற வாரணாசியில் உள்ள காசி தீர்த்தம் அமைந்துள்ள தேசாந்திர ரேகைக்கு (longtitude) அண்மையாக அமையப்பெற்றதும் மற்றும் சித்திரைப் பௌர்ணமி,ஆடி அமாவாசை தினங்களிலே இவ்வூர் மக்கள், தங்கள் அமரத்துவம் அடைந்த தாய், தந்தையர்களுக்கு பிதிர்க் கடன்களைச் செய்தலாகிய எள்ளும் தண்ணீரும் இறைக்கின்ற ஊரணி புண்ணிய தீர்த்தக் கரையினிலே தீர்த்த உற்சவத்தினை நடத்திய பின்பு (வல்வை நகரிலும் அவ்வூரின் அயல் ஊர்களிலுமுள்ள ஆலயங்களின் உற்சவ மூர்த்திகள் வருடந்தோறும் இருபத்தியிரண்டு தடவை தன் வாசலுக்கு வருதலும், பூல ஆலயங்களின் மூர்த்திகள் தன்னிடத்தே தங்கியிருந்து செல்லுதலுமாகிய) திருவருள் நிறைந்த நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்திற்கு வருகைதந்து அவ்வாலயத்திலே தங்கி இரவுவேளை தத்தமது ஆலயத்திற்கு திரும்பிச் செல்வது நூற்றாண்டு காலங்களாக நடைபெற்று வருகின்ற சமய மரபாகும். வல்வையிலே வாலாம்பிகாதேவி சமேத வைத்தீஸ்வரப் பெருமான் கோயில் கொண்டு வீற்றிருக்க அவருக்கு இடபாகத்தே கோயில் கொண்டு (பெருமானின் வடக்கு பிரகாரமும் அம்பாளின் தெற்குப் பிரகாரமும் ஒன்றாக அமைந்த வண்ணமாக) வீற்றிருக்கின்ற பெருமை கொண்ட முத்துமாரி அம்மன், வல்வை நகர் மக்களது குலதெய்வமாக அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் சித்திரை மாதத்து பௌர்ணமி திதியை சமுத்திர தீர்த்த உற்சவமாகக் கொண்டு பதினைந்து தினங்கள்மஹோற்சவம் (திருவிழா) நடைபெறுவது வழமையாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே (1795 ஆம் ஆண்டு) பிரதிட்டை செய்யப்பட்ட முத்துமாரி அம்பாள் பல ஆண்டுகள் தொட்டு சமுத்திர தீர்த்த உற்சவத்திற்காக சித்திரா பௌர்ணமி தினத்திலே வல்வை ஊரணி தீர்த்தக் கரைக்கு வருகின்றாள்.

அவ்வாறு வருகின்ற முத்துமாரி அம்பாளை வல்வை மக்கள் சார்பாக நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் மோர்மட வரவேற்புக் குழுவினர் கடந்த அரை நூற்றாண்டாக வல்வையின் இந்திர விழா என்ற நாமத்தைச் சூட்டி அப் பெருவிழாவைக் கொண்டாடி அம்பாளுடைய திருவருளைப்பெற்று வருகின்றார்கள்.

இந்த இந்திரவிழா தினத்திலே வல்வை நகரம் முழுவதுமே இந்திரலோகம்போலக் காட்சியளிக்கும். வண்ணமாக நகர் முழுவதும் ஆங்காங்கே அலங்கார வளைவுகளும் மற்றும் இந்திர விழாவைக் காணவரும் மக்களின் மனதைக் கவரும்படி வல்வையிலே உள்ள மின் அமைப்பாளர் களோடு வடபகுதியில் உள்ள ஏனைய மின் அமைப் பாளர்களும் வருவிக்கப்பட்டு மின்சார வளைவுகளாலும் மின் குமிழ்களாலும் அலங்கரிக்கப்பட்டும் வட இலங்கையில் உள்ள இசைக் குழுவினர்களோடு (சில ஆண்டுகளில்) தலைநகரிலிருந்தும் தென் இந்தியாவிலிருந்தும் வருவிக்கப்படும் இசைக்குழுவினர்களது நிகழ்வுகளும் எமது கலாசாரத்தின் அம்சமான (பரதக்கலை) பரத நாட்டிய நிகழ்வுகளும் மற்றும் கன்னலும் கமுகும் கதலியும் நிரை நிரை நாட்டி என்கின்ற சரியை வழிபாட்டின் ஓர் அங்கமாக அம்பாள் ஆலயத்திலிருந்து தீர்த்தக் கரை வரை முந்நூறுக்கு (300) மேற்பட்ட கதலியை (குலையோடு கூடிய வாழை மரங்களை) வீதியின் இரு மருங்கிலும் நிரைபட நாட்டி அவற்றிற்கு மின் விளக்குகள் பொருத்தியும், பத்திற்கு மேற்பட்ட தர்ப்பறை வாத்தியங்கள் முழங்கிய வண்ணமாக அம்பாளை அவளுடைய வாசலிலிருந்து வரவேற்றும், இந்திரவிழாவின் மகுடம் சூட்டும் நிகழ்ச்சியான, இப்பகுதி இளைஞர்களால் தயாரிக்கப்படும் பாரம் பரியம் மிக்க கலைத்திறன் கொண்டதுமான அறுபது அடி உயரம் மற்றும் நூறுக் கும் மேற்பட்ட சிறிய புகைக் குண்டுகள்ஆகாயத்தை நோக்கி ஏவுதலும் போன்ற பல நிகழ்ச்சிகளோடு அம்பாள் எழுந்த ருளிவந்து தீர்த்த உற்சவத்தினை நடத்தி அப் புண்ணிய தீர்த்தக் கரையிலே அமைந் திருக்கின்ற மண்டபத்திலே வீற்றிருந்து அடியவர்களுக்கான அர்ச்சனை. ஆராதனைகளைநிறைவேற்றிய பின்பு நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று அங்கே தங்கியிருந்து இரவு ஏழு மணியளவிலே தனது தலம் நோக்கிச் செல்வாள்.

அவ்வாறு எழுந்தருளி ஊர்உலா வந்து அடியவர்க்ளின் துயர்களைக்களைந்து அம்பாள் தனது திருத்தலம்நோக்கி செல்லும் வேளையிலே அம்பாளைத் தரிசிப்பதற்காகவும் இந்திரலோகம் போலக் காட்சியளிக்கின்ற வல்வையின் இந்திரவிழாவைக் கண்டு களிப்பதற்காகவும் இலங்கையின் வடபகுதியில் வாழும் பெருந்தொகையான அடியவர்களும் ஏனைய பகுதிகளில் வாழும் அடியவர்களும் மற்றும் தற்பொழுது புலம்பெயர்ந்து வாழ்கின்ற அடியவர்களுமாக பெருந்திரளான மக்கள் வருகைதந்து வல் வையின் இந்திரவிழா கோலாகலமாகக் கொண் டாடப்பட்டு வருகின்றது

அவ்வாறு கொண்டாடப்பட்டு வருகின்ற இந்திர விழாவானது பொன்விழாக் கண்டுள்ளது. ஆதலால் இவ் வருடம் மேலும் சிறப்பாக நடத்தும் நோக்கத்தோடு அடியவர்கள் மென்மேலும் அலங்கரிக்கின்றார்கள்.

வடமாகாணத்திலே பெருந்திரளான அடியார்கள் வருகை தந்து கொண்டாடப்படும் விழாக்களில் வல்வையில் நடைபெற்று வருகின்ற பொன்விழாக் காணும் இந்திர விழாவும் ஒன்றாகும்.

சிதம்பராக்கல்லூரி முதல் ஊரணி புனித தீர்த்தக்கரை மற்றும் குடியேற்றம் வரை மூன்று கிலோ மீற்றர் வீதியில் அலங்கரிக்கப்பட்டுள்ள , மின் அமைப்பாளர்களது மின் வளைவுகளையும் மின் தோரணங்களையும் மின் அலங்காரங்களையும் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் அலங்கார வளைவுகளையும் பல இடங்களிலும் நடைபெறுகின்ற கலை நிகழ்ச்சிகளையும் காண்பதற்காக 3 கிலோ மீற்றர் தூர பிரதான வீதியிலே அங்குமிங்குமாக மக்கள் நடந்தவண்ணமாக இரசித்துக் கொண்டிருக்கும் அக்காட்சியைக் காண ஆயிரம் கண் வேண்டும். அவ்வாறுநடந்தவண்ணமே பொன்விழாக் கண்ட இந்திர விழாவைக் காணும் மக்கள், நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தை அடைந்ததும் அங்கே தெற்குப் பிரகாரத்திலே அமைக்கப்பட்டிருக்கும் அலங்காரப் பந்தலுக்கு எழுந்தருளி வந்து நெடியகாடு மோர்மட மண்டபப்படி ஆராதனைக்காக நின்றருளும் முத்துமாரி அம்மன் இந்திர விமானத்திலே கொலுவிருக்கும் அழகிய காட்சியைக்கண்டு மெய்மறந்து அம்பாளை துதித்து வணங்கியும், அவ்வீதியிலே இராட்சத புகைக் குண்டு ஆகாயத்தை நோக்கி ஏவப்படும் அரிய காட்சியைக் கண்டுகளித்து மீண்டும் நடந்தவண்ணமே இருப்பர்.

நள்ளிரவுவரை பந்தலிலே நின்றருளும் அம்பாள் அங்கிருந்து நீங்கி வல்வை நகர் வீதி தோறும் வல்வை இளைஞர்களாலும் மக்களாலும் அமைக்கப்படும் மண்டபப்படி நிறைகுட தாக சாந்தி ஆராதனைகளுக்கு திருவருள் புரிந்தபடி தனது திருத்தலம் சென்றருளும் அம்பாளை போற்றி வணங்கி அவள் அருட்கடாட்சத்தைப் பெறுவோம்.

வல்வை மக்கள் சார்பாக நெடியகாடு மோர்மட வரவேற்புக் குழுவினர்.





# வெசாக் வலயங்களில் கண்காணிப்புக் கமரா

ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான வெசாக் வாரத்தில் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்கள், உப நகரங்கள், கிராம பிரதேசங்கள் ஆகியவற்றில் உள்ள பொலிஸ் நிலையங்கள் ஊடாக இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு நகரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட பாதுகாப்பு ஏற்பாட்டின் கீழ், வெசாக் வலயமாக பெயரிடப்பட்டுள்ள தியவன்னாவ, சைத்திய வீதி, ஹுணுப்பிட்டிய - கங்காராமை ஆகிய பிரதேசங்களில் பொதுமக்கள் வருகை மற்றும் வாகன கட்டுப்பாடு என்பவற்றுக்காக மேலதிக பொலிஸார் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்தப் பகுதிகளின் போக்குவரத்தை சீராக்குவதற்காக மேலதிக பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

மேலும், இந்த பிரதேசங்களில் அதிகளவில் மக்கள் வருகைதரும் நிலையில், அங்கு திருட்டு உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடும் நபர்களைக் கைதுசெய்ய பொலிஸார் விசேட நடவடிக்கை எடுக்கவுள்ளனர். இதற்காக சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன், தற்போது கொழும்பு நகரின் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ள சீ.சீ.டி.வி கமராக்களுக்கு மேலதிகமாக, வெசாக் வலயத்தில் சீ.சீ.டிவி கமராகள் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

"இதேவேளை, வெசாக் வலயங்களை பார்வையிட வரும் பொதுமக்கள் தம்முடன் வரும் வயதானவர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும்" என்று பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். அத்துடன் வாகன நெரிசல் காணப்படும் இடங்களில் வாகனங்கள் செலுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் பாதசாரிகள் மற்றும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்தி, போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுக்கு எதிராக கடுமையான முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# பாதுகாப்புக் குறைப்பால் பதறுவோரைக் காண எனக்கு வேடிக்கையாக இருக்கிறது- சந்திரிகா



(கொழும்பு)

"மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை அரசு குறைத்தது பற்றி கூட்டு எதிர்க்கட்சிகள் கூக்குரலிடுவதைக் காண வேடிக்கையாக இருக்கிறது" என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்ததார்.

இது குறித்து அவர் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை அரசு குறைத்திருப்பது குறித்து கூட்டு எதிரணியினர் கூக்குரலிடுகின்றனர். இது எனக்கு வேடிக்கையாகவே இருக்கிறது. இதே நாட்டின் முன்னாள் ஜனாதிபதியொருவரின் பாதுகாப்பை மகிந்த ராஜபக்ஷ முற்றிலும் அகற்றியமை குறித்து இங்கு குறிப்பிடுவது ஏற்புடையதாக இருக்கும் என நம்புகிறேன்.

"இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் கடுமையாகியிருந்த 2005ஆம் ஆண்டு நான் பதவி விலகினேன். புலிகள் ஆக்கிரமிப்பில் இருந்த யாழ்ப்பாணத்தை எனது ஆட்சிக் காலத்தில் மீண்டும் கைப்பற்றி, புலிகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற குறுகிய பரப்புக்குள் கொண்டு வந்தேன். இதனால், என்மீது கடும் கோபம் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் என்னைக் கொல்லப் போவதாக பல உத்தியோகபூர்வ அறிக்கைகளைக் கூட வெளியிட்டனர்.

"அவ்வேளையில், எனது பாதுகாப்புக்காக 300 பாதுகாப்பு வீரர்களையும், பாதுகாப்பு வாகனங்களையும், ஆயுதங்களையும் வழங்க பாதுகாப்பு அமைச்சின் விசேட கமிட்டி முன்வந்திருந்தது. ஆனால், அரசின் செலவைக் குறைக்கும் எனது வழக்கப்படி, அமைச்சு எனக்கு வழங்க முன்வந்த பாதுகாப்பு வசதிகளில் சரி பாதியளவையே நான் ஏற்றுக்கொண்டேன்.

"எனினும், பதினைந்து மாதங்களின் பின், அதாவது 2007ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதமளவில், அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரரும் நாட்டின் மொத்த பாதுகாப்புக்குப் பொறுப்பாகவும் இருந்த அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷவும் சேர்ந்து, எனக்கான பாதுகாப்பை முற்றிலுமாக அகற்ற உத்தரவிட்டனர். அன்று முதல் சுமார் இரண்டு மாதங்கள் எந்தவித பாதுகாப்பும் இன்றியே நான் விடப்பட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான வாக்குப்பதிவு தென்கொரியாவில் ஆரம்பம்



(சியோல்)

தென்கொரியாவில் புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தலின் வாக்குப்பதிவு ஆரம்பமானது. முன்னாள் ஜனாதிபதி மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்ததை தொடர்ந்து அவர் பதவி விலகினார்.


தென் கொரியாவில் ஜனாதிபதியாக இருந்த பார்க் கியூன்-ஹை மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்ததை தொடர்ந்து அவர் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து அங்கு ஜனாதிபதி தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன்படி வாக்குப்பதிவுகள் ஆரம்பமாகின.

பரபரப்பான சூழலில் நடைபெறும் இந்தத் தேர்தலில் மூன் ஜே-இன் மற்றும் அன்-சீயோல்-சூ களத்தில் உள்ளனர். முந்தைய அரசு மூலம் ஏற்பட்டிருக்கும் பின்னடைவை சரி செய்வதாக மூன் தனது பிரசாரத்தின் போது உறுதியளித்திருந்தார். இதோடு அன்-சீயோலும் வெற்றி பெறுவேன் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தென்கொரிய வரலாற்றில் முதல் முறையாக ஊழல் குற்றச்சாட்டை தொடர்ந்து பார்க் கடந்த மார்ச் மாதம் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப் போன்று வாக்குப் பதிவுகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. (இ-7)

# இ.பி.எஸ்.அரசைக் கவிழ்க்கும் ஓ.பி.எஸ்.எண்ணம் நிறைவேறாது

## அமைச்சர் செல்லூர் ராஜு கூறுகிறார்



(சென்னை)

எடப்பாடி அரசை கவிழ்க்கும் ஓ.பி.எஸ். அணியினரின் எண்ணம் நிறைவேறாது என்று நெல்லையில் அமைச்சர் செல்லூர் ராஜு தெரிவித்தார்

தமிழக கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் ராஜு, அமைச்சர் ராஜலட்சுமி ஆகியோர் நேற்று நெல்லை சந்திப்பில் உள்ள அம்மா மருந்தகத்தில் ஆய்வு செய்தனர். பின்னர் அவர்கள் மீனாட்சிபுரம் சன்னியாசி கிராமத்தில் உள்ள கூட்டுறவு ரேசன் கடையில் ஆய்வு செய்தனர்.

அப்போது அமைச்சர் செல்லூர் ராஜு ரேசன் கடையில் பொருட்கள் வாங்க வந்த பெண்களிடம் குறைகளை கேட்டறிந்தார். பின்னர் அமைச்சர் செல்லூர் ராஜு நிருபர்களிடம் தெரிவிக்கையில்

தமிழகத்தில் உள்ள அம்மா மருந்தகத்திலேயே நம்பர் 1 மருந்தகமாக நெல்லை சந்திப்பு மருந்தகம் திகழ்ந்து வருகிறது. இங்கு தரமான மருந்துகள் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழகத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக இது போன்று மேலும் அம்மா மருந்தகங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்ற நாங்கள் அனைவரும் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நல்லாட்சி நடத்தி வருகிறோம். ஜெயலலிதா கூறிய தேர்தல் வாக்குறுதிகள் 55இல் 10 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டன. மீதமுள்ள 45 வாக்குறுதிகளை நிறைவேற்ற தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஜெயலலிதா அறிவித்த திட்டங்களை செயற்படுத்த கூடாது என்று ஓ.பி.எஸ். அணியினர் ஆட்சியை கவிழ்க்க நினைக்கிறார்கள். அது நடக்காது. முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் அரசு 5 ஆண்டுகளும் நீடிக்கக் கூடாது என நினைத்து இடையூறு ஏற்படுத்துபவர்களை ஜெயலலிதாவின் ஆன்மா மன்னிக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
தகைமை/தொழில்: திட்ட பொறியியல்
தொ.இ: B/7301

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா:26செவ் 8 இல்
உயரம்: 5'6"
த்கைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7305

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 48செவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BSc/ அரசதொழில்
தொ.இ: B/7306

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 40செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்
தொ.இ: B/7307

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'
தகைமை/தொழில்:கனடா
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7302

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 53
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/7303

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 12செவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7304

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: G/7312

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

> தீமையை நன்மையால் வெல்லுங்கள்.
> பொய்மையை உண்மையால் வெல்லுங்கள்.
> – கௌதம புத்தபிரான்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புத்தபிரானின் போதனைகளை பின்பற்றுவதே பௌத்த தர்மம்

இன்று வெசாக் பண்டிகை. கௌதம புத்தபிரான் பரிநிர்வாணம் அடைந்த நாள்.

உலகில் உள்ள அத்தனை பௌத்தர்களும் போதிமாதவனை தொழுது வணங்குகின்ற சிறப்புக்குரிய நாள்.

பௌத்தம் என்பதை ஒரு சமயமாக எவரும் பார்ப்பதில்லை. அது ஒரு தத்துவார்த்தம்.

கௌதம புத்தபிரானின் போதனைகள் மனித வாழ்வைச் செம்மையாக்கக்கூடியவை. புத்தபிரானின் போதனைகளை பௌத்தர்கள் மட்டுமே பின்பற்ற வேண்டும் என்ற எந்த நிபந்தனையும் கிடையாது.

எனினும் புத்தபிரான் பரிநிர்வாணம் அடைந்த வெசாக் தினத்தை பௌத்தர்கள் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனராயினும் அந்தளவுக்கு புத்த பிரானின் போதனைகளை அவர்கள் பின்பற்றுகிறார்களா? என்பது கேள்விக்குரியதுதான்.

ஆக, இலங்கையைப் பொறுத்தவரை கௌதம புத்தபிரானின் போதனைகளுக்கு அப்பால் பௌத்தமே மேனிலைப்பட்டுள்ளது.

இலங்கையில் பௌத்த மதம் பரவிய வரலாறுகளே வெசாக் பண்டிகையின் அடிப்படையாக உள்ளது.

தவிர, இலங்கை பௌத்த சிங்கள நாடு. இந்த நாட்டில் வேறு எவரும் உரிமை பாராட்ட முடியாது என்ற சிந்தனையை அமுல்படுத்தும் வகையிலும் வெசாக் பண்டிகைக் கொண்டாட்டங்கள் அமைந்துள்ளன.

மதச் சடங்குகள், சம்பிரதாயங்கள் மனித வாழ்வுக்கு அடிப்படையானவை. அதற்காக கௌதம புத்தபிரானின் போதனைகளை மூடி வைத்துவிட்டு பௌத்த மதத்தை தமக்கான அடையாளமாகவும் நாட்டை தமக்குரியதாக்குவதற்காகவும் காட்சிப்படுத்த முற்படுவது எந்த வகையிலும் புத்தபிரானின் போதனைகளுக்கு உடன்பாடானதல்ல.

இலங்கை என்ற இந்த நாடு பௌத்த பூமி என்றால், பௌத்தர்கள் போர் புரிந்து தமிழர்களை வதைத்தது எந்த வகையில் நியாயமாகும் என்ற கேள்வி எழவே செய்யும்.

இந்த வகையில் இலங்கையைப் பௌத்த நாடாகக் காட்டுவதை மட்டுமே நோக்காகக் கொண்ட பண்டிகைகள், திருவிழாக்கள் எவையும் மனித முன்னேற்றத்துக்கு உதவப் போவதில்லை என்பதே உண்மை.

இந்த உலகில் அனைத்து ஜீவராசிகள் மீதும் கருணை காட்டுமாறு கூறிய கௌதம புத்தபிரானின் உபதேசம் எத்தன்மையது என்பதை அறிந்து வாழ்க்கையில் அதைப் பின்பற்றத் தூண்ட வேண்டும்.


கௌதம புத்தபிரானின் போதனைகள் அமுல்படுத்தப்படுவது மிகவும் அவசியமாகும்.

இதைவிடுத்து இடம்பிடிப்பதாகவும் இந்த நாட்டை பௌத்த நாடாகக் காட்டுவதற்காகவும் கௌதம புத்தபிரானின் உருவச் சிலைகளை ஒவ்வொரு இடங்களிலும் நிறுவுவதால் அவரின் இலக்கு எட்டப்பட மாட்டாது.

எனவே இன்றைய புனிதமான வெசாக் பண்டிகை நாளில் சமய அனுட்டானம் சமயச் சடங்கு அடையாளப்படுத்தல் என்பதைக் கடந்து புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுதல் என்ற பாதையை நோக்கி இந்த நாட்டின் பௌத்த சகோதரர்கள் பயணிக்க வேண்டும்.

இது ஒன்றுபோதும் இலங்கையில் நிலைத்த சமாதானம் ஏற்படுவதற்கு.

# சித்திரா பௌர்ணமியும் சித்ரகுப்தனாரும்



சித்திரா பௌர்ணமி தினத்தன்று சித்திர குப்தன் பிரதான கதாநாயகனாக காணப்படுகிறார். இச்சித்திரை பூரணை தினத்தில் கஞ்சி காய்ச்சி சித்ரகுப்தனுக்கு படிப்பு நிகழ்த்தி இதனை விழாவாக கொண்டாடுகின்றனர். இதேபோல இதே தினத்தில் தாய் இறந்தவர்கள் பிதிர்க்கடனை அதே தினத்தில் விரதமிருக்கும் வழமையும் உள்ளது.

யமதர்மராஜன் முன்னிலையில் பூத உடலைத் துறந்து உயிர்களின் பாவ புண்ணியங்களை தன்னுடைய ஏட்டில் இருந்து படிக்கிறார். சிவபெருமான இக்கணக்குகளை எழுத ஒரு தேவதையை படைக்க எண்ணிய போது சிவன் சக்தி தேவியைப் பார்த்தார். அவர் குறிப்பறிந்து பராசக்தி ஒரு சித்திரம் வரைந்தார். அதற்கு இருவரும் உயிரூட்ட அதில் தோன்றியவரே சித்திரபுத்திரனார். இவருக்கு ஞான சிருஷ்டியை அளித்து ஜீவராசிகள் செயலை கணக்கு எழுதும் பணியை ஒப்படைத்தார். “சித்திரம்” என்பது “ஆச்சரியமானது” என்றும் “குப்தன்” என்பது “இரகசியம்” என்று பொருள் படும். இதில் கணக்கு எழுதும் விதம் ஆச்சரியமாக இருக்கும். அதேவேளை இரகசியத்தை கண்டறிந்து கணக்கு எழுதிவிடுவார். சித்ரகுப்தன் பசுவின் கர்ப்பத்திலிருந்து பிறந்ததால் சித்திரா பௌர்ணமி அன்று பசுநெய், பசும்பால், பசுத்தயிர் கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. இவர் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரப் பௌர்ணமியில் பிறந்தார். காமதேனு மகனாக பிறந்தாலும் தெய்வேந்திரனாலும் இந்திராணியாலும் வளர்க்கப்பட்டார்.

அவசியமானால் எருமைப்பால், எருமைத்தயிர் சேர்த்துக் கொள்ளலாம். சித்திர குப்தனுக்கு தமிழகத்தில் இரண்டு இடங்களில் கோயில்கள் உண்டு. காஞ்சிபுரம் எனும் இடத்தில் தனிக் கோயில், தேனி மாவட்டத்தில் போடி எனும் இடத்தில் ஆலயம் உண்டு. கிராமங்களில் சித்திரா பௌர்ணமியன்று எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள். சித்திரகுப்தனின் மனைவி பிரபாவதி என்று அழைக்கப்படுகிறாள். நவக்கிரகங்களில் ஒன்றான கேதுவுக்கு சித்திரகுப்தன் தான் அதிபதி. கேது நின்ற திசை கேது புத்தியில் துன்பம் அனுபவிப்பவர்கள். சித்திரகுப்தனை வழிபடவேண்டும் என்று கூறப்படுகிறது.

சித்திரகுப்தனார் மிகச் சிறந்த கணக்காளர் என்பதனை கிருபானந்த வாரியார் கூறும்போது கோயில் கும்பாபிஷேகத்திற்கு நன்கொடை வசூல் செய்ய நிர்வாகி வீட்டுக்குச் சென்றார். வீட்டுக்காரர் இன்முகத் துடன வரவேற்று நல்ல காரியத்திற்கு தனது குடும்ப சூழ்நிலையால் பெரியளவு பண உதவி வழங்கமுடியாது எனக் கூறி 50 ரூபாவைக் கொடுத்தார். அடுத்தவீட்டுக்கு இதே நிர்வாகி சென்றார். வீட்டுக்காரியிடம் தான் கும்பாபிஷேகத்திற்கு பணத்திற்கு வந்ததைக் குறிப்பிட்டார். மனைவி கணவனிடம் பணத்திற்கு வந்ததைக் குறிப்பிட்ட கணவன்சாக்குச்சொல்லி வாயிலிலேயே திருப்பி அனுப்பி விட்டிருக்கலாம் எனப் பேசினார். இந்தத் தண்டப் பணத்திற்கு பணம் இல்லை என்று நூறு ரூபா கொடுத்தார். சித்திரகுப்தன் ஞான சிருஷ்டியில் புண்ணிய பாவம பலன் எழுதும்போது நல்ல மனத்துடன் குறைந்த பணத்தை கொடுத்தவருக்கு அதிக புண்ணியமும் இரண்டாவது வீட்டுக்காரர் குண த்தைக் கருத்திற் கொண்டு கூடிய பணம் கொடுத்த போதும் குறைந்த புண்ணியம் எழுதினார். இதிலிருந்து நடுநிலைத் தன்மை புலனாகின்றது.

**கு.கோபிராஜ்**

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வடக்கு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை இரவு 8 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 18.05.2017 இரவு 9 மணிக்கு பெரிய சப்பறத் திருவிழாவும் 19.05.2017 முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழா என்பனவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## சாஸ்திரங்கள்

✦ அதிகார ஆணவத்தால் தர்மம் தவறி கேடு விளைவிப்பவர்களுக்கு அகழியில் வீசி முதலைகளால் குதறப்படுவது.

-வைதரணி (கருடபுராணம்)

✦ பிராணிகளைத் துன்புறுத்துபவர்களுக்கு கொடிய ஆயுதங்களால் உடலைத் துளைப்பது.

-பிராணரோதம் (கருடபுராணம்)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நம்பிக்கை வேண்டும்



✦ கடவுளிடம் நம்பிக்கை இல்லாததே துன்பத்திற்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

✦ எண்ணத்திற்கும், பேச்சிற்கும் ஒற்றுமை இருந்து விட்டால் போதும். வேறு எந்தச் சாதனையும் தேவையில்லை.

✦ உடலைப் பெற்று விட்ட உயிர்கள் அனைத்திற்கும் இன்பம், துன்பம் வந்தே தீரும்.

✦ முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைக்கேற்ப இந்த பிறவியில் வாழ்வின் போக்கு அமைகிறது.

✦ பக்தியுடன் கடவுளின் திருநாமத்தைச் சொல்லுங்கள். எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுதலை கிடைக்கும்.

**விலங்கு விசர் நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்!**

விலங்கு விசர் நோய்/ நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டால் மரணம் நிச்சயம்.
தடுப்பூசி ஏற்றுவதனால் முழுப் பாதுகாப்புப் பெற்றுக் கொள்ளலாம்.
அனைவரும் ஒத்துழைப்போம். எம் பிரதேசத்தில் விலங்கு விசர் நோயை இல்லாதொழிப்போம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் பகுதிநேர கற்கை நெறிகள் இம்மாதம் ஆரம்பிக்கவுள்ளன.

இக் கற்கை நெறிகளாவன, மின்னிணைப்பாளர், டீசல் வாகன இயந்திர திருத்துநர் , குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி திருத்துநர் ஆகும்.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி ,வீரசிங்கம் மண்டபம், இல. 12 , கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் ( 021 222 7949) அல்லது கைதடி A9 வீதியில் உள்ள கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 19.05.2017 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## மகளிர் பொற்கணக்கு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்க சனசமூக நிலையத்தின் வருடாந்த புத்தா ண்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதிஇடம்பெறவுள்ளது.இதனை முன்னிட்டு ஜே/83 கொட்டடி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப் பட்டவர்களுக்கான மகளிர் பொற்கணக்கு (100 பேருக்கு) ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இது தொடர்பில் கொட்டடி கிராமஅபிவிருத்திசங்கத்தலைவரிடம் தொடர்பு கொள்ளுமாறு தலைவர் நா. தனேந்திரம் அறிவித்துள்ளார். (இ-3-134)

## முஸ்லிம் மக்கள் மத்தியில் போதையை பரப்பும் சூழ்ச்சி

மட்டக்களப்பு கல்குடா எதனோல் உற்பத்திசாலை ஆரமபிக்கப்படுவதன் மூலம் கிழக்கில் முஸ்லிம் மக்கள் மத்தியில் போதையை பரப்பும் சூழ்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. மலையகம், வடக்கின் சூழலை கிழக்கிலும் ஏற்படுத்த முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா தௌஹித் ஜமா அத் இஸ்லாமிய அமைப்பு குற்றம் சுமத்தியது.

எதனோல் உற்பத்திச் சாலை அமைப்பதற்கு எதிராக விரைவில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே ஸ்ரீலங்கா தௌஹித் ஜமா அத் இஸ்லாமிய அமை ப்பின் செயலாளர் ரஸ்மின் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

## இலக்கிய சங்கம் நடத்தும் கலை இலக்கிய கூடல்-1

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கலை இலக்கியச் சங்கம் நடத்தும் கலை இலக்கியக்கூடல்–1 இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் கதிர மலைச் சிவன் ஆலய திருமண மண்டபத்தில் கலை இலக்கியச் சங்க உபதலைவர் வைத்திய கலாநிதி அ. ஜெயகுமரன் தலைமையில் இடம்பெறும். (இ-3)

# திக்கம் இளைஞர் சம்பியன்





அல்வாய் விளையாட்டு விழா உதைபந்தாட்ட தொடரின் வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி திக்கம் இளைஞர் அணி சம்பியனாகியது. (க)

# கே.சி.சி வெற்றிக்கிண்ணம் 2017
## இறுதிப் போட்டியில் திருநெல்வேலி சிசி

கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் 24ஆவது ஆண்டாக நடத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் திருநெல்வேலி சிசி அணி, ஸ்ரான்லி அணியை 45 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி சிசி அணி 26.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 176 ஓட்டங்களை பெற்றது.

தர்சிகன் - 15, பிரபு - 12, றொகான் - 40, ராஜ் - 70, ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் புருசோத்மன் - 01, விதூஸன் - 02, மதன் - 04, கலைச்செல்வன் - 03, இலக்குகளை கைப்பற்றினர்.




பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்'ரான்லி அணி 21.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களை பெற்றது.

கணன்ராஜ் - 37, சஜிகரன் - 10, பிரசாந் - 17, பிரசாத் - 15, கம்சிகாந் - 12, ஓட்டங்களை பெற்றனர்.

சுரேந்திரன் - 05, ராஜ் - 01, பிரபு - 01, செந்துரன் - 01, றொகான் - 01 இலக்கினை கைப்பற்றினர்.

இறுதிப் போட்டி 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 8 ஆவது ஆண்டாக நடத்தும் ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்கான, யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு தரவரிசை பட்டியலில் திருநெல்வேலி சிசி அணி 6.21 புள்ளிகளையும், 'ஸ்ரான்லி' அணி 2.31 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# பிரசாந், வேணுகானன் சிறப்பாட்டம்
## வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனாகியது மாலுசந்தி மைக்கல்



பிரசாந் சகலதுறைகளிலும் வேணுகானனின் துடுப்பாட்டத்திலும் அசத்த வதிரி டயமன்ஸ் அணியை மாலு சந்தி மைக்கல் அணி வீழ்த்தி சம்பியனாகியது.

பிரித்தானியா சுவிட்சர்லாந்து ஒன்றியங்களின் ஏற்பாட்டில் நடைபெற்று வந்த அல்வாய் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் யாழ்.பல்கலைக் கழக ஆங்கில விரிவுரையாளரும் அல்வாய் பெரியார் பகுதி அறிவருள் சனசமூக நிலையத்தின் போசகருமான கி.சண்முகநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.

இவ் இறுதிப்போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து மாலு சந்தி மைக்கல் அணி மோதியது. நாணயச்சுழச்சியில் வெற்றி பெற்ற வதிரி டயமன்ஸ் அணி மாலு சந்தி மைக்கல் அணியை முதலில் துடுப்பாட அழைத்தது. இதற்கு அமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மாலுசந்தி மைக்கல் அணி 10 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 82 ஓட்டங்களை பெற்றது.

இதில் வேணுகானன் 17, பிரசாந், அச்சுதன் தலா 12, ரகுவரன் 08, தினோஜன், சபேஷ், வினோஜன், 6 ஓட்டங்களை பெற்றனர், வதிரி டயமன்ஸ் அணியின் பந்து வீச்சு சார்பாக அரவிந் 3, பிரதீஸ் 2, பத்மஶ்ரீ ஒரு விக்எகட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வதிரி டயமன்ஸ் அணி 10 ஓவர்களில் 9 விக்கட்களை இழந்து 28 ஓட்டங்களை பெற்றது. இதில் சுவேந்திரா 12, ராஜராம் 9 ஓட்டங்களை பெற்றனர்.

மாலு சந்தி மைக்கல் அணியின் பந்து வீச்சு சார்பில் பிரசாந் அச்சுதன் தலா 3 தினோஜன் 2, தர்சன் ஒரு விக்கெட்களை வீழ்த்தினர். இறுதியில் 54 ஓட்டங்களினால் வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி அல்வாய் விளையாட்டு விழா வெற்றிக் கிண்ணத்தை மாலுசந்தி மைக்கல் அணி கைப்பற்றியது. இத் தொடரின் தொடர் நாயகன் ஆட்டநாயகன், விருதுகளை மாலுசந்தி மைக்கல் அணி வீரர்களான வினோத் ராஜ், பிரசாந் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (க)



வலிகாமம் கல்வி வலய மட்ட 16 வயதுக்குட்பட்ட ஆண் களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலய அணி இரண்டாம் இடம் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது. அணி வீரர்களுடன் அதிபர் யோ.எ.பங்கிராஸ், உப அதிபர் பொறுப்பாசிரியர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வாலிபர் சங்க உதைபந்தாட்டம்
## நேதாஜி, இளங்கதிர் வெற்றி

வல்வை விளையாட்டுக்கழக அனுமதியூடாக வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் வல்வை உட்பட்ட கழகங்களுக்கிடையில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை தற்பொழுது நடத்தி வருகின்றது.

நடைபெற்ற முதலாவது போட்டியில் சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் நேதாஜி விளையாட்டுக்கழகம் பெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் இளங்கதிர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. போட்டிகள் தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)









திருநெல்வேலி ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் பாரதி சனசமூக நிலையத்தோடு இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டு விழாவில் 07.05.2017 அன்று நடைபெற்ற பெண்களுக்கான சைக்கிள் ஓட்ட நிகழ்வின் பதிவுகள். (க)

## பதிவுள்ள ஒப்பந்த...

வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.

அதேவேளை மாகாணத்தின் கனிய வளங்களை மத்திய அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதனையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 92ஆவது அமர்வு கைதடியிலுள்ள மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது சபையின் உறுப்பினர் ம.தியாகராசா கொண்டு வந்த மேற்படி பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் உள்ள கனியவளங்கள் அனைத்தும் மத்திய அரசு தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் முயற்சியில் உள்ளதால் பல காலமாக அனுமதி பெற்று மணல், கிரவல் எடுக்கும் ஒப்பந்தகாரர்களை நிறுத்திவிடப்பட்டுள்ளனர்.

இதனூடாக வட மாகாண கனிய வளத்தை மத்திய அரசுக்குக் கீழ் கொண்டு வந்து தனியாருக்கு ஒப்பந்தம் செய்து கொடுக்கும் முயற்சியில் மத்திய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

இதனூடாக கொண்டு வந்துள்ள தீர்மானத்தால் வட மாகாணத்தில் உள்ள பதிவு செய்யப்பட்டு கிரவல் மணல் பெற்று வந்த 5000 இற்கும் மேற்பட்ட தொழில் செய்யும் ஒப்பந்தகாரர்கள் பாதிக்கப்பட்டும் அவர்களை அண்டி தொழில் செய்யும் சுமார் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வேலைவாய்ப்பின்றியும் உள்ளார்கள்.

அது மட்டுமல்லாமல் ஒரு லோட் மணல் பெறுவதற்கும் பல ஆயிரம் ரூபாய் கொடுத்து பொது மக்கள் வாங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. வீதிகளை திருத்தம் செய்யும் ஒப்பந்தகாரர்கள் வேலைகளைச் செய்யமுடியாத நிலையில் உள்ளார்கள்.

ஆகவே பாதிக்கப்பட்ட சுமார் 23 ஆயிரம் குடும்பங்களின் நிலையைக் கருத்திற் கொண்டு வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கிரவல் மணல் எடுப்பதற்கு ஏதுவாக தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த நடைமுறையைத் தொடர்ந்து பேண வேண்டும் என ஜனாதிபதியையும் மத்திய அரசின் கனிய வள அமைச்சரையும் சபை கோருவதான பிரேரணையை சபை உறுப்பினர் ம.தியாகராசா கொண்டு வந்தார்.

இதற்கு சபையின் உறுப்பினர்கள் பலரும் ஆதரவான கருத்துக்களை வெளிப்படுத்தி மத்திய அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தனர்.

அத்தோடு நியதிச் சட்டம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. மேலும் வடமராட்சி கிழக்கு, கௌதாரிமுனை போன்ற இடங்களில் இருந்த மணல்கள் எல்லாம் எங்கு சென்றது. முன்னைய காலத்தில் இடம்பெற்ற மணல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் எங்கே சென்று முறையிடுவது எனக் கேள்வியெழுப்பிய கல்வி அமைச்சர் குருகுலராசா, வடக்கு மாகாணத்தில் போதுமான மணல இருப்பதாகவும் அதனை சரியான முகாமை செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் மணல் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. இதனால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இதற்குத் தீர்வைக் காண வேண்டியது அவசியமென்றும் உறுப்பினர்கள் வலியுறுத்தினர். மாகாணத்திற்கு தேவையான மணலை மாகாண சபை பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன் பின்னர் மேற்படி தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (செ-4)

## ஜனாதிபதியுடன்...

ள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜயவிக்ரம தெரிவித்தார்.

இந்த சூழ்நிலை தொடர்பில் ஏனைய நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் மட்டும் தனியாக டெங்கு ஒழிப்பை மேற்கொள்ள முடியாது என அவர மேலும் தெரிவித்தார்.

கொழும்பு , கம்பஹா, களுத்துறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை, குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோய் காரணமாக சுமார் 90 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது சுட்டிக் காட்டத்தக்கது. (செ)

## துப்பாக்கி சூடு...

இதில் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவில் கடமையாற்றும் அதிகாரிகளை இலக்கு வைத்தே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இச்சம்பவத்தில் அதிகாரியொருவர் ,உயிரிழந்த நிலையில் காயமடைந்த ஆறு பேர் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் சிறு பிள்ளையொருவரும் இருப்பதாக மேலும் குறிப்பிடப்படுகின்றது. (செ)

## முல்லைத்தீவின்...

வடக்கு மாகாண சபையின் 92ஆவது அமர்வு கைதடியிலுள்ள மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலையே உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் வளங்கள் அழிக்கப்பட்டிருப்பதுடன் இருக்கின்ற வளங்களும் சுவீகரிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இராணுவமும் முப்படையினருமாக எமது வளங்களை ஆக்கிரமித்தும் அபகரித்தும் வைத்திருக்கின்றன. இதனாலேயே எமது மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை குறிப்பாக எமது முல்லைத்திவு மாவட்டம் இலங்கையிலேயே அதிகம் வறுமையான மாவட்டமாக காணப்படுகின்றது. இதற்குக் காரணம் முப்படையினரும்தான். ஏனெனில் அவர்கள்தான் வளங்களையும் வளமான காணிகளையும் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர். இக்காணிகளை விடுவித்து எமது வளங்களை சுரண்டாது விட்டால் எமது வளங்கள் பாதுகாக்கப்பட்டு எமது மக்களும் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ முடியும். வறுமையிலிருந்து முற்றாக விடுபட முடியும்.

ஆகவே முப்படைகளின் ஆக்கிரமிப்பிலும் அபகரிப்பிலும் இருக்கின்ற தமிழ் மக்களது வளங்களை விடுவிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவ்வாறு செய்தால் எமது மாவட்டம் வறுமையால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக இருக்காது.

அத்துடன் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளோ அல்லது வறுமைக்கான உதவித் திட்டங்களோ அவசியமில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையில் வறுமையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டமே முதலாவதாக காணப்படுகின்ற நிலையில் வறுமை ஒழிப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக ஜனாதிபதி முள்ளிவாய்க்கால் நினைவு நாளான மே 18 ஆம் திகதி அன்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம்செய்யஉள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

## வடக்கு மாகாண...

க்கு மாகாண சபை அமர்வு முதலமைச்சர் இல்லாமலே நடைபெற்றது.

பட்டதாரிகளின் இந்த முறையற்ற செயற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் உட்பட உறுப்பினர்கள் சிலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் நடைபெற்ற நிலையில், அரசாங்க வேலை கோரி கடந்த இரு மாதங்களுக்கு மேலாக யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பட்டதாரிகள் நேற்று 72ஆவது நாளாகவும் போராட்டத்தை தொடர்ந்த நிலையில்,

வடக்கு மாகாண சபையின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது பட்டதாரிகள் மாகாண சபையை முடக்கும் வகையில்,

மாகாண சபையின் மூன்று வாயில் கதவுகளையும் பூட்டி அதன் முன்னால் ஒவ்வொரு குழுவினர்களாக அமர்ந்திருந்தனர். இதனால் பட்டதாரிகள் வாயிற் கதவினை மறித்து போராட்டத்தில் ஈடுபட முன்னர் உள்ளே சென்றவர்கள் தவிர ஏனைய உறுப்பின்ர்கள் அனைவரும் தொடர்ந்து சபை முடியும் மட்டும் வெளியே காத்து நிற்க வேண்டியிருந்தது.

சில உறுப்பினர்கள் வீடு திரும்பியுமிருந்தனர். இதன்போது அங்கு வந்த முதலமைச்சர், பட்டதாரிகளை சந்தித்து கலநதுரையாடினார், அதன்போது பட்டதாரிகள் தமது கோரிக்கைகள் தொடர்பில் முதலமைச்சரிடம் விளக்கமாக கூறியிருந்தனர்.

இதில் முக்கியமான கோரிக்கையாக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் பதவிக்கான பரீட்சையினை உடனடியாக ரத்து செய்து பட்டதாரிகளை அந்த பதவிக்குள் உள்ளீர்க்குமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர்.

அதற்கு இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளருடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் கூறினார். இதன் பின்னர் வடக்கு மாகாண சபையால் இதுவரை வழங்கப்பட்ட நியமனங்கள் தொடர்பில் தெளிவுபடுத்திய முதலமைச்சர், வடக்கு மாகாண பட்டதாரிகளுக்கு நிய மனம் வழங்குவதாக ஜனாதிபதி எமக்கு உறுதியளித்துள்ளார்,

இதேபோன்றுதான் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் உறுதியளித்திருந்தார், அந்த உறுதியை வைத்தே பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க அரசு சம்மதம் தெரிவித்துள்ளதாக கூறியிருக்கலாம்.

எதிர்வரும் 17 ஆம் திகதியன்றும் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளேன். அந்த சந்திப்பிலும் பட்டதாரிகளின் விடயங்களை அவரிடம் கூற முடியும் எனக் கூறினார். இதனை ஏற்றுக் கொண்ட பட்டதாரிகள் முதலமைச்சரை உள்ளே செல்வதற்கு அனுமதித்தனர்.

எனினும் வாயிற் கதவிற்கு அருகாமையில் நின்று போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதார தொண்டர்கள் மூவர் முதலமைச்சர் உள்ளே செல்வதற்கு அனுமதிக்க முடியாது. தமக்கும் உரிய பதில் தரப்பட வேண்டும் என கூறினார்கள்.

அவர்கள் அவ்வாறு கூறியதும், பட்டதாரிகளில் சிலரும் முதலமைச்சரை உள்ளே அனுமதிக்க முடியாது என குரல் கொடுக்க, முதலமைச்சர் மாகாண சபைக்குள் செல்லாது அங்கிருந்து வெளியேறினார். இதனால் முதலமைச்சர் இல்லாமலே சபை அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன் பின்னர் கல்வி அமைச்சர் பட்டதாரிகளை சந்திக்க வந்தபோது பட்டதாரிகள் கூக்குரல் இட்டு பாட்டு பாடியமையால், அவரும் பட்டதாரிகளுடனான சந்திப்பை நிறுத்தி விட்டு சென்றார்.

இந்த குழப்பங்களால் உறுப்பினர்கள் சிலரும் மாகாண சபைக்குள் செல்ல முடியாது வீடு திரும்பினார்கள், வெளியே தாங்கள் நிற்க உள்ளே சபையை நடத்தியமைக்கு தமது விசனத்தையும் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

சபைக்குள், உறுப்பினர்கள் சிலர் உள்ளே வர முடியாமல் நிற்பதை சபையில் சுட்டிக்காட்டி பேசிய எதிர்க்கட்சி தலைவர் தவராசா,

உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி இருந்தார். சபை முடிந்த பின்னரும் பட்டதாரிகள கதவுகளை மூடி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது அலுவலர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட அலுவலர்களுக்கும் பட்டதாரி களுக்குமிடையில் முரண்பாடும் ஏற்பட்டது.

இதன் பின்னர் தம்மை முதலமைச்சர் சந்தித்து உறுதி தர வேண்டும் என பட்டதாரிகளால் கூறப்பட, உறுப்பினர்களான அஸ்மின், சுகிர்தன் ஆகியோர் முதலமைச்சரோடு நேரில் சென்று பேசியிருந்தனர்.

எனினும் முதலமைச்சர் பட்டதாரிகளை சந்திக்க மறுப்பு தெரிவித்துவிட்டார். பின்னர் அஸ்மின், சுகிர்தன் ஆகியோரின் முயற்சியில் பட்டதாரிகள் அமைச்சர்களை சந்திப்பதற்கு சம்மதம் தெரிவித்தனர். இதன் போது பட்டதாரிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் ஏற்றுக்கொண்ட அமைச்சர்கள்,

அபிவிருத்தி உத்தி யோகஸ்தர் பதவிக்கு பரீட்சை இன்றி பட்டதாரிகளை சேர்த்து கொள்வது குறித்து வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுக்கு வடக்கு மாகாண அமைச்சரவை பரிந்துரை செய்வதாகவும் சந்திப்பில் ஈடுபட்டிருந்த விவசாய, சுகாதார, கல்வி அமைச்சர்களினால் கூறப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட பட்டதாரிகள், முதலமைச்சர் - ஜனாதிபதி சந்திப்பில் தமக்கு சாதகமான பதில் தரப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

இதனை அடுத்து பட்டதாரிகளால் மாகாண சபைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. இதேபோன்று சுகாதார தொண்டர்களின் போராட்டம் தொடர்பில் நியாயமான தீர்வொன்றினை பெற்றுத் தருவதாக தெரிவிக்கப்பட்டு அவர்களுடைய போராட்டமும் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. (செ-4)

## வடக்கில் இராணுவ...

பெற்றுக் கொண்டுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் நேற்று அவர் வலம்புரியிடம் தெரிவிக்கையில்,

ஈழத்தில் மிக மோசமான இனப் படுகொலை நடைபெற்ற மாதமாக மேமாதம் காணப்படுகின்றது. இந்த மாதத்தை தமிழ் மக்கள் அனைவரும் துக்க தினமாக அனுஷ்டித்து வருகின்ற னர். ஒவ்வொரு மே மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் படுகொலை வாரமாக அனுஷடிக்கபட்டு வருகின்றது. இந்த வாரத்தின் இறுதி நாளான பதினெட்டாம் திகதியை தமிழ் மக்கள் அனைவரும் கரி நாளாக அனுஷடிப்பதற்கு முன்வரல் வேண்டும்.

இந்த நிலையில் தமிழ் மக்களுடைய உணர்வுகளை சிதைபபதற்கும் சிங்கள தேசத்தின் ஆதிக்கத்தை தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் காட்டுவதறகுமே வெசாக் தினம் இராணுவத் தினரால் பெரும் எடுப்பில் கொணடாடப்பட்டு வருகின்றது. பௌத்தர்களே இல்லாத இடங்களில் பௌத்த கொடிகளை கட்டியும் விகாரைகளை நிர்மாணித்தும் பெரும் எடுப்பில் வெசாக் தினம் கொண்டாடப்படுவது எதற்காக? தமிழர் தாயகத்தில் சத்தமின்றி சிங்கள, பௌத்த மயமாக்கல் இரா ணுவ தரப்பால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழர் தேசம் கண்ணீரில் மூழ்கி இருக்கும் போது சிங்கள தேசம் வெசாக் பண்டிகையை தமிழர் தாயகத்தில் பெரும் எடுப்பில் கொண்டாடுவது தமிழ் மக்களுடைய மனங்களை காயப்படுத்தி ஆத்திரத்தை ஏற்படுத்தி வன்முறைக்குள் தள்ளும் நடவடிக்கையாக கருதுகின்றோம். ஆகவே கறுப்பு கொடிகளுக்கு பதிலாக சிங்கள தேசத்தின் கொடிகள் பறக்கவிடப்படு வதை கைவிட வேண்டும். இது தவிர துக்க நாளான பதினெட்டாம் திகதி அன்று ஜனாதிபதி முல்லைத் தீவு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தனது வருகையை உட னடியாக நிறுத்த வேண்டும். தமிழ் மக்களுடைய வறுமையையும் இழப்புக்களையும் பயன்படுத்தி இனப் படுகொலையை மூடி மறைக்கும் செயற்பாடாக தான் ஜனாதிபதியின் வருகையை பார்க்கின்றோம். அவரது வருகையை கடுமையாக கண்டிக்கின்றோம். மேலும் முள்ளி வாய்க கால் நினைவு தினம் என்ற பெயரில் விளையாட்டு நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகளை நடத்துவதை தவிர்க்க வேண்டும். மே பதினெட்டு தமிழர்களின் கரிநாள் என்பதை அனைவரும் மனதில் நிறுத்தி முள்ளி வாய்க்காலில் ஒன்று திரள்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## சொந்த மண்ணில்...

தள்ளப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீளக் குடியேறியும் தமக்கு நிரந்தரமான வாழ்விடம் இன்றி தெருவோரத்தில் அலைந்து திரிவதாகவும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு பூர்வீகக் கிராம மக்கள் தமது சொந்த நிலங்களை கையகப்படுத்தியுள்ள இராணுவத்தினர் அதனை விடுவித்து, தமது சொந்த நிலங்களில் வாழ அனுமதிக்க வேண்டுமெனக் கோரி நேற்றுடன் 70 நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் கேப்பாப்பிலவில் அமைந்துள்ள முல்லைத்தீவு இராணுவத் தலைமையக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக கூடாரம் அமைத்து, 41 மீனவக் குடும்பங்களும் 97 விவசாயக் குடும்பங்களும் தொடர்ச்சியான கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்தம்காரணமாகவாழ்வாதாரங்களைஅனைத்தையும் இழந்த போதிலும், கடந்த ஏழு வருடங்களாக பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் 70 நாட்களாக போராடி வரும் தாய்கள் பல நோய்த் தாக்கங்களுக்கு ஆளாகியிருப்பதாகவும் வீதியில் எத்தனை நாட்களுக்கு அவல வாழ்க்கை வாழ்வதென்றும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

தமது சொந்த நிலங்களை வளங்களை இராணுவத்தினர் அனுபவித்து வரும் நிலையில், தாம் வீதியில் வாழும் நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த மக்கள் தமக்கு தீர்வு கிடைக்கும் வரை, எந்த இடர்கள் வந்தாலும் சொந்த மண்ணில் கால் பதிக்கும்வரை வீதியில் இருந்து போராடுவோம் என்றும் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (செ-281)

## பொய்க்குற்றம்...

வைத்துள்ளார்கள் என தமிழீழ விடுதலை புலிகளின் பயிற்சி பெற்றனர் என்ற குற்றச்சாட்டு வழக்கின் எதிரிகள் யாழ் மேல் நீதிமன்றில் சாட்சியம் அளித்துள்ளனர்.

அத்துடன் தமக்கு எதிராக மன்றில் சாட்சியம் அளித்த பொலிஸ் அதிகாரிகளை தாம் ஒருபோதும் கண்டதும் இல்லை குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவும் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் கடந்த 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிளிநொச்சி பகுதியில் ஆயுதப்பயிற்சி பெற்றமை, ஆயுதங்களின் பாகங்கள் பிரித்து கட்டுதல், ரி56 ரக துப்பாக்கி சூட்டு பயிற்சி பெற்றமை, கைக்குண்டு வீசி எறியும் பயிற்சி பெற்றமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் 2 இளைஞர்கள் வெவ்வேறு தினங்களில் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிராக மேற்குறித்த குற்றங்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வந்தது.

குறித்த வழக்கின் விசாரணைகள் யாழ் மேல் நீதிமன்றில் நடைபெற்று வரும் நிலையில், உண்மை விளம்பல் விசாரணையை வழக்கு தொடுநர் தரப்பு முடிவுறுத்தியிருந்த நிலையில் எதிர்த்தரப்பு விசாரணைக்கு நேற்றைய தினம் மன்று உத்தரவிட்டிருந்தது.

அந்த வகையில் எதிரிகள் தரப்பு விசாரணையின் போது எதிரிகளில் ஒருவரான ஸ்ராட்லி கிருஸ்ணா ஆம்ஸ்ரோங் (வயது 36) சாட்சியமளிக்கையில்,

கடந்த 2013ஆம் ஆண்டு அழைப்பாணையின் பிரகாரம் 6ஆம் மாடிக்கு சென்ற போது என்னை கைது செய்தார்கள். 6ஆம் மாடி மற்றும் பூசா தடுப்புக்காவல் நிலையத்திலும் வைத்து விசாரணைகளை மேற்கொண்டார்கள்.

விசாரணை என பூசாவுக்கு அழைத்து சென்று நான் தடுத்துவைக்கப்பட்டிருந்த போது தான் எனது மனைவிக்கு இரட்டை குழந்தைகள் பிறந்திருந்தது. எனது முழு நினைவுகளும் மனைவி பிள்ளை மேல் தான் இருந்தது அவர்களை பார்க்க வேண்டும் என்ற அவா தான் எனக்குள் இருந்தது.

அரச சாட்சியாக மாறுங்கள் அல்லது ஆயுதங்களை வைத்திருந்ததாக வழக்கு போடுவோம் அதில் இருந்து உங்களால் தப்பிக்க முடியாது. குற்றத்தை ஒப்புக் கொண்டால் நீதவான் நீதிமன்றிலேயே பிணையில் செல்ல முடியும். அது தான் நீங்கள் வெளியில் செல்வதற்கு ஒரே ஒரு வழி என தெரிவித்தார்கள். அவர்கள் தப்பிப்பதற்காக என்மேல் ஆயுத வழக்கு போடுவர்கள் என கூறி அச்சுறுத்தினார்கள். அவர்கள் கையில் வைத்திருந்த கடிதத்தை பார்த்து அதன் படி வாக்கு மூலத்தினை எழுதச் சொன்னார்கள்.

எனது குழந்தைகளை பார்க்கவேண்டும் என்ற அவாவில் இருந்த போது என்னை அரச சாட்சியாக மாற்றுவதாக அவர்கள் கூறியதால் தான் நான் அவர்கள் கூறியதை எழுதிக் கொடுத்தேன். முதலில் குடும்ப விபரங்களை நான் எழுதினேன். பின்னர் அவர்கள் கூறியதை எழுதினேன். இவ்வாறு 20,-30 தடவைகள் வாக்குமூலம் எழுதியுள்ளேன் 75 தடவைகளுக்கு மேல் விசாரணை என்ற பெயரில் எனது கையொப்பத்தையும் இட்டுள்ளேன்.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் என எதையும் நான் எழுதிக்கொடுக்கவில்லை. எனக்கு எதிராக சாட்சி சொன்ன உதவிப்பொலிஸ் அத்தியட்சகருக்கும் நான் எதையும் எழுதிக்கொடுக்கவில்லை. சாதாரண பொலிஸாருக்கே விசாரணையின் போது அவர்கள் கூறியதை பல தடவை எழுதிக்கொடுத்துள்ளேன்.

எனக்கு எதிராக எனது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை மன்றில் சமர்ப்பித்து சாட்சியமளித்த உதவிப்பொலிஸ் அத்தியட்சகரை எனக்கு தெரியாது. அவரை நான் ஒருபோதும் கண்டதும் இல்லை. அரச தரப்பு என மேல் பொய் குற்றம் சுமத்தி தான் என்னை சிறையில் வைத்திருந்தார்கள். நான் வீட்டில் ஒரு பிள்ளை. அம்மாவின் கண்காணிப்பிலேயே இருந்தேன். விடுதலை புலிகள் இயக்கத்தில் இணையவில்லை.

வழக்கு தவணைகளின் போது நீதவான் நீதிமன்றுக்கு கூட்டிச்செல்வார்கள் நாம் நீதவான் கூட்டில் ஏறும் முன்பே எமக்கு திகதி இட்டுவிடுவார்கள், எம்மால் அங்கு எதையும் தெரிவிக்க முடியவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என சாட்சியமளித்தார்.

எதிரிகள் தரப்பு விசாரணையின் போது எதிரிகளில் மற்றொருவரான அத்திகே பிரசன்ன ஜெயலத்த சில்வா (வயது 38) சாட்சியமளிக்கையில்,

2013ஆம் ஆண்டு மீண்டும் விசாரணைக்காக அழைத்து 6 ஆம் மாடியில் வைத்து என்னை கைது செய்தார்கள். எனக்கு எதிராக மன்றில் சாட்சியம் அளித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு நான் எந்த வாக்கு மூலமும் வழங்கவில்லை. அவரை மன்றில் தான் முதன் முறையாக கண்டேன். 4,5 தடவைகள் சாதாரண அதிகாரிகளிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளேன்.

நான் 8ஆம் தரம் வரை தான் கல்வி கற்றேன். எழுதுவதும் வாசிப்பதும் கடினம். அவர்கள் தமது கைபட அறிக்கைகளை எழுதிக் கொண்டு வருவார்கள் கையெழுத்து போடச் சொல்வார்கள் நான் கையெழுத்து போடுவேன் உள்ளடக்கம் என்ன உள்ளது என தெரியாது என சாட்சியமளித்தார்.

இரு தரப்பு சட்டத்தரணிகளின் தொகுப்புரை இடம்பெற்றதனை தொடர்ந்து குறித்த வழக்கின் விளம்பல் விசாரணை தீர்ப்பை அறிவிப்பதற்கு எதிர்வரும் 16ஆம் திகதி திகதியிடப்பட்டு இருவரையும் அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார். (செ-9)

## முள்ளிக்குளம்...

முள்ளிக்குளம் மக்கள் தமது நிலத்தை விடுவிக்கக் கோரி கடந்த 38 தினங்களாக மேற்கொண்டு வந்த போராட்டத்தின் பலனாக கடந்த 29ஆம் திகதி காணிகள் கடற்படையினரினால் விடுவிக்கப்பட்டது. குறித்த கிராம மக்கள் மறுநாள் 30ஆம் திகதி தமது சொந்த மண்ணில் கால் பதித்தனர்.

பின்னர் காணி அடையாளம் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மக்கள் முள்ளிக்குளம் ஆலயம் சார்ந்த பகுதிகளில் தஞ்சமடைந்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை முள்ளிக்குளம் கிராமத்திற்குச் சென்ற முசலி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார் முள்ளிக்குளம் மக்களின் காணிகள் தொடர்பான ஆவணங்கள் பரிசோதிக்கப்பட வேண்டும் எனவும் நேற்று செவ்வாய்க் கிழமை காலை முள்ளிக்குளம் மக்கள் தமது காணி தொடர்பாக உள்ள அனைத்து ஆவணங்களையும் கொண்டு வந்து சமர்ப்பிக்குமாறு அறிவித்திருந்தார்.

அதற்கமைவாக நேற்று செவ்வாய்க் கிழமை காலை முள்ளிக்குளம் ஆலயத்தில் முசலி பிரதேச செயலாளர் தலைமையில் முசலி பிரதேச செயலக காணி கிளை அதிகாரிகள் இணைந்து முள்ளிக்குளம் மக்களின் காணிகளை அடையாளப்படுத்தப்படும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதோடு பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படையினரினால் முதற்கட்டமாக 100 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ள போதும் அதில் 77 ஏக்கர் காணிகளே முசலி பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முசலி பிரதேச செயலாளர் தெரிவித்தார். மேலும் 23 ஏக்கர் காணியை விடுவிக்க 8 மாத கால அவகாசம் கோரியுள்ளதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

குறித்த 23 ஏக்கர் காணியிலே கடற் படையினரின் குடும்பங்கள் 27 வீடுகளில் வசித்து வருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

எனினும் குறித்த 77 ஏக்கர் காணியும் ஒரு வார காலத்தினுள் நில அளவை செய்யப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்படும் என பிரதேச செயலாளர் தெரிவித்தார். எனினும் தமது சொந்த மண்ணில் காலடி எடுத்து வைத்து சுமார் 10 நாட்களாகின்ற போதும் சுதந்திரமற்ற முறையில் தாம் வாழ்ந்து வருவதாகவும், உடனடியாக தமது காணிகள் அடையாளம் காணப்பட்டு காணிகளை துப்புரவு செய்ய அனுமதியை வழங்குமாறு முள்ளிக்குளம் மக்கள் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பதிவு நடவடிக்கையின் போது முள்ளிக்குளம் பங்குத் தந்தை அருட்தந்தை அன்ரன் தவராசா, மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் செயலாளர் ஜே.ஜே.கெனடி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## ஜனாதிபதிக்கு...

இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதை குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

தற்போது ஜாதகத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு நல்ல காலம் பிறந்துள்ளது. கொழும்பு, காலி மற்றும் கண்டி என அனைத்து இடங்களிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்காக கூடிய கூட்டமே இதை உணர்த்தியிருக்கும் என குறிப்பிட்டார்.

முதல் தடவை மேதினக்கூட்டம் நடத்தும் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புகைப்படங்கள் இருக்கவில்லை.

இரண்டாம் தடவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புகைப்படங்கள் குறைந்த அளவிலேயே காணப்பட்டது. அவருடைய பெயரை யாரும் உச்சரிக்கவில்லை. ஆனால் தற்போது, மூன்றாவது முறையாக முன்னெடுக்கப்பட்ட மேதினக்கூட்டத்தில் எல்லா இடத்திலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புகைப்படங்கள், அனைவரும் உச்சரித்தது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்ற நாமமே என அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீது அக்கறையுள்ள, 2020இல் ஆட்சி அமைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் எம்முடன் இணைவார்கள் எமது கட்சியை ஒரு நாளும் வீழ்த்த முடியாது எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (செ)

## நடத்துநர் மீது...

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தாக்குதலுக்கு இலக்கான நடத்துநர் சிகிச்சைக்காக வவுனியா செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பேருந்து நிலையத்திலிருந்து பூவரசங்குளம் ஊடாக செட்டிகுளம் செல்லும் இ.போ.ச. பேருந்தில் குளுமாட்டுச்சந்தியி[illegible] ஏறிய நான்கு பேரைக் கொண்ட குழுவினர், சண்முகபுரம் பகுதியில் இறங்கும்போது நடத்துநரை தகாத வார்த்தைகளால் பேசிய தோடு நடத்துநர் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இது குறித்து செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டதுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-11)


STUDY IN EUROPE



Why Study In Europe?
* ஆக்குறைந்த தகைமை GCE(A/L)
* ஆங்கில மொழி மூல பாடநெறி
* IELTS தேவையில்லை.
* வயது எல்லை கிடையாது.
* 100% விசா உத்தரவாதம்.
* மிகக்குறைந்த பாடநெறி கட்டணம்.
* பகுதிநேர வேலைவாய்ப்பு.

Admission open for Sep-2017

***** Limited Seats Available *****

(C-8526)

iCS DREAM BEYOND BOARDERS Foreign Education Services
Admisson:076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06

7ம் அணி அனுமதிகள் முற்றுப்பெற்றன
8ம் அணியில் இணைய முந்துங்கள்!
O/L உடன் மாதம்
25,000/- சம்பாதிக்க!
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 8ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் — மே 15 திங்கள் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
(சி-8524)
175,முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி).யாழ்ப்பாணம்.

பணிப்பெண் தேவை
சுன்னாகத்தில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 021 224 0357
(8966)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
(சி-8522)
CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062
follow us : cnrworldwideexpress

வேலைவாய்ப்பு
நீங்கள் management துறையில் ஆர்வம் கொண்டவரா? தனியாக ஒரு அலுவலகத்தை கொண்டு நடத்தும் திறமை படைத்தவரா? அப்படியானால் உங்களுக்கான ஒரு புதிய சந்தர்ப்பம். வடக்கில் ஆரம்பிக்கவுள்ள எமது புதிய கிளைகளுக்கு Administration, Supervisors, Team Leaders, Distributors ஆகிய பதவிகளுக்காக துடிப்பான ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.
* அடிப்படைத் தகைமைகள் O/L, A/L
* 6, 8 மாதகால பதவி உயர்வு அனுபவப்பயிற்சி வழங்கப்படும் அதன் மூலம் அடிப்படையாக 12 000 - 14 000/= பெறலாம்.
* வயதெல்லை 18 - 35.
* தங்குமிட வசதிகள் உண்டு.
தொடர்புகள் :- 0772302795, 0766781042
(8981)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-8497)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.